The Journal of
THE THANJAVUR MAHARAJA SERFOJI'S

# SARASVATI MAHAL LIBRARY



2007 Vol. LI Rs. 50.00

The Journal of

# THE THANJAVUR MAHARAJA SERFOJI'S SARASVATI MAHAL LIBRARY


## Vol. LI

*Published by*



**C. VIJAYARAJ KUMAR,** I. A. S.,
District Collector and Director,
Sarasvati Mahal Library, Thanjavur.



## THE SARASVATI MAHAL LIBRARY

THANJAVUR - 613 009

ANNUAL SUBSCRIPTION Rs. 50-00

**A. D. 2007.**

The Journal of

# The Thanjavur Maharaja Serfoji's

# SARASVATI MAHAL LIBRARY

Vol. LI A. D. 2007 Saka 1929 No. 1 - 4

## முகவுரை

நம் நூலகத்திலிருந்து வெளிவரும் இப்பருவ இதழ் தொகுதி 51-ஐ இலக்கிய மணம் கமழ வெளியிடுவதில் பெருமகிழ்ச்சியடைகிறேன்.

இவ்விதழில் இந்நூலகம் பற்றிய பல்வேறு செய்திகள் வெளியிடப்பட்டுள்ளன. தற்பொழுது தேசிய சுவடிகள் பாதுகாப்பு இயக்கம், நாட்டில் உள்ள சுவடிகள் பற்றிய கணக்கெடுப்பு நடத்திவருகிறது. தேசிய சுவடிகள் பாதுகாப்பு இயக்கம், தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் மற்றும் தஞ்சை தமிழ்ப் பல்கலைக்கழகம் ஆகியவை இணைந்து நடத்திய சுவடிகள் சேகரிப்பு மற்றும் பாதுகாப்புப் பற்றிய கருத்தரங்க உரை இடம்பெற்றிருப்பது ஒரு சிறப்பு. இதேபோன்று சுவடிகளின் வரலாறும் பாதுகாப்பும் என்ற தலைப்பில் கட்டுரை இடம்பெற்றிருப்பது மற்றொரு சிறப்பு.

இந்நூலகத்தில் உள்ள தாவரவியல் பற்றிய ஓவியங்கள் மற்றும் புத்தகங்கள் பற்றிய குறிப்பும் மற்றும் நூலக பருவவெளியீடு பற்றிய குறிப்பும் இடம் பெற்றுள்ளன. இந்நூலக நிருவாக அலுவலர் என்ற முறையில் திருச்சிராப்பள்ளி அகில இந்திய வானொலியில் நிருவாக அலுவலர் ஆற்றிய உரையில் புத்துலகச் சிந்தனைகள் பலவற்றை சிறப்பாகத் தெரிவித்துள்ளார்.

பொதுப் பொருண்மையாக, நீதி சாத்திரம், சிவதத்துவ சுதாநிதி போன்றவை இடம்பெற்றுள்ளன. இப்பருவ வெளியீடு இலக்கிய ஆர்வலர்களுக்கு சிறந்த விருந்தாக அமையும் என நம்புகிறேன்.

இவ்விதழ் நன்முறையில் வெளிவர ஆவன செய்த நூலக நிருவாக அலுவலர் மற்றும் வெளியீட்டு மேலாளர் (பொறுப்பு) திரு. சாமி. சிவஞானம், மொழித்துறை பண்டிதர்கள் , கணினி அச்சுப்பிரிவுப் பணியாளர்கள் ஆகிய அனைவருக்கும் என் பாராட்டுக்கள். இவ்விதழினை அறிஞர்களும், ஆய்வாளர்களும், ஆர்வலர்களும் படித்துப் பயன்பெற வேண்டுகிறேன்.

**சா. விஜயராஜ் குமார்,** இ. ஆ. ப.,
மாவட்ட ஆட்சித்தலைவர் மற்றும்
இயக்குநர்,
சரசுவதி மகால் நூலகம்.

தஞ்சாவூர்
6 -6- 2007

# பொருளடக்கம்

பக்கம்

**சுவடிகள் சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு** *1 - 12*
*திரு. சாமி. சிவஞானம்,*
*நிருவாக அலுவலர்*

**புத்துலகச் சிந்தனைகள்** *1 - 10*
*திரு. சாமி. சிவஞானம்,*
*நிருவாக அலுவலர்*

**A Note on the Botanical Paintings and Books in the Sarasvati Mahal Library** *1 - 7*
Dr. P. Perumal,
Conservator and Librarian Gr. I

**An evolution of Sarasvati Mahal Library Journal** *1 - 4*
Thirumathi K. Ramathilagam,
Librarian

**நீதி சாஸ்திரம்** *1 - 66*
*திரு. எஸ். சுதர்ஷன்,*
*நூலகர் நிலை II*

**சிவதத்துவ சுதாநிதி** *1 - 5*
*திருமதி. எஸ். இராஜலக்ஷ்மி*
*சமஸ்கிருத பண்டிதர்*

**தாளபத்ரேதிஹாஸ: தத்ஸம்ரக்ஷணம்** *1 - 8*
*முனைவர். ஆ. வீரராகவன்*
*சமஸ்கிருத பண்டிதர்*

# சுவடிகள் சேகரிப்பு மற்றும் பாதுகாப்பு

**06 - 02 - 2006 அன்று தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழக வளாகத்தில் தேசியச் சுவடிகள் பாதுகாப்பு இயக்கம், தஞ்சாவூர் சரசுவதி மகால் நூலகம் மற்றும் தஞ்சாவூர் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகியவை இணைந்து நடத்திய இருநாள் சுவடியியல் கருத்தரங்கில் ஆற்றிய உரை**

....

**சாமி. சிவஞானம்,** எம்.ஏ.,
*நிருவாக அலுவலர்,*
**சரசுவதி மகால் நூலகம்**
*தஞ்சாவூர்.*

*சான்றோர்களே! அறிஞர் பெருமக்களே!!*

இக்கருத்தரங்கில் நம் அரிய கருவூலமான சுவடிகள் பற்றிய விழிப்புணர்வு, சேகரிப்பு, பாதுகாப்பு மற்றும் பயிற்றுவித்தல் போன்ற அறிவு அகழ்வு மற்றும் ஆய்வுகள் மேற்கொள்ளப்படவுள்ளன. பல அறிஞர் பெருமக்கள் உரையாற்றி தம் கருத்துக்களை அள்ளித் தரவும், பெறவும் உள்ளனர்.

" நவில் தொறும் நூல் நயம் போற்றுவது " நம் நாடு

பத்துப்பாட்டில் முத்துப்பாட்டாய் முதலில் திகழும் திருமுருகாற்றுப் படையில் "திருவாவினன்குடி" பகுதியில் முனிவர்கள் இயல்பு கூறும் நக்கீரர்

*........................................யாவதும்*
*கற்றோர் அறியா அறிவினர், கற்றோர்க்குத்*
*தாம் வரம்பு ஆகிய தலைமையர்........"*

என்று கூறுகிறார். அதாவது இம்முனிவர்கள் முற்றும் அறிந்தவர்கள், அறியமுடியாதபடியுள்ள அறிவினை உடையவர்கள், கற்றோர்க்குத் தாமே எல்லையாகிய தலைமையை உடையவர்கள் என்பதாகும். ஆக, முற்றும் துறந்த

முனிவராயினும் கற்பன கற்கவேண்டும். நிறைமதி பெற்றவர்களாக இருக்கவேண்டும். கற்றோர்க்கு இவரே எல்லை எனக்கூறுமளவிற்குத் தெளிந்த அறிவும் சிறந்த சிந்தையும் பெற்றவர்களாக இருக்க வேண்டும் என்பது பெறப்படுகிறது. இதேபோன்று புறநானூற்றில் பாண்டியன் ஆரியப்படை கடந்த நெடுஞ்செழியன் கல்வியறிவு உடைய ஒருவனையே தாயும், குலமும், அரசும், நாடும் போற்றிப் பாராட்டும் என்பதால்,

"உற்றுழி உதவியும் உறுபொருள் கொடுத்தும்
பிற்றைநிலை முனியாது கற்றல் நன்றே"

என்று கல்விச் சிறப்பின் உயர்வை எடுத்துக் கூறுகிறார். வள்ளுவப் பேராசான் கல்வி, கல்லாமை, கேள்வி, அறிவுடைமை ஆகியவற்றை அடுத்தடுத்த அதிகாரங்களாக வைத்துள்ளமை நோக்கற்பாலது.

கருணை உள்ளம் கொண்ட நம் முன்னோர்கள் சமூக அறம், தனிப்பட்டவர் கடைப்பிடிக்க வேண்டிய அறம் ஆகியவற்றைப் பின்வரும் தம் சந்ததியினருக்குப் பயன் படும் வகையில் நூல்களாகவும், இலக்கியங்களாகவும், இலக்கணங்களாகவும், காவியங்களாகவும், ஓவியங்களாகவும், சிற்பங்களாகவும் வடித்து வார்த்துவிட்டுச் சென்றுள்ளனர். தம் உணர்வுகளையும் எண்ணங்களையும், கருத்துக்களையும் செவிவழிச் செய்திகளாகவும், எழுத்துவழியாகவும் வெளியிட்டுள்ளனர். இவை குகைகள், கல்வெட்டுக்களில் எழுதப்பட்டவை என்பதால் அழியாச் சிறப்புப் பெற்றிருந்தாலும் அவற்றை எடுத்துச் செல்வது இயலாமையாயின் ஓலை, காகிதம், மரப்பட்டை, துணி, தோல் ஆகியவற்றில் எழுதும் வழக்கையும் மேற்கொண்டனர். குறிப்பாகப் பனை ஓலைகளில் எழுதும் வழக்கு மிகச் சிறப்பாகக் கருதப்பட்டது. சுவடு என்ற சொல் அடையாளம் என்ற பொருளில் ஒலிகளின் அடையாளமாகிய எழுத்துக்களைக் கொண்டவை - ஒலிச்சுவடுகளைக் கொண்டவை என்பதாகும்.

பனை ஓலைகளில் எழுத்தாணி கொண்டு கீறி எழுதுவது, எழுதுவதற்கும் கையாளுவதற்கும் எளிதாக இருந்ததாலும், பதப்படுத்தி காத்துவந்தால் நீண்ட காலம் நிலைத்து நிற்கும் நீரதாய் இருந்ததாலும், பனை ஓலைகளில் எழுதும் முறையே மிகவும் கையாளப்பட்டு வந்தது.

இத்தகைய சுவடிகளில்தான் நம் முன்னோர்கள் இலக்கியங்களையும், இலக்கணங்களையும், காப்பியங்களையும் எழுதி நமக்கு விட்டுச் சென்றுள்ளனர். இலக்கியங்கள் மனிதர்களுக்குப் பயன்படும் வகையில் கடவுளே ஏடுகளை எழுதிய புராண வரலாறுகள் நம்மிடையே மிக உண்டு.

பாரதத்தை வியாசர் கூறிக்கொண்டே செல்ல ஞானத்தலைவனாகவும், இடர் களைபவனாகவும் விளங்கும் விக்னேசுவரனே மேருமலையில் எழுத்தாணி கொண்டு எழுதியதாகப் புராணங்கள் விரித்துக்கூறும். இவ்வாறு பாரதத்தை மேருமலை ஏட்டில் கணபதி எழுதி வரும்போது எழுத்தாணி நழுவி கீழே விழுந்துவிடுகிறது.

அதைப் பொருட்படுத்தாத விநாயகப்பெருமான் தன் இரு கொம்புகளில் வலது கொம்பை ஒடித்து பாரதத்தை தொடர்ந்து எழுதினார் என்றும் கூறப்படுகிறது. இதனால் விநாயகப்பெருமான் ஒற்றைக் கொம்பன் எனவும் அழைக்கப்படுகிறான். (காப்பு - கணபதி துதி.)

அடுத்து, ஒரு நிகழ்வைக் குறிப்பிடலாம். மணிவாசகப் பெருமான் தில்லையில் சிவத்தொண்டு புரிந்தகாலை ஒருநாள் தில்லைச் சிற்றம்பலவன் வேதியர் வடிவுகொண்டு மணிவாசகர் முன் வந்து நின்றார். மணிவாசகர் அவரது வருகை குறித்து வினவ அவ்வேதியர், "பெரியீர், சிவபெருமானது மெய்ப்பொருள் விளங்க நீவீர் இதுகாறும் அருளிய திருப்பாடல்கள் அனைத்தையும் ஓத விரும்பி இவண் போந்தேன். அப்பாடல்களை யாம் எழுதிக் கொள்ளும்படி விளங்கச் சொல்வீராக" என வேண்டுகிறார். மணிவாசகப் பெருமான் தாம் பாடிய தேன்தமிழ்ச் செழும்பொருட் பாடல்களை நிரல்படக் கூறுகிறார். வேதியராக வந்த சிவபெருமானும் அப்பாடல்கள் முழுவதையும் ஒன்று விடாமல் எழுதிக் கொள்கின்றார்.

மீண்டும் அடிகளை நோக்கி, தில்லைச் சிற்றம்பலவரைப் பாட்டுடைத் தலைவனாகக் கொண்டு அகப்பொருள் கோவை பாடுவீர் என வேண்டுகிறார். அடிகளும் அவ்வாறே கோவை பாடுகிறார். அதையும் வேதியர் எழுதிக்கொள்கிறார். பின், எழுதிய இந்நூலைக் கட்டிக்கொண்டு மறைகின்றார். அடிகள் அந்தணராய் வந்தது அந்த இறைவனே எனத் தெளிகிறார்.

தில்லை சிற்றம்பலவன் திருவாயிற்படியில் வைக்கப்பட்டிருந்த அத்திருமுறை ஏட்டினை தில்லைவாழ் அந்தணர்கள் அவிழ்த்துப் பார்த்தபோது அதில் திருவாசகமும், திருச்சிற்றம்பலக்கோவையும் எழுதப்பெற்று முடிவில் "திருவாதவூரன் சொல்ல அழகிய சிற்றம்பலமுடையான் எழுதியது" எனக் கைச்சாத்திட்டிருப்பது கண்டு அனைவரும் இது இறைத் திருவருள் எனக்கூறி வியந்து போற்றுகின்றனர்.

காஞ்சியில் கந்தபுராணம் இயற்றிய கச்சியப்பர், அப்புராணம்

பாடத்தொடங்கித் தினந்தோறும் நூறு செய்யுட்கள் பாடி, அவை எழுதிய ஏட்டையும் எழுத்தாணியையும் அர்த்த சாமபூசை முடித்த பின்னர் முருகப்பெருமான் திருவடிக்கீழ் வைத்துத் திருக்காப்பிட்டுச் செல்வர். பின்னாளுதயத்தில் பூசை வழிபாட்டிற்குப்பின் திருக்கோயிலுக்குச் சென்று ஏட்டை எடுத்து நோக்கும்போது அதில் சிற்சில திருத்தங்கள் மேற்கொள்ளப்பட்டிருந்தன என்பதை அறிந்து மகிழ்ந்தார். பின்னர் அரங்கேற்றத்தின்போது, "திகடச் சக்கரச் செம்முகம் ஐந்துளான்" என்ற விநாயகர் காப்புப் பாயிரச் செய்யுட்களுடன் தொடங்கினார். அவையிலிருந்த ஒரு புலவர் திகழ் தசம் என்பது திகடசம் எனப் புணர்வதற்கு விதி தொல்காப்பியம் முதலிய நூல்களுல் ஒன்றிலேயும் இல்லையே எனக்கூறி மேலே அரங்கேற்ற விடாமல் தடுத்தார். அடுத்தநாள் முருகனே சோழ தேசப் புலவன் வடிவில் வீரசோழியம் எனும் இலக்கண நூலைக் கொண்டுவந்து காட்டி சந்திப்படலத்தில் புணர்ச்சி விதி இருப்பதை மெய்ப்பித்து மறைந்தார். இது முருகனே முன்னின்று நடத்திய செயல் என அவையினர் உணர்ந்தனர். இவ்வரலாறுகள் புராணச் செய்திகளேயாயினும் இலக்கியங்கள் எவ்வாறு இயற்றப்பட வேண்டும், அவை கட்டிக்காக்கப்பட வேண்டும் என்பதை எடுத்துக் காட்டவே இங்கு இவை சுட்டப்படுகின்றன. இந்த இலக்கிய மரபு நம் முன்னோர்களால் வாழையடி வாழையாய் கட்டிக்காக்கப்பட்டு வருகிறது.

ஒரு நல்ல நூல் என்பது என்ன?

மில்டன் (Milton) எனும் ஆங்கிலக் காப்பியவாணர் கூறுகிறார் - "ஒரு நல்ல நூல் என்பது சீரிய சிந்தனையாளரால் படைக்கப்பட்டு கட்டிக்காக்கப்பட்ட கருத்துக் கருவூலம். அதன் நோக்கும் பயனும் ஊழிதோறும் நின்று உதவுவது".

( "A good book is a life blood of a master spirit embalmed and treasured upon a purpose to life beyond life" - Milton)

சீரிய சிந்தை கொண்ட நம் முன்னோர்கள் விட்டுச் சென்ற பொருண்மைச் சிறப்பு ஆற்றொழுக்கு வற்றாத ஜீவநதியாய்ப் பாய்ந்து கொண்டிருக்கவேண்டும். "கம்பன் கவியெனக் கிடந்த கோதாவரி" எனப் போற்றுவார்.

இதற்கு நாம் ஒல்லும் முயற்சிகள் அனைத்தையும் மேற்கொள்ளவேண்டும். வழக்குகளில் சுவடிகள் எவ்வாறு சிறந்த ஆவணமாகப் பயன்பட்டது என்பதை எடுத்துக்காட்ட சேக்கிழார் பெருமான் பெரிய புராணத்தில் பாடும் "தடுத்தாட்கொண்ட புராணமே" தக்க சான்று பகரும். சேக்கிழார் குலோத்துங்கச்சோழர் மன்னர் அவையில் முதலமைச்சராகப் பணியாற்றியவர்.

அவர் அநபாயச் சோழன் வேண்டுகோளுக்கிணங்க இயற்றிய திருத்தொண்டர் புராணத்தில் "தடுத்தாட்கொண்ட புராணம்" ஒரு வழக்கிற்கு ஆவணம் எவ்வாறு பயன்படுகிறது, அதை எவ்வாறு பாதுகாக்க வேண்டும் என்பன போன்ற ஆவணப் பாதுகாப்பு முறைகளை மிகத்தெளி வாக எடுத்துக் கூறுகிறார். சிவபெருமானிடம் சுந்தரர் இப்பூவுலகில் தான் இயற்றப்போகும் செயல்களுக்கு வேறாய் இதர செயல்களைச் செய்ய முற்படும்போது தடுத்து ஆட்கொள்ள வேண்டும் என வேண்டினார். சுந்தரர் திருநாவலூரில் பரவையார் தவிர்த்த வேறொரு பெண்ணை மணக்க திருமண ஏற்பாடுகள் நடந்து கொண்டிருந்தன. இறைவனிடம் சுந்தரர் வேண்டிக்கொண்டதற்கிணங்க இத்திருமணத்தைத் தடுத்து சுந்தரரை ஆட்கொள்ள வேண்டும். இந்நிகழ்ச்சியை வருணிக்கும் சேக்கிழார் பெருமான், சுந்தரர் அவதரித்த திருமுனைப்பாடி நாட்டை கூறும்போது, "அங்கணரோலை காட்டி யாண்டவர்தமக்கு நாடு" என்று முதற்பாடலிலேயே குறிப்பிடுகிறார். அதாவது சிவபெருமானால் ஆளோலைக்காட்டி வலிய ஆட்கொள்ளப் பெற்றவராகிய ஆலாலசுந்தரர்க்கு (பின்னால் சுந்தரர்) அவதரிக்க உரியநாடு என்கிறார். சுந்தரர் திருமணத்தை மணமகன் வீட்டார் மணமகள் வீட்டாருக்கு

"கொற்றவர்திருவுக் கேற்பக்
குறித்த நாலோலை விட்டார்"

என்கிறார். இங்கு நாளோலை என்பது மண ஓலையைக் குறிக்கிறது.

மணவினைகள் மணமகள் ஊரான புத்தூரில் நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன. முன்பே அருளியவாறு, சிவபெருமான், வழிதடுத்து அடிமை கொள்வான் வேண்டி அழகு மூத்த வடிவு கொண்டு சிவபெருமான் மணப்பந்தரில் தோன்றி, யாவரும் யான் சொல்லப்போகிற இந்த மொழிகளைக் கேளுங்கள் என்று கூறி பேரழகு மூத்த வேதியர் வடிவில் வந்த பிஞ்ஞகன் நாவலூர் நம்பியான சுந்தரரைப்பார்த்து, "எனக்கும் உனக்கும் உள்ள பெரு வழக்கினை முடித்து பின் மணவிருப்பினை நிறைவேற்றிக்கொள்" என்று கூறுகிறார். இதற்கு நம்பி இப்பொருள் பற்றிய தீர்வு கூறும்வரை யான் மணம் செய்ய மாட்டேன் என்று கூறி தனது இசைவைத் தெரிவிக்கிறார். சிரிக்கிறார், மூத்தவேதியராகிய சிவபெருமான். "அக்கால முன் தந்தைதந் தையாளோலையீதால்" (அந்நாளிலே உனது தந்தையின் தந்தை எழுதிக்கொடுத்த ஆள் ஓலை இதோ உள்ளது) என்றார். சுந்தரர் "ஓலைகாட்டு" என்றார். முதுவேதியர், "நீ ஓலை பார்த்தறியத் தகுதியுள்ளவனா?" என்கிறார். சுந்தரர் ஆவணமாகிய ஓலையைப் பறிக்க ஓடுகிறார். ஓலையை வாங்கி கீறியிட்டார் (கிழித்து எறிந்தார்). அவையோரிடம் முதியவர் இவன் ஆவணம் வலிய வாங்கி கிழித்ததனால் தான் அடிமை என்ற உண்மையை உறுதிப்படுத்திவிட்டான் என்று கூறுகிறார். நம்பிகள்

இவர் வழக்கிடுதலே தொழிலாகக் கொண்ட பழைய மன்றாடி போலும் என்றார். வழக்கு திருவெண்ணெய்நல்லூரிலுள்ள தூய வேதியர்கள் முன் எடுத்துச் செல்ல தீர்மானிக்கப்படுகிறது. புனித மறையோனான இறைவன், "ஆதியின் மூல ஓலை காட்டி நீ அடிமை ஆதல் சாதிப்பன்" என்கிறார். அங்கு மூதறிவினர்கள் முன் முதியவர் எனது விருப்பமுடைய அடிமை என்பதற்குச் சான்று காட்டிய ஓலையைக் கிழித்துவிட்டுப் பெரிய அறிவுடையீராகிய உங்கள் முன் போந்துள்ளான் என்றார். ("காதலென்னடியா னென்னக் காட்டிய ஓலை கீறி மூதறிவீர் முன் போந்தான்")

முதியவர் இசைவின் மூலமாக வந்த சான்றாகிய இவன் கிழித்த ஓலை இவன் தந்தை தன் தந்தை ஒப்புக்கொண்டு எழுதிக்கொடுத்தது என்றார்.

("வந்தவாறிசைவே யன்றோ வழக்கிவன் கிழித்த ஓலை
தந்தைதன் தந்தை நேர்ந்த தென்றனன் தனியாய் நின்றான்")

"ஊர்ப்பெரியவர்கள் நம்பியை நோக்கி இசைவுப்படி இவர் காட்டிய ஓலையை கிழித்தல் உமக்கு வெற்றிதரும் செயலா" என்றனர்.

("இசைவினால் எழுது ஓலை காட்டினான் ஆகி நின்று
விசையினால் வலிய வாங்கிக் கிழிப்பது வெற்றியாமோ?")

பின் நம்பி ஆரூரர் அவையோரிடம் இவ்வழக்கு என் மனத்திற்கெட்டாத மாயை யாவுள்ளது. எனக்கு இன்னப்படி எனத் தெளிந்து அறிந்து சொல்லக்கூடவில்லை என்றார். அவையோர் கிழ அந்தணரிடம் இவ்வழக்கை தங்கள் முன் நிரூபிக்க வேண்டும் என்றனர்.

("வெவ்வுரை எம்முன்பு ஏற்ற வேண்டும்")

அவையோர் அவ்வாறு மெய்ப்பிக்க வேண்டுமானால் அதற்கு ஆட்சி - ஆவணம் - அயலார்களது காட்சி என்ற மூன்று வகைச் சான்றுகளில் ஒன்று காட்ட வேண்டும் என்று கூறினார்.

("ஆட்சியில் ஆவணத்தில் அன்றி மற்றயலார் தங்கள்
காட்சியின் மூன்றிலொன்று காட்டுவா")என

கிழவேதியர் நம்பி ஆரூரன் மணப்பந்தரில் கோபத்தால் கிழித்தது படியோலை. மூலவோலையை நீதிச்சபை முன் காட்ட சேமமாய் வைத்துள்ளேன் என்றார்.

("மூட்சியிற் கிழித்த வோலை படியோலை, மூலவோலை
மாட்சியிற் காட்ட வைத்தேன்" என்றனன் மாயை வல்லான்")

அவையோர் மூல ஓலையான சாட்சி ஓலைக்குத் தீங்கிழைக்க விடமாட்டோம் என உறுதி கூறினார். வேதியர் கையில் எடுத்து நீட்டிய ஓலையை அவையோர் ஏவ, அருள்பெறு கரணத்தான் அவ்வாவணத்தை உரியவாறு தொழுது வாங்கி அதனை வைத்துச் சுருட்டியிருந்த உறையை நீக்கி சுருள் ஓலையை விரித்து முதலில் அதன் பழைமையைப் பரிசோதித்து அறிந்துபின் படித்து சொல்வானாயினன்.

( "......................
அருள்பெறு காரணத்தானும் ஆவணம் தொழுது வாங்கி
சுருள்பெறு மடியை நீக்கி விரித்ததன் தொன்மை நோக்கி")

அந்த ஓலையில் கண்ட வாசகத்தில் மறையோர் வாழும் திருநாவலூரிலே ஆதிசைவ மரபிலே ஆரூரன் என்ற நான் இதன் மூலம் யாவருமறிய எழுதி வைக்கும் செய்தியாவது - பெருமுனிவராய்த் திருவெண்ணெய் நல்லூரிலே உள்ள பித்தனுக்கு நானும் என் வழி மரபிலே வருபவர்களும் வழி வழியாய்த் தொண்டு செய்து வருவோம் என்பதற்காக உடன்பட்டு இந்த ஓலையை மனமும் செய்கையும் இசைந்து எழுதிக் கொடுத்தேன். இதற்கு இவை என் கையெழுத்து என்றிருந்தது. அவையோர், எழுதிக் கொடுத்தவரது கையெழுத்து, பின் சாட்சியிட்டவர்களது கையெழுத்துக்களைப் பார்த்து அவை சரியாயிருப்பக் கண்டனர். பின்பு நம்பி ஆரூரரிடம் அவ்வோலையில் காணப்பெறும் எழுத்துக்கள் அவரது பாட்டனாருடைய உண்மையான எழுத்தா என்பதை சோதித்துத் தெளியுமாறு கூறினார். கிழவேதியர் நம்பியின் பாட்டன் எழுதிய வேறு கைசாத்துக் கிடைக்குமானால் அதை வரவழைத்து ஒத்துப் பார்க்குமாறு கூறினார். அவையோர் ஊர்ப்பொது மன்றத்தில் சேமித்துப் பாதுகாவலில் வைக்கப்பட்டிருந்த இடத்திலிருந்து நம்பியாரூரர் பாட்டனார் தாமே எழுதிய வேறு ஓலையை வரவழைத்து அதன் எழுத்தை வேதியர் காட்டிய ஓலையின் எழுத்துடன் ஒத்துப் பார்த்து இரண்டு எழுத்துக்களும் ஒன்றே எனக் கூறினர்.

("அரண்தரு காப்பில் வேறு ஒன்று அழைத்து உடன் ஒப்பு நோக்கி) பின் அவையோர் வழக்குத் தொடர்ந்த வேதியரிடம் நம்பி ஆரூரர் தோற்றுவிட்டதாகத் தீர்ப்பு வழங்கினர். இங்கு சற்றேறக்குறைய இருபத்தொரு இடங்களில் ஓலை என்ற சொல்லும் எட்டு இடங்களில் ஆவணம் என்ற சொல்லும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இங்கு இந்நிகழ்வைச் சுட்டுதற்குக் காரணம் ஒரு சுவடி எப்படியெல்லாம் ஆவணமாகப் பயன்படுகிறது. எப்படி அவற்றை மதிக்க வேண்டும். எப்படி அவற்றை பாதுகாக்க வேண்டும் என்பதைச்சுட்டிக் காட்டவேயாகும்.

அண்மைகால அறிஞர்கள் சுவடிகளைப் பெறுதல் பாதுகாத்தல் குறித்துக் கூறும் கருத்துக்களைச் சிறிது காண்போம். தமிழ்த் தாத்தா உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் இப்புலத்தில் எடுத்துக் கொண்ட முயல்வுகள். அநுபவித்தத் துன்பங்கள் சில அவமதிப்புகள் பற்றிய உண்மைகளை "**என் சரித்திரம்**" எனும் நூலில் கூறுவதைத் தமிழ் கூறும் உலகு நன்கறியும்.

டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அவர்கள் சீவக சிந்தாமணி நூலை 1887ல் பதிப்பித்தார். இந்நூலைப் பதிப்பிக்குமுன் அவர் ஏற்ற இன்னல்கள், அவமதிப்புகள் எண்ணற்றவை. சிந்தாமணிச் சுவடிகள் பலவற்றை அரிதின் முயன்று பெற்றார். இருப்பினும் இன்னும் சில சுவடிகள் இருக்கலாமோ என எண்ணி அவரது தேடல் முயற்சியைத் தொடர்ந்தார். சிந்தாமணிக்கு வாய்மொழி உரை குணபாலன் என்பவரிடம் இருப்பதை அறிந்தார். அதில் சமண சமயச் சார்புக் குறியீடுகளும் கொள்கைகளும் கலக்கப் பெற்றுள்ளன எனவும் அறிந்தார். "வீரன் தாள் நிழல் - சமண சரவணம்" என்பது பெரிய சைனாலயம் என்பதை அறிந்தவர். குணபாலன் வீட்டிற்குச் சென்று சமண சரவணம் பற்றிக் கேட்டார். குணபாலன் தம் வீட்டிலிருந்த சமண சரவணம் குறிக்கும் படம் ஒன்றைக் காட்டிவிட்டு ஐயரவர்கள் கேட்ட சமணக் குறியீடுகள் பற்றிய ஐயங்களுக்கு தன்னால் முடிந்தவரை பதிலிறுத்தார். பின் தன்னால் தீர்க்கவியலா ஐயங்களைத் தம் மனைவியிடம் கேட்டு பதில் பெற்றுத்தந்தார். அப்பொழுது அந்த அம்மையார் சாமிநாத அய்யரைப் பார்த்து, "**பவ்ய ஜீவன்**" எனப் பாராட்டினார்களாம். சைன மரபில் இச்சொல்லாட்சி அவர்களுள் கிரமமாக வீடுபேறு கிட்டுவதற்குத் தகுதியான நிலைமையில் இருக்கும் ஆத்மாவைக் குறிக்கும். இந்நிகழ்ச்சி சீவகசிந்தாமணி வெளியிடப்பட்ட 1887க்கு முன் நிகழ்ந்தது. அந்த அம்மையாரின் தீர்க்க தரிசனத் திறந்தான் என்னே? இச்சீவக சிந்தாமணியின் பதிப்பின்போது அய்யர் அவர்கள் பட்ட மற்றொரு இகழ்வான நிகழ்வையும் இங்கு குறிப்பிடல் ஏற்றது.

சிந்தாமணி நூலைப் பதிப்பிக்க பல படிகள் பெற்றிருந்தும் மேலும் சுவடிகள் இருக்கின்றன என்றிருந்தால் அதையும் சேர்த்து ஒப்பிட்டு பாடபேதங்கண்டு பின் பதிப்பித்ததையே கொள்கையாகக் கொண்டிருந்தார் ஐயர் அவர்கள். சிந்தாமணிக்கு 22 படிகள் பெற்ற பின்னரும் தஞ்சையில் விருஷபதாசர் என்பவர் வீட்டில் சிந்தாமணிச்

சுவடி இருக்கும் செய்தி அறிந்து அவரிடம் சென்று சுவடியைத் தந்துதவுமாறு கேட்டுக்கொண்டார். தன்னை அறிமுகம் செய்து கொள்ளும்போது, தான் கும்பகோணம் கல்லூரியில் வேலை பார்ப்பதாகவும், திருவாவடுதுறை மடத்திற்கு வேண்டியவர் என்பதையும் எடுத்துக் கூறினார். தனது பதவி, சார்ந்துள்ள மடம் பற்றிக் கூறினால், அவை ஏடு பெற பெரிதும் துணை புரியும் என்ற எண்ணத்தில் இவற்றைக் கூறினார். ஆனால் சிந்தாமணியை வணங்கிவரும் திரு. விருஷபதாசர் அதை கொடுக்கமாட்டேன் என்றும் அப்படியே கொடுத்தாலும் ஒரு சமணனுக்கே தருவேனல்லாது சைவனுக்கு தரமாட்டேன் என்று கூறி சுவடி தர மறுத்துவிட்டார். பின் பெருமுயற்சியால் வேறொருவர் வழியே அப்படியைப் பெற்றார். இப்படி சேகரித்த 23 சுவடிகளைச் சிந்தாமணிக்குத் திரட்டிய பின்னர் பதிப்புப் பணியை மேற்கொண்டார். ஐய்யரவர்களின் வேட்கை இந்த அளவில் நிற்கவில்லை. நூல் அச்சாகிக் கொண்டிருக்கும்போதும் சுவடிகள் தேடும் பணியை மேற்கொண்டார். கிருத்துவக் கல்லூரித் தமிழ்த் துறைப் பேராசிரியர் திரு. சின்னசாமி 20 படிகளை ஒப்பிட்டு எழுதப்பட்ட ஒரு சுவடி வைத்திருப்பதை அறிந்து அதனையும் பெற்று பரிசீலித்தார். இதேபோன்று திரிகூடராசப்பக் கவிராயர் வீட்டில் சில பகுதிகள் கிடைத்தன. திருநெல்வேலி கால்டுவெல் கல்லூரித் தமிழ்ப் பேராசிரியர் குமாரசாமியின் கையெழுத்துப் படியையும் பெற்று பார்வையிட்டார். அது முழுமையாகவும் திருத்தமாகவும் இருந்ததால் பதிப்பிக்கும்போது பெரிதும் பயன்பட்டது. இவையாவும் 1887ல் சிந்தாமணியை வெளியிட்ட ஐய்யரவர்கள் சுவடிகள் சேகரிப்பதில் ஏற்றுக் கொண்ட இன்னல்களைக் காட்டவே இங்கு சுட்டப்பெறுகின்றது. இங்கு தாக்ரே (Thackeray) என்ற ஆங்கில அறிஞர், மெக்காலே (Lord Macaulay)என்ற அறிஞரின் சொல்லாட்சியைக் குறிப்பிடுங்கால்,

"ஒரு சொல்லாட்சியைப் படைக்க இருபது நூல்களைப் புரட்டுவார்."

"ஓர் அடியின் விளக்க உயர்வைத்தர இலக்கியத் தடத்தில் நூறுகல் பயணிப்பார்" எனக் கூறுவது நோக்கற்பாலது.

(He reads twenty books to write a sentence
Travels a hundred miles to make a line of description)

( Thackeray on lord Macaulay -
"Life and letters of
Macaulay" by G. M. Trevelyan).

அறிஞர் உ. வே. சா. அவர்கள் சுவடிகள் மற்றும் நூல்கள் எவ்வளவு கவனமாக நிரல்பட ஒழுங்காக அடுக்கி காக்கப்படவேண்டும் என்பதை "என் சரித்திரத்தில்" ஒரு நிகழ்ச்சியைக் குறிப்பிட்டு விளக்கி உள்ளார்கள்.

"திருநெல்வேலி மேலை வீதியில் உள்ள கவிராஜ ஈசுவர மூர்த்திப்பிள்ளை வீட்டில் புத்தக அறை இருந்தது. அதுதான் அவர்கள் பரம்பரை வீடு. புத்தக அறையைத் திறந்து காட்டினார்கள். பார்த்தவுடன் என் உடம்பு சிலிர்த்தது. தமிழ்ச் சங்கத்தில் முன்பு இப்படித்தான் சுவடிகளை வைத்திருந்தார்களோ? என்று விம்மிதமடைந்தேன். ஏட்டுச் சுவடிகளை அடுக்கடுக்காகவும் ஒழுங்காகவும் வைத்திருந்தார்கள். சுவடிகளைக் கட்டிவைத்திருந்த முறையே திருத்தமாக இருந்தது. புழுதி இல்லை. பூச்சி இல்லை. ஏடுகள் ஒன்றோடு ஒன்று கலக்கவில்லை. தமிழ்த் தெய்வத்தின் கோயிலென்று சொல்லும்படி இருந்தது அவ்விடம்."

இங்கு உ. வே. சா. சிந்தாமணி நூல் சுவடிகள் பலபெறும் பெருமுயற்சி, கடின உழைப்பு, போன்றவற்றை நினைவுகூறல் போன்று சி. வை. தாமோதரம் பிள்ளை ஒரு கருத்தைக் கூறுவதைக் காண்போம்.

"எனக்கு ஸ்ரீமத் சாமிநாதையரும் அவருக்கு நானுமே சாட்சி"

மீண்டும் டாக்டர் உ. வே. சா. அவர்களும் மற்றும் இத்துறை முறைபோகிய வித்தக அறிஞர்கள் சிலரின் பதிப்புப் பணி பற்றிய கருத்துக்களைக் காண்போம்.

டாக்டர் உ. வே. சா. அவர்கள் பதிப்புப்பணி குறித்து குறிப்பிடுங்காலை,

"ஏட்டுச் சுவடிகளிற் கண்ட பாடல்களின் வேறுபாட்டைக் கண்டு கண்டு என் மனம் புண்ணாகி இருக்கிறது. இன்னபடி இருந்தால் பொருள் சிறக்குமென்று எனக்குத்தோன்றின இடங்களிலும் பிரதியில் உள்ளதையே பதிப்பித்தேன். என்னுடைய கருத்தையோ, திருத்தத்தையோ சிந்தாமணியில் ஏற்றாமல் மிகவும் ஜாக்கிரதையாகக் கவனித்துப் பதிப்பித்தேன். பதிப்பிக்கத் தொடங்கிய நூல் எனக்கு ஒரு தெய்வவிக்கிரகம் போல் இருந்தது. அதன் அழுக்கைத் துலக்கிக் கவசமிட்டுத் தரிசிக்க வேண்டுமென்பதே என் ஆசை. கை கோணியிருக்கிறது, வேறுவிதமாக அமைக்கலாம், நகத்தை மாத்திரம் சிறிது திருத்தலாம் என்ற எண்ணம் எனக்கு உண்டாகவில்லை. அதன் ஒவ்வோரணுவிலும் தெய்வீக அம்சம் இருக்கிறதென்றே நம்பினேன். அழுக்கை நீக்கி விளக்குவதற்கும், அங்கத்தையே வேறுபடுத்துவதற்கும் உள்ள வித்தியாசத்தை நன்றாக அறிந்திருந்தேன்."

**சி. வை. தாமோதரம் பிள்ளை அவர்கள்:-**

"அடியோடு அழிந்துபோகும் பழைய நூல்களை நிலைநிறுத்துவான் புகுந்தேனாதலின் நூலைத் திருத்துவதும் பொருள் இசையச் செய்வதும் என் கடமையல்ல. இயன்ற அளவும் பூர்வரூபம் பெறச் செய்வதும் இயலாதவிடத்து இருந்தபடி உலகிற்கொப்பிப்பதுமே யான் தலையிட்ட தொழில்" என்று கூறுகிறார். அடுத்து, பேராசிரியர் வையாபுரிப்பிள்ளையவர்கள் தமது பதிப்பில் "ஆராய்ச்சிக்கு முடிவில்லை. முயற்சி மிகுந்தோறும் பிரதிகளின் உதவி பல்குந்தோறும் திருத்தங்கள் ஏற்பட்டுக் கொண்டிருத்தல் இயல்புதான். தமிழ்க் கல்வி மேன்மேலும் பரவ வேண்டுமாயின், பிழைகளைப் பிழை என உணர்தல் வேண்டும். அவற்றைப் பொதிந்து வைத்தலைக் காட்டிலும் தமிழன்னைக்குச் செய்யும் பெருந்தீங்கு ஒன்றும் இல்லை" என்று கூறியுள்ளார்.

முத்தமிழ்த்துறை முறைபோகிய வித்தகர் திரு. ஆறுமுக நாவலர் அவர்கள் பதிப்புப்பணி குறித்துக் குறிப்பிடுங்கால்,"நிறைந்த கல்வியுடைய வித்வான்களும் குறைந்த கல்வியுடைய பிறரும் ஆகிய யாவரும் எக்காலத்தும் எளிதில் வாசித்து உணரும் பொருட்டும் கல்வியில்லாத ஆடவர்களும் பெண்களும் பிறரைக் கொண்டு வாசிப்பித்து உணரும் பொருட்டு.........பெரும்பான்மையும் இயற்சொற்களும் சிறுபான்மை அவசியமாகிய திரிசொற்களும் வடசொற்களும் பிரயோகிக்கப்படும். கத்திய ரூபமாகச் செய்து வாசிப்பவர்களுக்கு எளிதில் பொருள் விளங்கும்படி பெரும்பான்மையும் சந்தி விகாரங்களின்றி அச்சிற் பதிப்பித்தேன்" என்று கூறியுள்ளார்.

**மேலும் நாவலர் அவர்கள்,**

"சுவடிகள் நமது தேசியக் கருவூலங்கள் என்பதை மறந்துவிடக்கூடாது. அவைகளைப் பாதுகாப்பதில் கண்ணுங்கருத்துமாயிருக்க வேண்டும்" என்று கூறுகிறார்.

19ஆம் நூற்றாண்டில் இலண்டனில் வாழ்ந்த இரஸ்கின் எனும் அறிஞர் அறிவின் உச்சத்தினின்றும் நூல்கள் பல இயற்றிய அறிஞர்களை "**மன்னர்கள்** " எனவும், அவர்கள் படைப்பினை "**அறிவுக் கருவூலங்கள்**" எனவும் குறிப்பிடுவார். மேதமைச் சான்றோர் தமது எண்ணங்களைப் புத்தகங்கள் வழியாக வடித்துத் தந்துள்ளார்கள். அவைகள் நிரந்தர விழுப்பொருள்கள் கொண்டன. என்றும் நிலைத்து நிற்கும் நீரதாய் உள்ளவை. எனவே அவைகளை மன்னர்கள் கருவூலங்கள் (of King's Treasuries) என்று கூறுகிறார். அப்போதைய ஆங்கில நாடு குதிரைப் பந்தயங்களுக்கும், மது விற்பனைக் கூடங்களுக்கும் செலவிட்டவை அதிகம். ஆனால் இலக்கியங்களின் செம்மையையும் - உயர்வையும் காக்கச் செலவிட்டது மிகக்குறைவே என்கிறார். நல்ல நூல்கள் மனதிற்கு உணவளித்து மகிழ்ச்சியை ஊட்டுவன. புத்தகங்களை சொந்த செலவில் வாங்கிப் படித்து பின் பாதுகாக்கப்பட வேண்டும் என்கிறார். மேலும் அவர் கூறும்போது ஆங்கில அரசு சோலன்கோபன்(Solenhopen) நகரில் கிடைத்த அரிய புதைப்படிமங்கள்

(fossils) வாங்குவதற்கு அப்போதைய பிரிட்டிஷ் அரசு மிகவும் தயங்கியதைச் சாடுகிறார்.

பிரான்ஸ் (Franus Bacon) பேகன் கூறுகிறார்:

"படிப்பது ஒருவனை மனிதனாக்குகிறது
கருத்தரங்குகள் அவனைத் தயார் நிலைக்கு
உயர்த்துகிறது, எழுதுதல் சரியான மனிதனாக்குகிறது".

(Reading maketh a man
Conference a ready a man
Writing an exact a man)

திருவள்ளுவர் கூறுமாப்போல்

கற்றவனுக்குத் தன்னாடுந் தன்னூருமேயன்றி யாதானும் ஒரு
நாடும் நாடாம் யாதானும் ஒரு ஊரும் ஊராம்

("யாதானும் நாடாமல் ஊராமல் என்னொருவன்
சாந்துணையுங் கல்லாத வாறு")

மொழிஞாயிறு ஞா. தேவநேயப் பாவாணர் எமது நூலகம் பற்றிக் குறிப்பிடுங்காலை

"மாணவரும், புலவரும், ஆராய்ச்சியாளரும், பேராசிரியரும் அறிவும் பயிற்சியும், தேர்ச்சியும் பெறத்தக்க சிறந்த கலைக்களரி இத்தென்னாட்டில் இது (சரசுவதி மகால் நூலகம்) ஒன்றே" எனக் கூறுகிறார். இப்பெருமகனாரின் குறிப்பு முழு வீச்சில் செயல்பட ஒல்லும் முயற்சிகள் அனைத்தையும் மேற்கொண்டு வருகிறோம். பாரதியார் கூறுமாப்போல்

"சென்றிடுவீர் எட்டுத்திக்கும்
கலைச்செல்வங்கள் யாவும் கொணர்ந்திங்குச் சேர்ப்பீர்"

என்ற பணியில் ஈடுபடுவோம்.

கல்விதரும் சுவடிகளையும், அரிய நூல்களையும் சேகரிப்போம். உரியமுறையில் பாதுகாப்போம்.

நன்றி! வணக்கம்.

# புத்துலகச் சிந்தனைகள்

(2006ல் திருச்சிராப்பள்ளி வானொலியில் ஆற்றிய உரை)

**சாமி. சிவஞானம்,** எம். ஏ.,
*நிருவாக அலுவலர்,*
*சரசுவதி மகால் நூலகம், தஞ்சாவூர்.*

நம் அருந்தமிழ் ஔவைப் பாட்டியார் 'அரிது அரிது மானிடராய்ப் பிறத்தல் அரிது' என்றார். அப்பரடிகள் 'மனித்தப் பிறவியை' வேண்டுவார். கம்பர் 'மானுடம் வென்றதென்று' பெருமை கொள்வார். இவ்வாறு மானுட மேன்மைக்குக் காரணம் அதன் சிந்திக்கும் ஆற்றலும் செயலுமாகும்.

சிந்தனை என்பதற்கு எண்ணம் என்பது பொருள். கம்பர் 'சிந்தனை உரை செய்வான்' என்று கூறுகிறார். நமது எண்ணங்கள் பல்வகையில் மனதில் அமைவதால் அறிவு வளர்ச்சியடைகிறது. சில கருத்துக்கள் காலப்போக்கில் திருத்தம் பெறுகின்றன; மாற்றமும் பெறுகின்றன. இத்தகைய மாற்றங்களை நாம் ஏற்றுக்கொள்ளவேண்டும்.

பவணந்தி முனிவர்,

> 'பழையன கழிதலும் புதியன புகுதலும்
> வழுவல காலவகையினானே' என்று கூறுகிறார்.

மாணிக்கவாசகப் பெருமான் இறைவனை,

> 'முன்னைப் பழம்பொருட்கும் முன்னைப் பழம்பொருளே
> பின்னைப் புதுமைக்கும் பேர்த்தும் அப்பெற்றியனே'

எனப்போற்றுகிறார். அதாவது இறைவனை பழையவைகளிலெல்லாம் மிகப்பழமையானவன், புதியவைகளில் மறுபடியும் புதிய இயல்போடு இருப்பவன் என்பது பொருள். 'மாற்றம் என்பது மானிடத் தத்துவம்' என்கிறார் கவிஞர் கண்ணதாசன். மாற்றம் மட்டுமே நிரந்தரமானது (change is constant) என்கிறார், Mega Trend என்ற நூலின் ஆசிரியர். குறிப்பாக விஞ்ஞானக் கருத்துக்கள் மாறுதலுக்கு உட்பட்டவை. ஆனால் தனி மனித அறம், ஒழுக்கம், பண்பாடு ஆகியவை என்றும் நிலைத்து நிற்கவேண்டிய விழுப் பொருட்கள். அதாவது, Permanent Values என ஆங்கிலத்தில் கூறலாம்.

ஆக மனிதனை மற்ற உயிரினங்களிடமிருந்து வேறுபடுத்தி உயர்வுபடுத்திக் காட்டுவது, மனிதனின் சிந்திக்கும் ஆற்றலும் திறனுமாகும். சிந்தனை நற்சிந்தனைகளாக மலரவேண்டும். நற்சிந்தனைகளால்தான் மனித குலம் மேம்பாட்டை எட்ட இயலும். கம்பர் வாலியை வியந்து 'சிறியன சிந்தியாதான்' என்று போற்றுவார். சிந்தனைகள் தூய சிந்தனைகளாக இருக்கவேண்டும் என்பது தெளிவு. அப்பொழுதுதான் அவைகள் புதுமை உலகிற்கும் பொருந்தி நின்று வழிகாட்டும். இட்லரும், முசோலினியும் கொண்ட தீய சிந்தனைகள் எத்துணை இலட்சம் மனித உயிர்களை மரணக் குழியில் தள்ளியது என்பது நாம் அறிந்த ஒன்றுதான்.

உலகின் பல நாடுகளில் வாழ்ந்து வளர்ந்து வந்த மக்கள் அமைதியாக வாழ இறை உணர்வை ஏற்படுத்திக்கொண்டனர். பல்வேறு சமயங்கள் தோன்றின. தத்துவ ஞானிகளும், அறிஞர்களும் தோன்றி மனிதன் மேற்கொள்ளவேண்டிய சமுதாய கோட்பாடுகளையும் தனி மனித அறங்களையும் போதித்தனர்.

கிரேக்க ஞானி சாக்ரடீசு 'உன்னை அறிக' என அறிவுரை கூறுவார். நம் இந்தியத் திருநாட்டைப் பொருத்தவரை இங்கு தோன்றிய மதங்களும் அயல்நாட்டினின்று வந்தடைந்த மதங்களும் இந்தியாவிற்கென சிறந்த அறிவாற்றலையும் பண்பாட்டையும் நற்சிந்தனைகளையும் போதித்து மனிதனின் அறக்கொள்கைகளை மேம்படுத்தின. கம்பர் தனது காப்பியத்தில் சரயு நதிப் பெருக்கைக் கூறும்பொழுது, சரயு நதி இமயத்தில் பிறந்து, பரந்து, விரிந்து பாய்ந்து கடலில் கலக்கிறது. இடையில் உள்ள ஏரிகள், குளங்கள் எல்லாம் நிரப்பிச் செல்கிறது. இது எவ்வாறு இருக்கிறது? வேதங்களாலும் விளக்கிக் கூறவியலாத பரம்பொருள் இயல்பை உணர்த்தத் தோன்றிய சமயம் ஒன்றே; பின்னர் பலவாகப் பிரிந்து பல்வேறு பெயர்களுடன் அப்பரம்பொருளின் இயல்பைப் பல்வகையாக விளக்குகிறது. காலவளர்ச்சியில் சமயங்கள் பலவாக பல்கின. ஆனால் அவை யாவும் உணர்த்தும் பரம்பொருள் ஒன்றே.

அவ்வைர வரிகள் வருமாறு :

***'கல்லிடைப் பிறந்து போந்து கடலிடைக் கலந்த நீத்தம்***
***எல்லையின் மறைகளாலும் இயம்ப அரும்பொருள் ஈதென்னத்***
***தொல்லையில் ஒன்றேயாகத் துறைதொறும் பரந்த சூழ்ச்சிப்***
***பல்பெருஞ் சமயஞ் சொல்லும் பொருளும் போல் பரந்த தன்றே'***

இந்த மானுடம் உய்ய, உயர புத்தரும், ஏசுபிரானும், நபிகள் நாயகமும் பல போதனைகளைச் செய்தார்கள். அதனால் பல வேதனைகளையும் ஏற்றுக்கொண்டார்கள். இதேபோல் அந்தந்த காலகட்டங்களில் குறிஞ்சி மலர்கள்போல் ஞானிகள், மதபோதகர்கள், அறிஞர்கள், ஆன்மீகவாதிகள், தோன்றினார்கள். சுவாமி விவேகானந்தர், "***இந்தியா ஞானம் பிறந்த நாடு, பல ஞானிகளையும், ஆன்மீகப் பெரியவர்களையும் தோற்றுவித்த நாடு, அலை அலையான அந்நியத்தாக்குதல் போன்ற நிகழ்வுகளால் தன் தனித்துவத்தை, பண்பாட்டை இழக்காத நாடு***" என்று போற்றுவார்.

"***எங்கள் பாரத தேசமென்று தோள் கொட்டுவோம்***" என்பார் பாரதியார்.

நமது ஞானிகளும் அறிஞர்களும் போதித்தவை புத்துலகிற்கும் புத்தேளிர் வாழும் உலகிற்கும் பொருந்தும் நிரந்தர விழுப்பொருள் கொண்டவை. அவற்றில் சில.

1. கடமையைச் செய்தல்

2. உயிர்களிடத்து அன்புடைமை

3. சகோதரத்துவம்

4. அறிவு நலம்

5. உண்மை உரைத்தல்

6. பெரியோரைப் பேணல், ஆசிரியரை மதித்து நடத்தல்

7. விருந்தோம்பல் போன்றவற்றைக் கூறலாம்.

சங்க காலப் புலவர் கடலுண்மாய்ந்த இளம்பெருவழுதி இந்த உலகு எவ்வாறு நிலைத்து நிற்கிறது என்பதற்கு விடை காண்கிறார். நிலப்பரப்பு கடலினும் சிறிது. அண்மையில் கொடுங்கடல் வீசிய ஆழிப்பேரலைகள் ஏற்படுத்திய அழிவுகளை நாம் அறிவோம். ஆயினும் உலகு நிலைத்து நிற்கிறது. இதற்கான விடையைத் தருகிறார் அவர்.

'உண்டாலம்ம இவ்வுலகம், இந்திரர்
அமிழ்தம் இயைவ தாயினும் இனிதெனத்
தமியர் உண்டலும் இலரே; முனிவிலர்;

துஞ்சலும் இலர்; பிறர் அஞ்சுவ தஞ்சி;
புகழெனின் உயிருங் கொடுக்குவர்; பழியெனின்
உலகுடன் பெறினுங் கொள்ளலர்; அயர்விலர்;
அன்ன மாட்சி யனைய ராகித்
தமக்கென முயலா நோன்றாள்
பிறர்க்கென முயலுநர் உண்மையானே.'

அமிர்தமேயாயினும் தனித்து உண்ணாமை; யார் மீதும் வெறுப்பு இன்மை; செயற்கருஞ் செயலுக்கு அஞ்சாமை; புகழ் எனின் உயிரும் வழங்குதல்; பழியெனின் உலகம் பெறினும் விரும்பாமை; முயற்சியில் அயர்ச்சியின்மை. இந்த ஆறு மாட்சிக் குணங்களையும் அணிகலமாகப் பூண்டு தமக்கென்று வாழாது பிறர்க்கென்று வாழும் பெரியோர்கள் இருப்பதால் இந்த உலகம் நிலைத்திருக்கின்றது.

**இனி புத்துலகச் சிந்தனை தரும் பூங்காற்றில் கலப்போம் :-**

பாரதியார் கூறுகிறார் :

***"மதியின் வலிமையால்***
***மானுடம் ஓங்குக***
***மானுடச் சாதி ஒன்று***
***மனத்திலும் உயிரிலும்***
***தொழிலிலும் ஒன்றேயாகும்"***

இன்று நமது இளைஞர்கள் அரம்போலும் கூரியமதி படைத்தவர்களாகத் திகழ்கிறார்கள். இந்திய இளைஞர்களின் தெளிவு கொண்ட சிந்தை திக்கெட்டிலும் பரவி நிற்கிறது.

நம் இளைஞர்கள் கணினித் துறையில் காட்டும் கை வண்ணத்தைக் காண்கிறோம். தகவல் துறையில் நம் இளைஞர்கள் தடம்பதித்துள்ளார்கள். குறிப்பாக, தமிழக இளைஞர்களின் அறிவாற்றலை மெச்சும் அமெரிக்கா, ' இளைஞர்களே இனி நீங்கள் எங்கள் நாட்டிற்கு வரவேண்டாம். உங்கள் நாட்டிலேயே எங்கள் நிறுவனங்களை அமைத்துத்தருகிறோம். அங்கேயே பணியாற்றுங்கள்' என்று இந்தியாவில் குறிப்பாகத் தமிழகத்தில் அவர்களின் தொழிற்கூடங்களை அமைத்து வருகிறார்கள். இது நம் இளைஞர்கள் கூர்த்த மதியினராய் கொண்ட கடமை முடிப்பவராய் உயர்ந்து நிற்பதற்குச் சான்று. இன்று BPC என்று பேசப்படும் Business Process Outsourcing, KPC எனக்கூறப்படும் Knowledge Process Outsourcing ஆகிய

இரு சொற்றொடர்கள் நம்மிடையே பேசப்படுகின்றன. ஒன்று வணிகத்தொடர்பான செய்திகளை வாடிக்கை யாளருக்குத் தெரிவிக்கவும். வணிகத்தை வளர்க்கவும், மற்றொன்று இந்தியாவிலிருந்தோ அல்லது தமிழகத்திலிருந்தோ அமெரிக்கா, பிரிட்டன்போன்ற நாட்டு மாணவர்களுக்கு இங்கிருந்தே கற்பிப்பது. இந்த முறையில் அமெரிக்கா வகுப்பறைக்குள் நுழையாமலேயே நம் ஆசிரியர்கள், அறிஞர்கள் இங்கிருந்தே பாடம் புகட்டும் அற்புதத்தைக் காணலாம். நம் இளைஞர்கள் "வானமளந்த தனைத்தும் அளந்திடும்" வன்மை பெரிது.ORACLE நிறுவனத்தின் தலைவர் இந்தியாவில் உருவாகி வரும் புதுப்புது திறமைகள், தொழில் நுட்பப் பாய்ச்சல்களைப் பார்க்கும்போது விரைவில் அமெரிக்க சிலிகான் பள்ளத்தாக்கின் சாப்ட்வேர் கிரீடம் பறிபோய்விடுமோ எனத்தோன்றுகிறது என்று வியந்துள்ளார். இது இந்தியநாடு பெற்ற வெற்றியாகும். ஆனால் அறிவிற்கும் ஆய்விற்கும் எல்லையில்லை. எனவே தொட்டனைத் தூறும் மணற்கேணியாய் உயர் எண்ணங்கள் நம் மணற்கேணியில் ஊறிக்கொண்டே இருக்கவேண்டும்.

தமிழன்னை பெற்றெடுத்து இன்று இந்திய அறிவியல் ஆற்றலின் அடையாளமாக, நற்பண்புகளின் நல்லதோர் உறைவிடமாக விளங்கும் நமது மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர். A. P. J. அப்துல் கலாம் அவர்கள் பல 'எழுச்சி தீப'க்கருத்துக்களை நமக்கு 'அக்னிச் சிறகால்' எழுதி அழகாக அள்ளித் தருகிறார்கள். அதில் ஒன்று,

" சிந்தனைதான் முதலீடு, முனைப்புத்தான் வழிமுறை;
கடும் உழைப்பே தீர்வு"

மாற்றங்கள் புதிய சிந்தனைகளைத் தருகிறது. அதன் பலனாக புதுமையான செயல்களுக்கு வழி கிடைக்கிறது. அமெரிக்கா நாட்டின் சிறந்த கல்வியாளரும் வணிக ஆலோசகருமான ஷிவ்கெரா 'உன்னால் வெல்ல முடியும்' 'You can win' என்ற நூலில் "வெற்றியாளர்கள் வித்தியாசமான செயல்களைச் செய்வதில்லை, அவர்கள் தாங்கள் செய்வதையே வித்தியாசமாகச் செய்கிறார்கள்" என்று கூறுகிறார். எனவே வித்தியாசமானவற்றைச் செய்ய நீண்ட தொலைநோக்கும் மனஉறுதியும் வேண்டும்.

மில்டன் என்ற ஆங்கிலக் கவிஞன் "வெல்லவியலா மனவலிமை" என்பார்."All is not the unconquerable will" வெற்றி என்பது தோல்வி அற்றது என்பது பொருளல்ல. போராட்டங்களுக்குப் பின்தான் எட்டக்கூடிய குறிக்கோளும் உண்டு. ஆப்ரகாம்லிங்கனின் வாழ்க்கையே ஒரு போராட்ட களம். இருபத்தொன்றாவது

வயதில் தனது வணிகத்தில் தோற்றார். பின் பற்பல தேர்தலில் நின்று தோல்விகளைத் தழுவினார். ஆனால் நீண்ட நெடிய போராட்டங்களுக்குப் பின் அவரது 52-ஆவது வயதில் அமெரிக்கா ஜனாதிபதி அரியணை அவரை அரவணைத்துக்கொண்டது.

நமது குடியரசுத்தலைவர் டாக்டர் ஏ. பி. ஜே. அப்துல் கலாம் அவர்கள் "அக்னிச்சிறகுகள்" என்ற நூலில் கூறுகிறார், 'பிரச்சினைகளை சகித்துக்கொள்ளாமல் எதிர்கொண்டு சமாளியுங்கள், பிரச்சினைகளில் மாட்டிக்கொண்டு அல்லாடுவதைவிட அதை எல்லாம் சமாளித்து, வெளிவருவதற்காகவே வெற்றியாளர்கள் முயற்சி செய்கிறார்கள்'. இத்தகைய கருத்து ஒன்றை அமெரிக்க கல்வியாளர் ஷிவ்கெரா ஒரு உவமை மூலம் விளக்கிக்கூறுகிறார். ஒரு உயிரியல் ஆசிரியர் ஒரு கம்பளிப்புழு எப்படி ஒரு வண்ணத்துப்பூச்சியாக மாறுகிறது என்று விளக்கிக்கொண்டிருந்தார்; வண்ணத்துப்பூச்சிக் கூட்டினை வைத்துவிட்டு அனைவரும் காத்திருந்தனர். சில மணிகள் கடந்தபின் வண்ணத்துப்பூச்சி வெளிவரப்போராடியது, போராட்டம் மிகக்கடுமையாகவிருந்தது. அதன் நிலைகண்ட ஒரு மாணவன் அந்த வண்ணத்துப்பூச்சியின் கூட்டை உடைத்து அது வெளிவர உதவினான். ஆனால் வண்ணத்துப்பூச்சி இறந்துவிட்டது. ஆசிரியர் மாணவன் வண்ணத்துப் பூச்சியைக்கொன்றுவிட்டான் எனக்குற்றம் சாட்டினார். பின் இது குறித்து அவர் விளக்கும்போது, அவ்வண்ணத்துப்பூச்சியின் போராட்டம் உண்மையில் அதன் சிறகுகளை வளர்க்கவும், வலுப்படுத்தவும் உதவும் என்பதுதான் இயற்கையின் சட்டம் என்று கூறினார். எனவே போராட்டங்கள் மூலமே இளைஞர்கள் அடுத்து அடுத்து உயர, உயர தம்மை உயர்த்திக்கொள்ள முடியும்.

"நினைத்தவாறு மனிதன் இருக்கிறான்" என்பது பைபிள் கோட்பாடு. சிறந்த குறிக்கோள் வேண்டும், நமது நாவுக்கரசர்பெருமான், நாம் குறிக்கோளுடன் வாழவேண்டும் என்பதற்காக தன்னையே குறை கூறிக்கொண்டு "குறிக்கோளிலாது கெட்டேன்" என்கிறார். உயர்ந்த இலட்சியமும் அறிவும், திறனும், செயல்படுத்தும் ஆற்றலுமிருந்தால் விண்ணைச்சாடலாம். மதியை மலராகப் பறித்து மகிழலாம், இத்தகைய வெற்றிகள் நமக்கு இப்பொழுது குவிந்துகொண்டிருக்கின்றன. அமெரிக்கா வெற்றியாலோசகர் டாக்டர். எம். ஆர். காப்மேயர் "கற்பனைக்கு இடம் கொடுங்கள். உங்கள் மனத்திரையில் இப்படி ஆனால் என்று எப்படி பார்க்கிறீர்களோ, நடிக்கிறீர்களோ, செயல் ஆற்றுகிறீர்களோ அப்படியே நீங்கள் மாறிவிடுகிறீர்கள்" என்கிறார். நமது குடியரசுத்தலைவர், கனவுகளைத் தூண்டுகிறார்; அவை செயல்வடிவம் பெறும் கனவுகள். "கனவு மலரட்டும்! கனவு மலரட்டும் ! கனவு மலரட்டும் ! கனவுகள் எண்ணங்களாக வடிவம் பெறுகின்றன, எண்ணங்கள் செயல்களாக பரிணமிக்கின்றன" என்பது அவர் கூற்று.

பாரதியாரும்

"கனவு மெய்ப்பட வேண்டும்
கைவசமாவது விரைவில் வேண்டும்"

என்று பாடுகிறார்.

இந்தியா இன்று சற்றேறக்குறைய 110 கோடி மக்களைச் சுமந்து உலக அரங்கில் தலை நிமிர்ந்து நிற்கிறது. உணவு உற்பத்தி, சுகாதாரம், உயர்கல்வி, பத்திரிக்கைத்துறை, பொதுமக்கள் தொடர்பு, தொழில் கட்டமைப்பு, தகவல் தொழில் நுட்பம், விஞ்ஞானம், இதர தொழில்நுட்பம், பாதுகாப்பு என பல்துறைகளிலும் வளர்ச்சியடைந்திருக்கிறது. உலகினர் பாராட்டுதலையும், போற்றுதலையும் இந்தியாவிற்குச் சூடி மகிழ்கின்றனர். ஆனால் இன்னும் ஏராளமானோர் வறுமைக்கோட்டிற்குக் கீழ் உள்ளனர். போதிய வேலையில்லாமல் பல இலட்சம் இளைஞர்கள் உள்ளனர். இன்னும் அடிப்படைத் தேவைகள்கூட நிறைவு பெறாத கிராமங்கள் உள்ளன. இவற்றிற்கு மேலாகச் சில உள்நாட்டு பூசல்களாலும் எல்லைதாண்டிய பயங்கரவாதத்தாலும், அன்றாடம் பல மனித உயிர்களின் குருதி எங்கேனும் ஓர் இடத்தை நனைத்து சிவப்பு நிறமாக்கி வருகிறது.

இவற்றிற்கெல்லாம் நாம் விடைகாணவேண்டும். நமது பாரம்பரியமிக்க கோட்பாடுகளையும், கொள்கைகளையும் நாம் புதுப்பித்துக்கொண்டே இருக்கவேண்டும். அவை பீனிக்ஸ் பறவை போன்று மீண்டும், மீண்டும் புதுப்பொலிவோடு வளர்ந்து வாழ்ந்து கொண்டிருக்கவேண்டும்.

**கீதை கூறும் பாதை என்ன ?**

'உணவைச் சமைத்துத் தான் மட்டும் உண்பது கர்மம்
மற்றவர்களுக்கும் கொடுத்து உவப்புடன் உண்பது கர்மயோகம்'

நபிகள் நாயகம் 'பூமியில் உள்ள எல்லா உயிர்களுக்கும் உணவளிப்பது நம் கடமை' என்று கூறுகிறார் 'நீ இரவு உறங்கச்செல்லுமுன் பக்கத்தில் யாரேனும் பசித்திருந்தால் உணவு அளித்துவிட்டு உறங்கச் செல்வாய்' என்று உபதேசிக்கிறார். மகாபாரதத்தில் பொழுது சாய்ந்ததும் எல்லோரும் மாலை வழிபாட்டுக்குச் சென்று விடுகிறார்கள். கண்ணன் மட்டும் ரதத்திலிருந்து குதிரையை அவிழ்த்து விடுகிறான். அவைகளுக்குத் தண்ணீர் காட்டுகிறான். கொள் வைக்கிறான், உடலைத் தேய்த்து விடுகிறான். நாமும் ஒரு கர்மயோகிபோல் பணியாற்ற வேண்டும். நம் மக்களிடையே

இன்று அருகி மங்கி வருவது அன்பு எனும் இதயங்களை இணைக்கும் நூல். நம் பாரத பூமியில் மிகச் சிறந்த கொள்கை அன்புடைமைதான். ஏசுபிரான் அன்பைப் போதிக்கின்றார். வள்ளுவப் பேராசான் 'அன்புடையார் என்பும் உரியர் பிறர்க்கு' என்பார். இன்று அமெரிக்காவில் கோடியில் புரளும் இந்திய இளைஞனின் பெற்றோர் தெருக்கோடியில் உள்ள முதியோர் இல்லத்திலே வாழ்கிறார்கள். கணவன் - மனைவி உறவில் விரிசல்; விவாக ரத்து; வேறு திருமணம், சகோதர தத்துவம் துப்பாக்கிக் குண்டுகளுடன் துணை நின்று மகிழ்கிறது. இதனை நோக்கும்பொழுது கம்பர், பரதன் நிலையை 'சிந்தனை முகத்தில் தேக்கி' என்று கூறுதல்போல், நாமும் கவலை மிக கொள்ள வேண்டியிருக்கிறது.

உலகில் தினமும் அங்கொன்றும் இங்கொன்றுமாக அவ்வப்போது தலைதூக்கும் மதக்கலவரங்கள், இனக் கலவரங்கள். சில ஆண்டுகளுக்குமுன் மேலை நாடு ஒன்றில் சில நீக்ரோ இளைஞர்கள் வெள்ளையர் குடியிருப்புப் பகுதிகளில் குடிசைகளை அமைத்தனர், என்பதற்காக நீக்ரோக்களின் கை, கால்களைக் கட்டிவிட்டு அல்சேஷன் நாய்களை விட்டு கடிக்கச் செய்தனர். அவர்கள் பட்ட துன்பம், கொட்டிய குருதி தொலைக்காட்சியில் காட்டப்பட்டபோது உலகில் நல் இதயங்கள் அனைத்தும் நடுங்கி உறைந்தன. உலகில் மனிதநேயம் வேரோடு சாய்ந்துவிட்டது போன்ற உணர்வு. இன்னும் எத்தனை ஏசுபிரான் தோன்றி தன் குருதியை இம்மண்ணில் கொட்டினால் இந்த மானுடம் வருந்தும், திருந்தும் என்பதுதான் இப்போது நம்மிடையே எழும் கேள்வி. இத்துணை விடுதலைப் புரட்சிகளுக்குப் பின்னும் ஒரு நாடு மற்றொரு நாட்டின் மீது தனது பெரியண்ணன் தனத்தைத் திணிக்கிறது. போர்களில் மனித உயிர்கள் மலிவாகிப் போகின்றன. எனவே அன்புடமை எல்லோர் இதயத்திலும் படரவேண்டும். இந்தியாவை பொருத்தவரை எல்லா மதமும் அன்புடைமையையும், மனித நேயத்தையும் போதிக்கிறது. பண்டிட் ஜவர்ஹர்லால் நேரு அவர்கள், இந்தியா 'வேற்றுமையில் ஒற்றுமை காணும் உயர்வை' வியந்து பாராட்டுகிறார். எனவே நமது மதச்சார்பின்மை கட்டிக் காக்கப்படவேண்டும். சற்றேறக் குறைய ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே சிவபாதசேகரனான இராஜராஜ சோழன் மைசூரில் உள்ள வைணவக் கோவில்களை காத்து நின்றதோடு, நாகபட்டிணத்தில் கட்டப்பட்ட பௌத்த கோவிலுக்கு ஓர் ஊரையே தானமாகக் கொடுத்தான் என்பது வரலாறு. நமது மேதகு குடியரசுத் தலைவர் டாக்டர் A. P. J. அப்துல் கலாம் அவர்கள் அவரது 'எழுச்சி தீபங்கள்' என்ற புத்தகத்தில், நம் நாட்டில் மத நல்லிணக்கத்தையும், மனிதநேயப் பண்பையும் வலியுறுத்தும் பெரியோர்களையும் அவர்களது அரிய செயல்களையும் போற்றி மகிழ்கிறார்கள். இங்கே புரட்சிக் கவிஞர் பாரதிதாசன் பாடலை நினைவு கூறலாம்.

எங்கும் பாரடா இப்புவி மக்களைப்
பாரடா உனது மானிடப்பரப்பை
பாரடா உன்னுடன் பிறந்த பட்டாளம்
என்குலம் என்றுனைத் தன்னிடம் ஒட்டிய
மக்கட் பெருங்கடல் பார்த்து மகிழ்ச்சிகொள்
அறிவை விரிவு செய்; அகண்ட மாக்கு
விசாலப் பார்வையால் விழுங்கு மக்களை
அணைந்து கொள் உன்னைச் சங்கமமாக்கு
மானிட சமுத்திரம் நானென்று கூவு
பிரிவிலை எங்கும் பேதமில்லை
உலகம் உண்ண உண், உடுத்த உடுப்பாய்

மற்றுமொன்று

'புதியதோர் உலகம் செய்வோம் - கெட்ட
போரிடும் உலகை வேருடன் சாய்ப்போம்'

இந்தியா எல்லாத் துறைகளிலும் பீடு நடை போட்டு வருகிறது. ஆனால் நடக்கும் தூரம் இன்னும் நெடுந்தூரம் என்பதை நினைவில் கொள்வோம். இந்த இடத்தில் ஆங்கிலக் கவிஞன் W. L. Longfellow பாடிய ஒரு கவிதையைக் கூறலாம்.

சாதனையாளர்கள் எய்திய வெற்றி உயரம்
ஏதோ ஒரு நாள் முயன்று மறுநாள் பெற்றதல்ல
மற்றவர்கள் ஆழ்ந்த உறக்கத்தில் அணைந்திருந்தபோது
இவர்கள் கடும் உழைப்பால் கண்டனர் வெற்றி.

'The heights by great men reached and kept
Were not attained by sudden flight,
But they, while their companions slept,
Were toiling upward in the night'

இன்னும் நமக்காக கடின உழைப்பு காத்திருக்கிறது. ரிக் வேதத்தில் 'உயர்ந்த சிந்தனைகள் எல்லாத் திசைகளிலிருந்தும் நம்மை வந்து அடையட்டும்' என்று கூறப்படுகிறது.

நிறைவாக தாகூரின் கவிதை வரிகளுடன் நிறைவு செய்வோம்.

'எங்கே அச்சமற்ற மனமும் தலைநிமிர்ந்த அறிவும் உளதோ

அறிவிற்குத் தடையிலா சுதந்திரம் உண்டோ

உலகம் தன் சுயநலனுக்காக தூண்டப்படாதோ

சொற்கள் ஆழமான உண்மையிலிருந்து வருமோ

மாசற்ற முழுமை நோக்கி களைப்பற்ற போராட்டம் உள்ளதோ

எந்தையே அந்தச் சுதந்திரமான மோட்சம் நோக்கி எந்நாடு எழட்டும்.'

**வாழ்க பாரத மணித்திருநாடு**

# A Note on the Botanical Paintings and Books in the Sarasvati Mahal Library

**Dr. P. Perumal,** B.Sc., M.A., M.L.I.Sc., Ph.D.,
Conservator and Librarian Gr. I,
Sarasvati Mahal Library, Thanjavur.

The Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library is one among the few medieval libraries that exists in the world. It is a treasure house of knowledge. It contains very rare and valuable collection of manuscripts, books, maps and paintings on all aspects of arts, culture and literature. The library was formed during the reign of Nayaks of Thanjavur (1535 - 1675) and developed by the Maratha kings of Thanjavur (1676 - 1832). Among the Maratha kings, Raja Serfoji II (1798 - 1832) was an eminent scholar in many branches of learning. With great enthusiasm, he took special steps for the enrichment of the Library.

Raja Serfoji had his education under the guidance of Danish missionary father Schwartz. He has close link with activities of the Danish missionary at Tranqubar, which influenced to follow their activities. He started a printing press in 1805. He was interested in Medicine an was run a Medical Institution in the Palace called Dhanvantri Mahal, he devoted himself for the progress of research in Siddha, Ayurveda and Allopathic Medicine. The recipes used in the hospital were recorded as manuscript form. His court artists prepared colour drawings and paintings on various subjects including medicinal plants for identification of herbal plants.

During 17$^{th}$ century the Doctors and Scientific men had interest in the tropical flora of the Madras Presidency. A Book on Plants entitled "Hortus Indicus Malabaricus" (1678 - 1703) was published. Dr. Christopher Samuel John (1747 - 1813), Dr. J. P. Rottler (1749 - 1836), Dr. Caemmeer (1767 - 1837) and Dr. J. G. Klein were actively collected specimen of flora and prepared painted albums of the flora. These collections were named as Herbarium madras and are preserved in the India Office Library, London.

Contemporary western doctors activities might influence the Raja Serfoji II. His three albums of Medicinal Plants were drawn by the court artists and they are preserved in the library. The details the plants in the volumes are given below.

The first volume has 19 (Nineteen) plants of size. 40 x 26 cm

| | | |
|---|---|---|
| 1 | Maramandary | மரமந்தாரை |
| 2 | (No Title) | - |
| 3 | (No Title) | - |
| 4 | Norium rodorum | No Tamil name |
| 5 | Sanseviera zeyama | மருள் |
| 6 | Ranieum Javanicum | சோனைப்புல் |
| 7 | Somni Perum | கசகசா |
| 8 | Cassia Fistula | கொன்னை |
| 9 | Vanda Tok burgi | - |
| 10 | Sun flower | சூர்ய காந்தி |
| 11 | (No Title) | - |
| 12 | Peas | பட்டாணி |
| 13 | (No Title) | - |
| 14 | Varity of cassia | நரிக்கொன்னை |
| 15 | Ballotranthas | நாவல் |
| 16 | Nasturtium | கல்தாமரை |
| 17 | (No Title) | - |
| 18 | Hibiscus | செம்பறத்தி |
| 19 | (No Title) | - |
| 20 | Gatropha | - |
| 21 | Erooa Hemp leaved Hibisens | சீமை புளிச்சக்கீரை |

| In the Second volume, there are 61 plates of siz 46.5 x 29.5 cms | | |
|---|---|---|
| 1 | Nutmug | ஜாதிக்காய் |
| 2 | Orhua squarhosa | சிலந்தி |
| 3 | (No Title) | - |
| 4 | Horse Gram shrub | கொள்ளுச்செடி |
| 5 | Solanum Trilobatom | தூதுவளை |
| 6 | Guettarda Soeciose | பன்னீர் மரம் |
| 7 | Yellow pandnus | செந்தாழை |
| 8 | (No Title) | - |
| 9 | Michilia champaca | செண்பகம் |
| 10 | Plumeria acretifolia | மர அரளி |
| 11 | (No Title) | - |
| 12 | Boer bana pepanda | மூக்குத்தி |
| 13 | Mango tree | மாமரம் |
| 14 | Enhoribia antiquorum | சதுர்க்கள்ளி |
| 15 | Red roses | சிவப்புரோஜா |
| 16 | A nesomelar Malabarica | பேமுறட்டி |
| 17 | Plumbago zeylamica | கொடிவேலி |
| 18 | Heliotropium Indica | சிறுதேள் கொடுக்கி |
| 19 | (No Title) | - |

| | | |
|---|---|---|
| 20a | Apalathus Indica | சிவனார் வேம்பு |
| 20b | Asparagus Sarmentoss | தண்ணீர் விட்டான் |
| 20c | Ehretia puxifolia | குருவிச்சை |
| 20d | (No Title) | பெறண்டை |
| 21 | Pulomis Indica | சிறுதும்பை |
| 22 | The Moonman's flower shrub | கப்பைக்கால் பூச்செடி |
| 23 | Justica Tranqueberensis | தவசு முருங்கை |
| 24 | (No Title) | மனோரஞ்சிதம் |
| 25a | Justica echioldes | கோபுரந்தாங்கி |
| 25b | Pavetta Indica | பாவட்டை |
| 25c | Buchnera Asiatica | பல்லிப் பூண்டு |
| 25d | Crotalaria verracosa | வட்டக் கிலுகிலுப்பை |
| 26 | Curculigo orchiodes | நிலப்பனை |
| 27 | Broad leaved Rosebay flower | நந்தியாவட்டை |
| 28a | (No Title) | அணவா |
| 28b | (No Title) | செடச்சி |
| 28c | Cotton plant | சீமைப்பருத்தி |
| 28d | (No Title) | செருபுள்ளடி |
| 28e | (No Title) | கும்மட்டி |
| 28f | Ionicleum suffraticosm | ஓரிலைத்தாமரை |

| | | |
|---|---|---|
| 29 | Cochlosprmum Gossypium | மக்மல் |
| 30 | Chay Root - Olden Lantia Umbellala | இம்புரா |
| 31 | Tragia Involucrata | காஞ்சூரி |
| 32 | A medical plant belonging to Fiscus | ஊலத்தி |
| 33 | Country Sarasa Parilla<br>(Hemedermus Indica) | நன்னாரி |
| 34 | (No Titile) | - |
| 35 | Capia orientalis | பொன்னாவாரை |
| 36 | Physalis Somnifera | அமுக்குரா |
| 37a | Phyllanthus Niruri | கீழாநெல்லி |
| 37b | A variety of cassia | மாம்பழக்கொன்னை |
| 37c | Adhatoda vassica | ஆடாதொடை |
| 38 | Bignonia cheloroides | பாதிரிமரம் |
| 39 | Manusoos Elengi | மகிழமரம் |
| 40 | Coccinia Indica | கோவைவேளை |
| 41 | A variety of cassia | நரிக்கொன்னை |
| 42 | Polygale Glabra | சிறியாநங்கை |
| 43 | (No Title) | - |
| 44 | Gmelina ariatica | குமுளு |
| 45 | Capsicum pratescens chilli | மிளகாய் |

| | | |
|---|---|---|
| 46 | Lablab culptus | - |
| 47 | A species of Monordica dioria | காட்டுப் பாகல் |
| 48 | Cynanchum | கொடிக்கள்ளி |
| 49 | Banyan Tree | ஆலமரம் |
| 50 | A branched palmyra tree | கிளைப்பனை |
| 51 | (No Title) | - |
| 52 | Solanum Jacquine | கண்டங்கத்திரி |
| 53 | (No Title) | - |
| 54 | Red Nerium oderum | சிறப்பு அரளி |
| 55 | Aloe Littoralis | கத்தாழை |
| 56 | Caryota urens | கூந்தப்பனை |
| 57 | A Thorny plant | கரு இண்டு |
| 58 | Bael Acgle Mannalos | வில்வம் |
| 59 | Carthonus Tinclonus | ஜாப்பர் |
| 60 | Tragia cannabina | சிறு காஞ்சோரி |
| 61 | Pholomes Indica | பெரிய தும்பை |

**Book III ( II Paintings) of size 48 x 56 cm.**

| | | |
|---|---|---|
| 1 | Plantain flower | வாழைப்பூ |
| 2 | The stump of a plantain tree | வாழைக்கட்டை |
| 3 | Cassia | கொன்னை |

| | | |
|---|---|---|
| 4 | Vitas quadrangularis | பெரண்டை |
| 5 | Scilla Indica | நரி வெங்காயம் |
| 6 | Bryochyllum calycinum | இரண கள்ளி |
| 7 | Glogiosa superba | நெரி விஷம் |
| 8 | Serne carpus anacardium | சேங்கொட்டை |
| 9 | (No Title) | - |
| 10 | (No Title) | - |
| 11 | Bryania ballosa | துமட்டிக் கொடி |

Some of the Raja's drawings are preserved in India office library, London, Victoria Albert Museum, London. The India Office Library in possesses an album of 117 watercolor and gouache drawings of zoological subjects by Indian artists, ca. 1802, working under the direction of the Raja.

The Library also possession of 19th century Printed Illustrated Books on Botanical Plates and few volumes of Herbarium Amboinense printed at Amsterdam in 1750. The paintings and Drawings of Raja Serfoji reflect the interest of the king on various fields of studies and his view to record the things for future usages. It is our duty to preserve and utilize properly for the benefit of the people in the Nation.

# An evolution of Sarasvati Mahal Library Journal

**K. Ramathilagam,** M.A., M.L.I.Sc.,
Librarian,
Sarasvati Mahal Library,
Thanjavur.

The Tanjore Maharaja Serfoji's Sarasvati Mahal Library is a distinguished Library for collection and preservation of Manuscripts, Old books, Maps etc. Dr. A. C. Burnell describes this library as "to be perhaps the largest and most important in the world." Dr. Buhaler says " it contains a great many useful and number of very rare or nearly unique books, many of which are quite unknown or procurable only with great trouble and expense". The manuscripts and yester year famous books which are available are a source of meaningful materials for Research scholars as they are considered as primary source. The informations found in the records are quite new and unique to the quest of historians, artists and orientalists. The Encyclopaedia Britanica in its survey of Libraries of the world mentions this library as" the most remarkable library in India."

This palace library was previously maintained by the committee headed by Sri Rao Sahib T. Sambamurthi Rao who died on 4th April 1938 and in his place Sri S. Gopalan, B.A., B.L., was appointed as Member and Honorary Secretary of the Committee (Vide G. O. No. Ms. 872, Education and Public Department dated 9th April 1938)

During the year 1939 the Committee resolved to circulate the printed books in the library and publish them as journal entitled " The Journal of the Sarasvati Mahal Library " Rules were framed for the circulation of books. The first issue of the printing of journals was started during the year 1939.

Administrative report 1939 states that "During the year under report it was resolved to circulate the printed books in the Library and to publish a journal entitled " The Journal of Sarasvati Mahal Library "

After that in the year 1939 - 40 Administrative Report says that "the publication of the journal of the Journal of the Tanjore Sarasvati Mahal Library was commenced and the two issues of the journal have already been published."

**1945 - 46**

The number of pages of the journal had however tobe reduced on account of control in supply of paper, but it was hoped that conditions would improve soon and that the journal could be issued to the public in its former size and format.

In early fiftees there was some delay in the publication on account of change of press and the difficulty of securing presses equiped with sanskrit types according to requirements. In the editorial of 1951 -52 vol. VII (No. 3) it is stated that in future it will be possible for us to bring out the issues regularly. The Nos. of publication from 1952 to 1961 are indicated below.

| | | |
|---|---|---|
| 1952 | - | 7th vol. to 9th vol. |
| 1955 | - | 10th vol |
| 1957 | - | 11th vol |
| 1958 | - | 12th vol |
| 1959 | - | 13th vol |
| 1960 | - | 14th vol |
| 1961 | - | 15th vol |

In the editorial of the journal of 1955 (vol. X - No. 1) it has been stated "we are greatful to the Government of Madras for the special recurring grant made by them to enable us to continue the publication of this journal. When we first publish this journal in 1939, we expressed our fervent hope that it would prove a useful instrument to unearth the burried treasure in Sarasvati Mahal. This hope has been fulfilled in a bundant measure. But in recent years owing to economic stringency, the journal had to present a slim appearance, with the result that many scholars who evince keen interest in our progress felt that the meagre resources available to us to run this journal should be augmented. Nothing will delight them more than to learn that the Government have been pleased to meet their wishes."

**1956 - 57**

Our journal with its improved number of pages being run with rare articles of Oriental research on vedas. In addition to the serial publication of the rare Natya work "Sangeetamakarandam" and the analysis in English of Siddhantakoumudi", the sanskrit grammar, and the Marathi explanatory version of Bhagavadgita of Madhavaswany, two complete works are of Yakshagana in Telugu, and the other a medical lexion in Tamil called, "Bhogar Nighantu Akaradi" were published in our journal.

**1957 - 58**

Research articles mainly on Arts, Literature and General subjects are published in the journal. Contribution of Articles to the journal from scholars were increasing with the increase in Nos. in circulation. Among the serial articles, Sangita makaranda, Siddhanta Kaumudi (an analysis in English of the Sanskrit Grammar) Saktimalika of Naroji Pandit with translation in Tamil and Ratnapariksha, dealing with the methods of testing precious gems, manufacture of artificial gems, pulled out from various sources are some of the important features besides serial articles and elaborate notes on the important Manuscripts in the Library.

**1961 - 62**

Through this insturment, in fact, the Library speaks out and many an unpublished small works are published and made available to the reading public. Adityahrdayam with the commentary of Katakacharya an elucidative adaption of the same text by Appayadeeksita was published for the 1st time in this journal. Acharyasaptati by on Jagannatha Pandit eulogising the achievements of the great sankaracharya through the propagation of monism was also published in extensive form. Notes on manuscripts featuring in the journal threw new light on the unknown sides of the Manuscripts preserved in this Library. Along with its circulation articles on Arts, Literature and general subjects from scholars from different parts were also increasing.

**1965 - 66**

The T. M. S. S. M Library journal was published thrice a year is the Library bulletin of the library through which small complete works and serials of moderate length are published from our rare manuscripts and made available to the reading public. The Journal besides being supplied to subscribers was sent complimentarily and by exchange to many universities, learned Institutions, editors and scholars in India and abroad and served as the connecting link between the library and the outside literary world. Part 3 of volume XVIII and parts 1 & 2 of vol. XIX of the journal were brought out this in this year.

**1967 - 68**

Several short manuscripts were published through the journal in the course of the year. Jnana Ammanai and Siruneerkuri Sothanai (Medical work) in Tamil Radhavinida Kavya, Prabrahma Tattvanirupana and Ucchirnkhala Neda in Sanskrit were published in full. Minor works of Venkatacharya Champu Ramayana, Uttrakanda, and Asvatayana Apara prayoga in Sankrit were completed. Ayurvedopadesa (Medical) in Tamil and Sanskrit and Sanakrakali Natana Samvada (Multilingual) were continued. As new serials, Sangameswari Ammanai, Viralividu Thoodu, Kamalaya Amman Pillai thamizh in Tamil, Madana sanjeevana Bhana in Sanskrit and Pada Guccha in Marathi were started to he continued in subsequent volumes of the Journal.

## Some opinions about the journal

**The Librarian, India Office Library, London, writes**

"In thanking you for your kindness in sending me the first number of the new journal of the Tanjore Sarasvati Mahal Library received today, I take the opportunity of congratulating you on the appearance of your interesting periodicals."

**"Sahityavidyadhara Sahityavachaspati Dr. M. Krishnamachariar**

I am sure this Journal will help the Samskritic world ............."

**The Mail Madras dt. 22nd Oct. 1939.**

"The first number of the Journal of the Sarasvati Mahal Library, Tanjore has been published Edited by Mr. S. Gopalan, Secretary, the Journal is published with the permission of the administrarive committee of the Library and is to be issued thrice a year. It is devoted mainly to the study of the important books."

In the year 1992, the Former Director periodicity of the journal was changed to quarterly. so far the library has published 50 volumes.

The publication of the 51 volume is on the affing. The qualitative dissertations of Scholars are found to be a source of interest, information and education to the teachers and readers.

|| श्रीः ||

|| श्रीमद्विखनसमहागुरवे नमः ||

# || नीतिशास्त्रम् ||

## || द्राविडटीकोपेतम् ||

எஸ். சுதர்ஷன், எம். ஏ., எம். எல். ஐ. எஸ்.,
நூலகர் II,
சரசுவதி மகால் நூலகம்.

**सभाकल्पतरुं वन्दे वेदशाखोपजीवितम् ।**
**शास्त्रपुष्पसमायुक्तं विद्वद्भ्रमर शोभितम् ।।**

**ஸபாகல்பதரும் வந்தே வேதசாகோபஜீவிதம் ।**
**சாஸ்த்ரபுஷ்பஸமாயுக்தம் வித்வத்ப்ரமர சோபிதம் ॥**

வேதங்களாகிற கிளைகளுள்ளதும், சாஸ்த்ரங்களாகிற புஷ்பங்களோடு கூடினதும், பண்டிதர்களாகிற வண்டுகளால் ப்ரகாசிக்கப் பெற்றதுமான ஸபை என்கிற கல்பவ்ருக்ஷத்தை (கற்பக மரத்தை) நமஸ்கரிக்கிறேன்.

வேத சாஸ்த்ரங்களில் மிகவும் தேர்ந்தவர்களான ப்ராம்மண ஸபையை நமஸ்கரிக்கிறேன்.

**प्रणम्य सर्वलोकेशं देव देवेश्वरं हरिम् ।**
**नीतिशास्त्रं प्रवक्ष्यामि सर्वनु शास्त्रार्थसम्मतम् ।।**

**ப்ரணம்ய ஸர்வலோகேசம் தேவதேவேச்வரம் ஹரிம் ।**
**நீதிசாஸ்த்ரம் ப்ரவக்ஷ்யாமி ஸர்வசாஸ்த்ரார்த்த ஸம்மதம் ॥**

ஸர்வலோகேச்வரனும், தேவாதிதேவனுமான ஸ்ரீமந்நாராயணனை நமஸ்கரித்து, அனைத்து சாஸ்த்ரங்களுக்கும் பொருத்தமான நீதி சாஸ்த்ரத்தைக் கூறுகிறேன்.

धर्म उवाच -

**सत्यं माता पिता ज्ञानं धर्मोभ्राता दयाशखा ।**
**शान्तिः पत्नी क्षमापुत्रः षडेते मम बान्धवाः ।।**

தர்ம உவாச -

**ஸத்யம் மாதா பிதா ஞானம் தர்மோப்ராதா தயாசகா ।**
**சாந்தி: பத்னீ க்ஷமா புத்ர: ஷடேதே மம பாந்தவா: ॥**

ஸத்யமாகிற தாய், ஞானமாகிற தகப்பன், தர்மமாகிற உடன்பிறந்தோன், தயையாகிற நண்பன், அமைதியான மனைவி, பொறுமையாகிற மகன் ஆகிய இந்த ஆறுபேரும் எனக்கு விருப்பமான உறவினர்கள் என்று தர்மர் சொன்னார்.

भीम उवाच -

**प्राणंवापि परित्यज्य मानमेवाभिरक्षतु ।**
**अनित्यो भवति प्राणो मानस्त्वाचन्द्रतारकम् ।।**

பீம உவாச -

**ப்ராணம்வாபி பரித்யஜ்ய மானமேவாபிரக்ஷது ।**
**அனித்யோ பவதி ப்ராணோ மானஸ்த்வாசந்த்ரதாரகம் ॥**

தனக்கு மானம்போகக்கூடிய ஆபத்துவந்தபோது ப்ராணனையாவது விட்டு மானத்தைக் காப்பாற்றிக்கொள்ளவேண்டும். ஏனெனில், ப்ராணன் இந்த சரீரத்தில் அநித்யமாக உள்ளது. மானம் சந்த்ரனும், விண்மீனும் இருக்கும்வரை உள்ளது.

अर्जुन उवाच -

**आमन्त्रणोत्सवा विप्रा गावो नव तृणोत्सवाः ।**
**भर्तागमोत्सवानार्यस्सोहंकृष्णरणोत्सवः ।।**

அர்ஜுன உவாச -

**ஆமந்த்ரணோத்ஸவா விப்ரா காவோ நவ த்ருணோத்ஸவா: ।**
**பர்த்தாகமோத்ஸவாநார்யஸ்ஸோஹம் க்ருஷ்ணரணோத்ஸவ: ॥**

சாதாரண ப்ராம்மணருக்கு (பரான்னம்) விருந்து சந்தோஷகரமானது, பசுக்களுக்குப் பசும்புல் சந்தோஷகரமானது, பதிவ்ரதைகளுக்கு வெளிநாடு சென்றிருந்த தனது கணவனின் வருகை சந்தோஷகரமானது. யுத்தம் எனக்கு சந்தோஷகரமானது என அர்ஜுனன் சொன்னான்.

नकुल उवाच -

**मातृवत्परदारांश्च परद्रव्याणिलोष्टवत् ।**
**आत्मवत्सर्वभूतानि यः पश्यति स पश्यति ।।**

நகுல உவாச -

**மாத்ருவத்பரதாராம்ச்ச பரத்ரவ்யாணிலோஷ்டவத் ।**
**ஆத்மவத்ஸர்வபூதானி ய: பச்யதி ஸ பச்யதி ॥**

மற்ற பெண்களைத் தாய் போலவும், அடுத்தவர்களுடைய பொன், பொருள்களை கொட்டாங்கச்சிபோலவும், மன்னுயிர்களைத் தன்னுயிர்போலவும் எவன் பார்க்கிறானோ அவன் ப்ரம்மஞானியாவான் என்று நகுலன் சொன்னான்.

सहदेव उवाच -

**अनित्यानिशरीराणि विभवो नैव शाश्वतः।**
**नित्यं सन्निहितो मृत्युः कर्तव्यं धर्मसङ्ग्रहः ।।**

ஸஹதேவ உவாச -

**அநித்யானி சரீராணி விபவோ நைவ சாச்வத:।**
**நித்யம் ஸந்நிஹிதோம்ருத்யு: கர்த்தவ்யம் தர்மஸங்க்ரஹ:॥**

சரீரங்கள் அநித்யங்கள், செல்வம் நிலையற்றது, (காலன்) ம்ருத்யுவானவன் எப்பொழுதும் அருகிலிருக்கிறான். ஆகையால் தர்மத்தையே செய்யவேண்டும் என்று ஸஹதேவன் சொன்னான்.

श्रीकृष्ण उवाच -

**औदुम्बराणि पुष्पाणि श्वेतवर्णञ्चवायसम् ।**
**मत्स्यपादं जलेपश्येन्ननारीहृदयस्थितम् ।।**

ஸ்ரீக்ருஷ்ண உவாச -

**ஔதும்பராணி புஷ்பாணி ச்வேதவர்ணஞ்சவாயஸம் ।**
**மத்ஸ்யபாதம் ஜலே பச்யேன்னநாரீஹ்ருதயஸ்திதம் ॥**

அத்திப்பூவைப் பார்த்தாலும் பார்க்கலாம், வெள்ளைக் காக்கையைக் கண்டாலும் காணலாம், ஜலத்தில் (தண்ணீரில்) மீனின் காலைக் கண்டாலும் காணலாம். ஸ்த்ரீகளுடைய ஹ்ருதயத்தை மட்டும் அறியவியலாது என்று ஸ்ரீக்ருஷ்ண பகவான் கூறினார்.

**दुर्भिक्षेचान्नदातारं सुभिक्षे च हिरण्यदम् ।**
**चतुरोहं नमस्यामि रणेधीरमृणेशुचिम् ।।**

**துர்பிக்ஷேசான்னதாதாரம் ஸுபிக்ஷே ச ஹிரண்யதம் ।**
**சதுரோஹம் நமஸ்யாமி ரணேதீரம்ருணே சுசிம் ॥**

பஞ்சமுள்ள காலத்தில் அன்னதானம் செய்பவனையும், சுபிக்ஷமாக (நன்றாக) இருக்கும்பொழுது பணம் வழங்குபவனையும், போர்க்களத்தில் தைர்யமுள்ளவனையும், கடன் இல்லாதவனையும் எப்பொழுதும் நான் நமஸ்கரிப்பேன் என்று ஸ்ரீக்ருஷ்ணன் சொன்னார்.

कर्ण उवाच -

**विप्रहस्ते धनं दद्यात् स्वभार्यासुचयौवनम् ।**
**स्वामिकार्येषु च प्राणं निश्चयो मम माधव ।।**

**விப்ரஹஸ்தே தனம் தத்யாத் ஸ்வபார்யா ஸுசயௌவனம் ।**
**ஸ்வாமிகார்யேஷு ச ப்ராணம் நிச்சயோ மம மாதவ ॥**

வாரீர் ஸ்வாமி ! தான் தேடின பொருளை ப்ராம்மணர்களுக்கு வினியோகம் செய்யவேண்டும், யௌவனத்தைத் தன் மனையாளிடத்துக் கழிக்கவேண்டும், தன் ப்ராணனை ஸ்வாமி காரியத்தில் செலவு செய்யவேண்டும் என்பது என்னுடைய கருத்து என்பதாகக் கர்ணன் கூறினான்.

चाटुवाक्यम् -

**सर्वस्य गात्रस्य शिरः प्रधानं**
**सर्वेन्द्रियाणां नयनं प्रधानम् ।**
**षण्णां रसानां लवणं प्रधानं**
**भवेन्नदीनामुदकं प्रधानम् ।।**

**ஸர்வஸ்ய காத்ரஸ்யசிர: ப்ரதானம்**
**ஸர்வேந்த்ரியாணாம் நயனம் ப்ரதானம் ।**
**ஷண்ணாம் ரஸானாம் லவணம் ப்ரதானம்**
**பவேந்நதீனாமுதகம் ப்ரதானம் ॥**

உடல் முழுவதுக்கும் தலை ப்ரதானம் (முக்யமானது); அனைத்து இந்த்ரியங்களிலும் முக்யமானது கண்; ஆறு ரஸங்களிலே முக்யமானது உப்பு; நதிகளுக்கு ஜலம் முக்யமானது.

**मृत्पिण्डमेकं बहुभाण्डरूपं**
**सुवर्णमेकं बहु भूषणात्मकम् ।**
**गोक्षीरमेकं बहुधेनुजातं**
**एकःपरात्मा बहुदेहवर्ती ।।**

ம்ருத்பிண்டமேகம் பஹுபாண்ட ரூபம்
ஸுவர்ணமேகம் பஹுபூஷணாத்மகம் ।
கோக்ஷீரமேகம் பஹுதேனுஜாதம்
ஏக:பராத்மா பஹுதேஹவர்த்தீ ॥

பாண்டங்கள் வெவ்வேறு ஆனாலும் மண் ஒன்றே. ஆபரணங்கள் பல ஆனாலும் பொன் ஒன்றே. பசுக்கள் பலவானாலும் பால் ஒன்றே. அதுபோல சரீரம் பல ஆனாலும் பரமாத்மா ஒருவனே என்று அறியவேண்டும்.

अर्थातुराणां न गुरुर्नबन्धुः
कामातुराणां न भयं न लज्जा ।
विद्यातुराणां न सुखं न निद्रा
क्षुधातुराणां न रुचिर्नपक्वम् ।।

அர்த்தாதுராணாம் ந குருர் ந பந்து:
காமாதுராணாம் ந பயம் ந லஜ்ஜா ।
வித்யாதுராணாம் ந ஸுகம் ந நித்ரா
க்ஷுதாதுராணாம் ந ருசிர் ந பக்வம் ॥

பணத்தில் ஆசையுள்ளவர்களுக்கு குருவும், உறவினர்களும் இல்லை. காமம் உள்ளவர்களுக்கு பயமும், வெட்கமும் இல்லை. வித்யையில் (படிப்பில்) ஆர்வமுள்ளவர்களுக்கு ஸுகமும், தூக்கமும் இல்லை. பசியுள்ளவர்களுக்கு ருசியும், பக்குவமும் இல்லை.

दाता दरिद्रः कृपणो धनाढ्यः
पापी चिरायुस्सुकृती गतायुः ।
राजाकुलीनः सुकुली च भृत्यः
कलौयुगे षड्गुणमाश्रयन्ति ।।

தாத தரித்ர: க்ருபணோ தனாட்ய:
பாபீசிராயுஸ் ஸுக்ருதீ கதாயு: ।
ராஜாகுலீன: ஸுகுலீச ப்ருத்ய:
கலௌயுகே ஷட்குணமாச்ரயந்தி ॥

அனைவருக்கும் தர்மம் செய்பவன் தரித்ரனாகுதலும், கருமி தனவானாகுதலும், பாபீ (பாபம் செய்பவர்) நீண்ட ஆயுளையும், நன்மை செய்பவன் குறைந்த ஆயுளை

உடையவனாக இருத்தலும், ராஜா வேலையாள் போன்றும் வேலையாள் ராஜாவாகுதலும் ஆகிய இந்த ஆறு குணங்களையும் கலியுகத்தில் ஜனங்கள் அடைகிறார்கள்.

भार्या वियोगः सुजनापवादः
ऋणस्यशेषं कुजनस्य सेवा ।
दारित्र्य काले प्रियदर्शनं च
विनाग्निना पञ्च दहन्तिकायम् ।।

பார்யா வியோக: ஸுஜனாபவாத:
ருணஸ்ய சேஷம் குஜனஸ்ய ஸேவா ।
தாரித்ர்ய காலே ப்ரியதர்சனம் ச
வினாக்னினா பஞ்ச தஹந்தி காயம் ॥

மனைவியைப் பிரிந்து இருத்தலும், நல்லோரை இகழ்தலும், கடனில் மீதம் வைப்பதும், தாழ்ந்த குலத்தோனிடத்தில் வேலை பார்ப்பதும், பணக்கஷ்டமுள்ள நேரத்தில் (பந்துக்களை) உறவினர்களை சென்று பார்ப்பதுமாகிய இந்த ஐந்து செயல்களும் நெருப்பில்லாமலேயே உடம்பை எரிக்கும்.

पुस्तकं वनितावित्तं परहस्तगतं गतम् ।
अथवा पुनरागच्छेत् जीर्णं भ्रष्टा च खण्डशः ।।

புஸ்தகம் வனிதாவித்தம் பரஹஸ்தகதம் கதம் ।
அதவா புனராகச்சேத் ஜீர்ணம் ப்ரஷ்டா ச கண்டச: ॥

ஒருவனுடைய புஸ்தகமும், பணமும் பிறரிடம் அகப்பட்டால் போனதே ஆகும். ஒருவேளை திரும்பிவந்தாலும் புஸ்தகம் கிழிந்துபோயும், பணம் கொஞ்சம் கொஞ்சமாயும் வரும்.

आयुर्वित्तं गृहच्छिद्रं मन्त्रौषधसमागमः ।
दानमानावमानाश्च नवगोप्यामनीषिभिः ।।

ஆயுர்வித்தம் க்ருஹச்சித்ரம் மந்த்ரௌஷதஸமாகம: ।
தானமானாவமானாச்ச நவகோப்யாமனீஷிபி: ॥

ஆயுள், சொத்து (பணம்), குடும்பத்தில் கலகம், மந்த்ரம், ஔஷதம், புணர்ச்சி, தானம், மானம், அவமானம் ஆகிய இந்த ஒன்பதும் புத்திமான்களாலே பிறருக்குத் தெரியாமல் காக்கப்படவேண்டியவைகள்.

ऋणानुबन्धरूपेण पशुपत्नी सुतालयः ।
ऋण क्षयक्षयं यान्ति का तत्र परिवेदना ।।

ருணானுபந்தரூபேண பசுபத்னீ ஸுதாலய: ।
ருணக்ஷயக்ஷயம் யாந்தி கா தத்ர பரிவேதனா ॥

அனைத்து மக்களுக்கும் பசுக்கள், மனைவி (அல்லது) கணவன், பிள்ளைகள், வீடுகள் ஆகிய அனைத்தும் பூர்வஜன்ம கடன்களால் ஏற்படுகின்றன. கடன் தீர்ந்தவுடனே நாசத்தை அடைகின்றன. எனவே, இவ்விஷயங்களில் கவலைப்படக்கூடாது.

दूषकश्च क्रियाशून्यो निकृष्टो दीर्घकोपनः ।
चत्वारः कर्मचण्डालो जातिचण्डाल उत्तमः ।।

தூஷகச்ச க்ரியா சூன்யோ நிக்ருஷ்டோ தீர்ககோபன: ।
சத்வார: கர்மசண்டாளோ ஜாதிசண்டாள உத்தம: ॥

பிறரை தூஷிப்பவன், நித்யகர்மானுஷ்டானத்தை விட்டவன், அதிலோபம் உள்ளவன் ஆகிய இந்த நால்வரும் கர்மசண்டாளர்கள். இவர்களைக் காட்டிலும் சண்டாளன் உத்தமன்.

राजवत्पञ्चवर्षाणि दशवर्षाणि दासवत् ।
प्राप्ते तु षोडशेवर्षे पुत्रं मित्रवदाचरेत् ।।

ராஜவத்பஞ்சவர்ஷாணி தசவர்ஷாணி தாஸவத் ।
ப்ராப்தே து ஷோடசேவர்ஷே புத்ரம் மித்ரவதாசரேத் ॥

குழந்தைகளை ஐந்து வயதுவரை ராஜாபோலவும், மேலும் பத்து ஆண்டுகள் வரை (பதினைந்து வயதுவரை) தாஸனைப்போலவும், பதினாறாவது வயதுமுதல் நண்பனைப்போலவும் நினைத்து நடத்தவேண்டும்.

एकैकागौस्त्रयस्सिंहाः पञ्चव्याघ्राः प्रसूतिभिः ।
अधर्मो नष्ट सन्तानो धर्मसन्तानवर्धनः ।।

ஏகைகாகௌஸ்த்ரயஸ்ஸிம்ஹா: பஞ்சவ்யாக்ரா: ப்ரஸூதிபி: ।
அதர்மோ நஷ்டஸந்தானோ தர்மஸந்தானவர்த்தன: ॥

பசுக்கள் ஒரு கன்றும், சிங்கம் மூன்று குட்டிகளையும், புலி ஐந்து குட்டிகளையும் ப்ரஸவிக்கின்றன. ஆனால் அதர்மத்தைச் செய்யக்கூடிய சிங்கம் மற்றும் புலியினுடைய குட்டிகள் நாசத்தை அடைகின்றன, தர்மத்தைச் செய்யக்கூடிய

பசுவினுடைய கன்றோ நன்கு வளர்கிறது. (தர்மத்தைச் செய்தால் வம்சாபிவிருத்தி ஏற்படும். அதர்மம் செய்தால் வம்சம் அழிந்துகொண்டே வரும்)

**बालार्कः प्रेतधूमश्च वृद्धस्त्रीपल्वलोदकम् ।**
**रात्रौ दध्यन्नभुक्तिश्च आयुः क्षीणं दिने दिने ॥**

**பாலார்க்க: ப்ரேததூமச்ச வ்ருத்தஸ்த்ரீபல்வலோதகம் ।**
**ராத்ரௌ தத்யன்னபுக்திச்ச ஆயு: க்ஷீணம் தினே தினே ॥**

காலை வெய்யிலில் காய்வதும், பிணத்தின் புகையை சுவாசிப்பதும், தன்னைக் காட்டிலும் வயது முதிர்ந்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதும், குட்டை நீரைப் பருகுதலும், இரவில் தயிர் சாதம் சாப்பிடுதலும் ஆகிய இந்த ஐந்தும் ஆயுளை தினம் தினம் குறைக்கும்.

**वृद्धार्कोहोमधूमश्च बालस्त्रीनिर्मलोदकम् ।**
**रात्रौ क्षीरान्नभुक्तिश्च आयुर्वृद्धिर्दिनेदिने ॥**

**வ்ருத்தார்க்கோஹோமதூமச்ச பாலஸ்த்ரீநிர்மலோதகம் ।**
**ராத்ரௌக்ஷீரான்னபுக்திச்ச ஆயுர்வ்ருத்திர்தினேதினே ॥**

மாலை வெய்யிலில் காய்வதும், ஹோமப் புகையை சுவாசித்தலும், தன்னைச் காட்டிலும் வயது குறைந்த பெண்ணைத் திருமணம் செய்துகொள்வதும், சுத்தமான நீரைப்பருகுதலும், இரவில் பால்சாதம் சாப்பிடுவதும் ஆகிய இந்த ஐந்தும் மனிதனுடைய ஆயுளை வளர்க்கும்.

**उत्तमं स्वार्जितं वित्तं मध्यमं पितुरार्जितम् ।**
**अधमं भ्रातृवित्तं च स्त्रीवित्तमधमाधमम् ॥**

**உத்தமம் ஸ்வார்ஜிதம் வித்தம் மத்யமம் பிதுரார்ஜிதம் ।**
**அதமம் ப்ராத்ருவித்தம் ச ஸ்த்ரீவித்தமதமாதமம் ॥**

தான் தேடிய பொருள் உத்தமம். தகப்பன் வைத்த பொருள் மத்யமம். உடன் பிறந்தவன் பொருள் அதமம். மனைவி பொருள் அதமாதமம்.

**उत्तमं कुलविद्याया मध्यमं कृषिवाणिजात् ।**
**अधमं सेवकावृत्तिः मृतिश्चौर्योपजीवनम् ॥**

**உத்தமம் குலவித்யாயா மத்யமம் க்ருஷிவாணிஜாத் ।**
**அதமம் ஸேவகா வ்ருத்தி: ம்ருதிச்சௌர்யோபஜீவனம் ॥**

தன் குலவித்யையால் ஜீவித்தல் உத்தமம். விவசாயம், வியாபாரத்தால் ஜீவித்தல் மத்யமம். வேலைக்காரனாக இருந்து ஜீவித்தல் அதமம். திருடிப்பிழைத்தல் இறந்தவனுக்குச் சமம்.

उत्तमे क्षणकोपस्यान्मध्यमे घटिकाद्वयम् ।
अधमेस्यादहोरात्रं पापिष्ठेमरणान्तकः ।।

**உத்தமே க்ஷணகோபஸ்யாந்மத்யமே கடிகாத்வயம் ।**
**அதமேஸ்யாதஹோராத்ரம் பாபிஷ்டே மரணாந்தக: ॥**

கோபமானது உத்தமனிடத்தில் க்ஷணப்பொழுதும், மத்யமனிடத்தில் இரண்டு நாழிகையும் (48 நிமிடமும்). அதமனிடத்தில் ஒரு இரவும் பகலும், பாபியினிடத்தில் மரணம் வரையிலும் இருக்கும்.

आत्मबुद्धिसुखञ्चैव गुरुबुद्धिर्विशेषतः।
परबुद्धिर्विनाशाय स्त्रीबुद्धिः प्रलयङ्करी ।।

**ஆத்மபுத்திஸுகஞ்சைவ குருபுத்திர்விசேஷத: ।**
**பரபுத்திர்விநாசாய ஸ்த்ரீபுத்தி: ப்ரளயங்கரீ ॥**

தன் புத்தியைக்கொண்டு செயல்பட்டால் ஸுகத்தைத் தரும். குரு (வாக்கு) புத்திமதியின்படி நடந்தால் விசேஷ ஸுகத்தைக் கொடுக்கும். பிறர் புத்திமதி விநாசத்தை (அழிவை)க் கொடுக்கும். ஸ்த்ரீ புத்தி ப்ரளயத்தை ஏற்படுத்தும்.

अतिथौ तिष्ठति द्वारि ह्यपोगृह्णाति यो नरः ।
आपोशनं सुरापानमन्नं गोमांसभक्षणम् ।।

**ஆதிதௌதிஷ்டதி த்வாரி ஹ்யபோக்ருஹ்ணாதி யோ நர: ।**
**ஆபோசனம் ஸுராபானமன்னம் கோமாம்ஸபக்ஷணம் ॥**

வாசலில் இருக்கும் அதிதியை விட்டுவிட்டு சாப்பாட்டிற்கு முதலில் தீர்த்தம் வாங்குகிறவனுக்கு அந்த ஆபோசனம் கள்ளுக்குச் சமமாகும். அந்த அன்னம் பசுவின் இறைச்சிக்கு ஒப்பாகும்.

दर्शनाच्चित्तवैकल्यं स्पर्शनात्तुधनक्षयम् ।
संभोगात्किल्बिषं पण्यस्त्रीणां प्रत्यक्षराक्षसाम् ।।

**தர்சனாத்சித்தவைகல்யம் ஸ்பர்சனாத்து தனக்ஷயம் ।**
**ஸம்போகாத்கில்பிஷம் பண்யஸ்த்ரீணாம் ப்ரத்யக்ஷராக்ஷஸாம் ॥**

விலைமாதரை பார்த்தாலே மதிமயக்கம் ஏற்படும். மெய் தீண்டலால் பணவிரயம் ஏற்படும், நட்பால் பாபம் உண்டாகும். எனவே, விலைமாதர்கள் ப்ரத்யக்ஷ ராக்ஷஸிகளாவார்கள்.

**दासीमानधनंहन्ति हन्तिवेश्याधनाधिकम् ।**
**आयूंषिविधवाहन्ति सर्वंहन्ति पराङ्गना ।।**

**தாஸீமான தனம்ஹந்த்தி ஹந்த்தி வேச்யாதனாதிகம் ।**
**ஆயூம்ஷி விதவா ஹந்த்தி ஸர்வம் ஹந்த்திபராங்கனா ॥**

தாஸியின் நட்பு மானத்தை அழிக்கும். விலைமாதரின் நட்பு பணத்தைக் குறைக்கும் (அழிக்கும்), விதவையின் நட்பு ஆயுளைக் குறைக்கும், பிறர் மனைவியின் நட்பு எல்லாவற்றையும் அழிக்கும்.

**दुर्जनं काञ्चनं भेरीं दुष्टस्त्रीं दुष्टवाहनम् ।**
**इक्षुखण्डान् तिलान् चोरान् मर्दयेद्गुणवृद्धये ।।**

**துர்ஜனம் காஞ்சனம் பேரீம் துஷ்ட்டஸ்த்ரீம் துஷ்டவாஹனம் ।**
**இக்ஷுகண்டான் திலான் சோரான் மர்த்தயேத்குண வ்ருத்தயே ॥**

துர்ஜனனையும், பொன்னையும், பேரியையும், துஷ்ட ஸ்த்ரீயையும், முரட்டுக் குதிரையையும், கரும்புத் துண்டையும், எள்ளையும், திருடனையும் நற்குண அபிவிருத்தியின் பொருட்டு அடிக்கவேண்டும்.

**न गच्छेद्राजयुग्मं च न गच्छेद्ब्राह्मणत्रयम् ।**
**चतुश्शूद्रा न गच्छेयुर्नगच्छेद्वैश्यपञ्चकम् ।।**

**ந கச்சேத்ராஜயுக்மம் ச ந கச்சேத்ப்ராம்மணத்ரயம் ।**
**சதுச்சூத்ரா ந கச்சேயுர் ந கச்சேத்வைச்ய பஞ்சகம் ॥**

ஒரு காரியத்திற்குப் போகும்பொழுது இரண்டு க்ஷத்ரியரும், மூன்று ப்ராம்மணரும், நான்கு சூத்ரரும், ஐந்து வைச்யரும் போகலாகாது.

**उषश्शशंसगार्ग्यस्तु शकुनन्तुबृहस्पतिः ।**
**मनोजयन्तु माण्डव्यो विप्रवाक्यो जनार्दनः ।।**

உஷஸ்சசம்ஸகார்க்யஸ்து சகுனந்த்து ப்ருஹஸ்பதி: ।
மனோஜயந்து மாண்டவ்யோ விப்ரவாக்யோ ஜனார்தன: ॥

ஒரு காரியத்திற்கு போவதற்கு உஷ:காலம் (உதயத்திற்கு முன்பு) நல்லதென்று கார்க்ய முனிவரும், சகுனம் பார்க்கவேண்டும் என்று ப்ருஹஸ்பதியும், இப்பொழுது போனால் கார்யம் நடக்கும் என்ற மனோதைர்யமே போதுமென்று மாண்டவ்யரும், ப்ராம்மணன் போகலாமென்றால் போகலாம் என்று ஜனார்தனரும் சொன்னார்கள்.

शर्वरी दीपकश्चन्द्रः प्रभातोद्दीपको रविः।
त्रैलोक्य दीपकोधर्मस्सुपुत्रः कुलदीपकः ।।

சர்வரீ தீபகச்சந்த்ர: ப்ரபாதோத்தீபகோ ரவி: ।
த்ரைலோக்ய தீபகோ தர்மஸ்ஸுபுத்ர: குலதீபக: ॥

சந்த்ரன் இரவை பிரகாசிக்கச் செய்கிறான். சூரியன் மதியவேளையை (பகல் பொழுதை)ப் பிரகாசிக்கச் செய்கிறான். தர்மம் மூன்று உலகங்களையும் பிரகாசிக்கச் செய்யும். நல்ல மகன் குலத்தை பிரகாசிக்கச் செய்கிறான்.

सबन्धुर्यो हितेषुस्यात् सपितायस्तुपोषकः ।
ससखा यस्य विश्वासस्सभार्यायत्रनिर्वृतः ।।

ஸபந்துர்யோ ஹிதேஷுஸ்யாத் ஸபிதாயஸ்துபோஷக: ।
ஸஸகா யஸ்ய விச்வாஸஸ்ஸபார்யா யத்ர நிர்வ்ருத: ॥

நன்மையை விரும்புபவனே உறவினன், காப்பாற்றினவனே தகப்பன், விச்வாசமுள்ளவனே ஸ்னேஹிதன், ஸுகமுண்டாக்க வல்லவளே மனைவி.

अर्थानामार्जने दुःखं
आर्जितानाञ्चरक्षणे ।
नाशे दुःखं व्यये दुःखं
किमर्थं दुःख भाजनम् ।।

அர்த்தானாமார்ஜனே துக்கம்
ஆர்ஜிதானாம் ச ரக்ஷணே ।
நாசே துக்கம் வ்யயே துக்கம்
கிமர்த்தம் துக்க பாஜனம் ॥

பொருட்களை (பணத்தை) சம்பாதிப்பதில் கஷ்டம். சம்பாதித்ததைக் காப்பாற்றுவதில் கஷ்டம், அதன் அழிவிலும், செலவிலும் கஷ்டம். எனவே, கஷ்டத்திற்குக் காரணமான பணத்தினால் ப்ரயோஜனம் என்ன ?

**हरिणापि हरेणापि ब्रह्मणापि सुरैरपि ।**
**ललाट लिखिता रेखा परिमार्ष्टुं न शक्यते ।।**

**ஹரிணாபி ஹரேணாபி ப்ரம்மணாபி ஸுரைரபி ।**
**லலாட லிகிதாரேகா பரிமார்ஷ்டும் ந சக்யதே ॥**

விஷ்ணுவினாலும், சிவனாலும், ப்ரம்மாவினாலும் மற்ற தேவதைகளாலும் தலையெழுத்தைத் துடைக்கமுடியாது. எனவே, மனுஷ்யர்களால் ஆவது ஒன்றுமில்லை.

**घृतेन वर्धते बुद्धिः क्षीरेणायुष्यवर्धनम् ।**
**शाकेन वर्धते व्याधिः मांसं मांसेन वर्धते ।।**

**க்ருதேன வர்த்ததே புத்தி: க்ஷீரேணாயுஷ்ய வர்த்தனம் ।**
**சாகேன வர்த்ததே வ்யாதி: மாம்ஸம் மாம்ஸேன வர்த்ததே ॥**

ஆகாரத்தில் உரிய அளவு நெய் சேர்த்துக்கொள்வதால் புத்தியும், பசும்பால் அருந்துவதால் ஆயுளும், சாஸ்த்ரத்தில் சொல்லப்படாத காய்கறிகளைச் சாப்பிடுவதால், நோயும், மாமிசம் உண்பதால் மாமிசமும் வளருகின்றன.

**उत्साहस्साहसंधैर्यं बुद्धिश्शक्तिः पराक्रमः ।**
**षडेते यत्र तिष्ठन्ति तत्र देवोपि तिष्ठति ।।**

**உத்ஸாஹஸ்ஸாஹஸம்தைர்யம் புத்தி: சக்தி: பராக்ரம: ।**
**ஷடேதே யத்ர திஷ்டந்தி தத்ர தேவோபி திஷ்டதி ॥**

சந்தோஷம், ஸாஹஸம், தைர்யம், புத்தி, சக்தி, பராக்ரமம் ஆகிய இந்த ஆறும் யாரிடத்தில் இருக்கின்றதோ அவருக்கு தெய்வத்தின் உதவியும் இருக்கும்.

**असन्तुष्टो द्विजो नष्टस्सन्तुष्टः पार्थिवस्तथा ।**
**सलज्जा गणिका नष्टा निर्लज्जा च कुलाङ्गना ।।**

**அஸந்துஷ்டோ த்விஜோ நஷ்டஸ்ஸந்துஷ்ட: பார்த்திவஸ்ததா ।**
**ஸலஜ்ஜா கணிகா நஷ்டா நிர்லஜ்ஜா ச குலாங்கனா ॥**

போதும் என்ற மனமில்லாத ப்ராம்மணனும், போதும் என்ற மனமுள்ள க்ஷத்திரியனும், வெட்கமுள்ள விலைமாதரும், வெட்கமற்ற குலப்பெண்களும் கெடுவார்கள்.

**वेदमूलमिदंब्राह्मं भार्यामूलमिदंगृहम् ।**
**कृषिमूलमिदं धान्यं धनमूलमिदं जगत् ।।**

**வேதமூலமிதம்ப்ராம்மம் பார்யாமூலமிதம் க்ருஹம் ।**
**க்ருஷிமூலமிதம் தான்யம் தனமூலமிதம் ஜகத் ॥**

ப்ராம்மணருக்கு வேதம் முக்கியம், இல்லத்திற்கு மனைவி முக்கியம், தான்யத்திற்கு விவசாயம் முக்கியம், உலகத்திற்கு பணம் முக்கியம்.

**शिलास्थ गन्धलेपश्च मार्जालोच्छिष्ट भोजनम् ।**
**प्रतिबिम्बेक्षणं नीरे शक्रस्यापिश्रियं हरेत् ।।**

**சிலாஸ்த கந்தலேபச்ச மார்ஜாலோச்சிஷ்ட போஜனம் ।**
**ப்ரதிபிம்பேக்ஷணம் நீரே சக்ரஸ்யாபிச்ரியம் ஹரேத் ॥**

கல்லின்மேல் வைத்த சந்தனத்தை பூசிக்கொள்ளுதலும், பூனை தீண்டிய அன்னத்தைப் புசித்தலும், நீரில் தன் நிழலைப் பார்த்தலும் ஆகிய இவை இந்த்ரனாக இருந்தாலும் (அவர்களுடைய) செல்வத்தைப் போக்கும்.

**आजारजः खररजः तथा संमार्जनी रजः ।**
**स्त्रीणां पादरजश्चैव शक्रस्यापि श्रियं हरेत् ।।**

**ஆஜாரஜ: கரரஜ: ததா ஸம்மார்ஜனீ ரஜ: ।**
**ஸ்த்ரீணாம் பாதரஜச்சைவ சக்ரஸ்யாபி ச்ரியம் ஹரேத் ॥**

ஆட்டின் கால் தூளும் (ஆடு நடக்கும்போது ஏற்படும் புழுதி), கழுதையின் கால் தூளும், விளக்குமாறின் தூளும், பெண்களின் கால் தூளும் மற்றவர்கள் மீது படிந்தால் அவர்கள் இந்த்ரனாயினும், அவர்களது செல்வம் அழிந்துவிடும்.

**कृषितो नास्ति दुर्भिक्षं जपतो नास्ति पातकम् ।**
**मौनतः कलहो नास्ति नास्ति जागरतोभयम् ।।**

**க்ருஷிதோ நாஸ்தி துர்பிக்ஷம் ஜபதோ நாஸ்தி பாதகம் ।**
**மௌனத: கலஹோ நாஸ்தி நாஸ்தி ஜாகரதோபயம் ॥**

பயிரிடுபவனுக்கு உணவிற்குப் பஞ்சமில்லை. ஜபம் செய்பவனுக்கு பாபமில்லை. மௌனமாய் இருப்பவனுக்குக் கலகம் இல்லை. தூங்காமல் இருப்பவனுக்குப் பயமில்லை.

एकोपि गुणवान्पुत्रो निर्गुणैः किं शतैरपि ।
एकचन्द्र प्रकाशेन नक्षत्रैः किं प्रयोजनम् ।।

ஏகோபி குணவான்புத்ரோ நிர்குணை: கிம் சதைரபி ।
ஏகசந்த்ர ப்ரகாசேன நக்ஷத்ரை: கிம் ப்ரயோஜனம் ॥

நல்ல குணம் நிறைந்த மகன் ஒருவனே போதும். கெட்ட குணங்களுடைய மகன்கள் நூறுபேர்கள் இருந்தாலும் பலன் ஒன்றுமில்லை. ஒரு சந்த்ரனில்லாமல் நக்ஷத்ரங்கள் எத்தனை இருந்தாலும் ப்ரயோஜனம் ஒன்றுமில்லை.

प्रस्तापसदृशं वाक्यं स्वभावसदृशीं क्रियाम् ।
आत्मशक्ति समं कोपं यो जानाति स पण्डितः ।।

ப்ரஸ்தாபஸத்ருசம் வாக்யம் ஸ்வபாவஸத்ருசீம் க்ரியாம் ।
ஆத்மசக்தி ஸமம் கோபம் யோ ஜானாதி ஸ பண்டித: ॥

ப்ரஸ்தாபத்துக்கு தக்க வார்த்தையும், அவனவனுடைய ஸ்வபாவத்திற்குத் தக்க காரியமும், தன் சக்திக்குத் தக்க கோபமும் எவன் அறிவானோ அவனே பண்டிதன் ஆவான்.

विवादशीलां स्वयमर्थचोरिणीं
परानुकूलां परिहास भाषिणीम् ।
अग्राशिनीमन्यगृह प्रवेशिनीं
त्यजन्ति भार्यां दशपुत्रमातरम् ।।

விவாதசீலாம் ஸ்வயமர்த்தசோரிணீம்
பரானுகூலாம் பரிஹாஸ பாஷிணீம் ।
அக்ராசினீமன்யக்ருஹ ப்ரவேசினீம்
த்யஜந்தி பார்யாம் தசபுத்ர மாதரம் ॥

சண்டையிடும் குணமுள்ளவளும், தன் வீட்டு சொத்தையே திருடிவைத்துக் கொள்பவளும், மற்றவர்களுக்கு அனுகூலமானவளும், எப்பொழுதும் பரிஹாஸம் செய்பவளும், கணவன் சாப்பிடுவதற்கு முன்பே ஆஹாரம் சாப்பிடுபவளும், எப்பொழுதும் பக்கத்திலுள்ள வீடுகளுக்குச் செல்பவளும் ஆகிய இப்படிப்பட்ட மனைவியை பத்து குழந்தைகளைப் பெற்றுத்தந்திருந்தாலும் அவளை விடவேண்டும்.

कार्येषुदासी करणेषुमन्त्री
रूपे च लक्ष्मी क्षमया धरित्री ।
स्नेहे च माता शयने तु वेश्या
षट्कर्मयुक्ता कुलधर्मपत्नी ।।

கார்யேஷு தாஸீ கரணேஷு மந்த்ரீ
ரூபே ச லக்ஷ்மீ க்ஷமயா தரித்ரீ ।
ஸ்னேஹே ச மாதா சயனே து வேச்யா
ஷட்கர்மயுக்தா குலதர்மபத்னீ ॥

வீட்டு வேலையில் பணிப்பெண் போலவும், கார்யாலோசனையில் மந்திரி போலவும், ரூபத்தில் மஹாலக்ஷ்மிபோலவும், பொறுமையில் பூமிதேவியைப் போலவும், ஸ்னேஹத்தில் தாய் போலவும், படுக்கையில் வேசி போலவும் ஆகிய இந்த ஆறு விஷயங்களில் கணவனிடத்தில் நல்ல குலப்பெண்ணானவள் இருப்பாள்.

शतनिष्को धनाढ्यश्च शतग्रामेण भूपतिः ।
शताश्व क्षत्रियोराजा शतश्लोकेन पण्डितः ।।

சதநிஷ்கோ தனாட்யச்ச சதக்ராமேண பூபதி :
சதாச்வ க்ஷத்ரியோராஜா சதச்லோகேன பண்டித: ॥

நூறு வராகன் உள்ளவன் பணக்காரன் எனப்படுவான். நூறு க்ராமங்களுக்கு அதிபதியாய் இருப்பவன் பூபதி எனப்படுவான். நூறு குதிரைகளை உடையவன் ராஜா எனப்படுவான். நூறு ச்லோகங்களை (பழைய முறைப்படி இலக்கணத்தோடு) படித்தவன் பண்டிதன் எனப்படுவான்.

शकटं पञ्चहस्तेषु दशहस्तेषु वाजिनम् ।
गजं हस्त सहस्रेण दुष्टं दूरेण वर्जयेत् ।।

சகடம் பஞ்சஹஸ்தேஷு தசஹஸ்தேஷு வாஜினம் ।
கஜம் ஹஸ்த ஸஹஸ்ரேண துஷ்டம் தூரேண வர்ஜயேத் ॥

வண்டிக்கு ஐந்து முழமும், குதிரைக்குப் பத்து முழமும், யானைக்கு ஆயிரம் முழமும், துஷ்டனுக்கு மிகவும் தூரமாயும் ஒதுங்கிப் போகவேண்டும்.

अनभ्यासे विषं शास्त्रं अजीर्णे भोजनं विषम् ।
दरिद्रस्य विषं गोष्ठी वृद्धस्य तरुणी विषम् ।।

அனப்யாஸே விஷம் சாஸ்த்ரம் அஜீர்ணே போஜனம் விஷம் ।
தரித்ரஸ்ய விஷம் கோஷ்டீ வ்ருத்தஸ்ய தருணீ விஷம் ॥

அப்யாஸம் இல்லாதவனுக்கு சாஸ்த்ரம் விஷம். ஜீர்ணமாகாதபோது உணவு விஷம். தரித்ரனுக்கு நல்ல கோஷ்டீ விஷம். கிழவனுக்கு சிறுவயது மனைவி விஷம்.

जिह्वाग्रे वर्ततेलक्ष्मीर्जिह्वाग्रेमित्र बान्धवाः ।
जिह्वाग्रे बन्धनप्राप्तिः जिह्वाग्रे मरणं ध्रुवम् ।।

ஜிஹ்வாக்ரே வர்த்ததேலக்ஷ்மீர்ஜிஹ்வாக்ரே மித்ரபாந்தவா: ।
ஜிஹ்வாக்ரே பந்தன ப்ராப்தி: ஜிஹ்வாக்ரே மரணம் த்ருவம் ॥

நாக்கினாலேயே சம்பத்து உண்டாகும். நாக்கினாலேயே நண்பர்கள் மற்றும் உறவினர்கள் வருவார்கள். நாக்கினாலேயே விலங்கு நேரிடும். நாக்கினாலேயே மரணம் நேரிடும்.

अदान दोषेण भवेद्दरिद्रो
दारिद्रदोषेण करोति पापम् ।
पापादवश्यं नरकं प्रयाति
पुनर्दरिद्रः पुनरेव पापी ।।

அதான தோஷேண பவேத்தரித்ரோ
தாரித்ரதோஷேண கரோதி பாபம் ।
பாபாதவச்யம் நரகம் ப்ரயாதி
புனர்தரித்ர: புனரேவ பாபீ ॥

ஒருவன் முற்பிறப்பில் ஒருவருக்கும் கொடாத தோஷத்தினால் தரித்ரனாகப் பிறக்கிறான். அந்த தாரித்ர தன்மையால் பாபம் செய்வான். பாபத்தினால் நரகம் நேரிடும். அந்த நரகத்திலிருந்து திரும்பவும் தரித்ரனாகப் பிறந்து திரும்பவும் துன்பப்படுவான்.

अतिथिर्बालकश्चैव स्त्रीजनो नृपतिस्तथा ।
एतेवित्तं न जानन्ति जामाताचैव पञ्चमः ।।

அதிதிர்பாலகச்சைவ ஸ்த்ரீஜனோ ந்ருபதிஸ்ததா ।
ஏதேவித்தம் ந ஜானந்தி ஜாமாதாசைவ பஞ்சம: ॥

விருந்தினர், குழந்தை, பெண்கள், ராஜா, மருமகன் ஆகிய இந்த ஐவரும் பணத்தின் இருப்பையும், இல்லாமையையும் பற்றி அறியமாட்டார்கள்.

**कुदेशञ्च कुमित्रञ्च कुराज्यं च कुबान्धवम् ।**
**कुभार्यञ्च कुराष्ट्रञ्च दूरतः परिवर्जयेत् ।।**

**குதேசஞ்ச குமித்ரஞ்ச குராஜ்யம் ச குபாந்தவம் ।**
**குபார்யஞ்ச குராஷ்ட்ரஞ்ச தூரத: பரிவர்ஜயேத் ॥**

அல்ப தேசம், அல்ப ஸ்நேஹிதன், அல்ப ராஜ்யம், அல்ப உறவினன், அல்ப மனைவி, அல்ப பட்டணம் ஆகிய இவைகளை விட்டு விலகிவிடவேண்டும்.

**स्त्रीणां द्विगुणमाहारं बुद्धिश्चापि चतुर्गुणम् ।**
**साहसं षड्गुणं चैव कामोष्टगुणमुच्यते ।।**

**ஸ்த்ரீணாம் த்விகுணமாஹாரம் புத்திச்சாபி சதுர்குணம் ।**
**ஸாஹஸம் ஷட்குணம் சைவ காமோஷ்டகுணமுச்யதே ॥**

பெண்களுக்கு ஆண்களைக் காட்டிலும் ஆகாரம் (உணவு) இரண்டு பங்கும், அறிவு நான்கு பங்கும், திறமை ஆறு பங்கும், ஆசை எட்டு பங்கும் அதிகம்.

**राजानां राष्ट्रजं पापं राजपापं पुरोहितम् ।**
**भर्तारं स्त्रीकृतं पापं शिष्यपापं गुरुं व्रजेत् ।।**

**ராஜானாம் ராஷ்ட்ரஜம் பாபம் ராஜபாபம் புரோஹிதம் ।**
**பர்த்தாரம் ஸ்த்ரீக்ருதம் பாபம் சிஷ்யபாபம் குரும் வ்ரஜேத் ॥**

தன் தேசத்தில் ஜனங்கள் (மக்கள்) செய்யும் பாபம் ராஜாவை அடையும். ராஜா செய்யும் பாபம் புரோகிதனை அடையும். பெண்டாட்டி செய்யும் பாபம் புருஷனை அடையும். சிஷ்யன் செய்யும் பாபம் குருவை அடையும்.

**गीता वाद्यो तथा नृत्ते सङ्ग्रामे रिपुसङ्कटे ।**
**आहारे व्यवहारे च त्यक्तलज्जः सुखी भवेत् ।।**

**கீதா வாத்யோ ததா ந்ருத்தே ஸங்க்ராமே ரிபுஸங்கடே ।**
**ஆஹாரே வ்யவஹாரே ச த்யக்தலஜ்ஜ: ஸுகீ பவேத் ॥**

பாடும்போதும், வாத்யம் வாசிக்கும்போதும், நாட்டியம் ஆடும்போதும், எதிரியுடன் சண்டையிடும்போதும், சாப்பிடும் போதும், வ்யவஹாரம் பேசும்போதும் வெட்கத்தை விட்டவனுக்கு சுகம் கிடைக்கும்.

**रूपयौवन संपन्ना विशालकुल संभवाः ।**
**विद्याहीना न शोभन्ते निर्गन्ध इव किंशुकाः ।।**

**ரூபயௌவன ஸம்பன்னா விசாலகுல ஸம்பவா: ।**
**வித்யாஹீனா ந சோபந்தே நிர்கந்த இவ கிம்சுகா: ॥**

நல்ல அழகும், இளம் வயதும், நல்ல குலத்தில் பிறந்து வசதியாய் இருந்தாலும், படிப்பறிவில்லையெனில் ப்ரகாசிக்கமாட்டார்கள். கல்யாணமுருங்கைப் பூவானது எவ்வளவு சிகப்பாகவும், அழகாகவும் இருந்தபோதிலும் வாசனை இல்லாததால் ப்ரகாசிக்காததுபோல.

**त्यजेदेकं कुलस्यार्थे ग्रामस्यार्थे कुलंत्यजेत् ।**
**ग्रामं जनपदस्यार्थे आत्मार्थे पृथिवीं त्यजेत् ।।**

**த்யஜேதேகம் குலஸ்யார்த்தே க்ராமஸ்யார்த்தே குலம் த்யஜேத் ।**
**க்ராமம் ஜனபதஸ்யார்த்தே ஆத்மார்த்தே ப்ருதிவீம் த்யஜேத் ॥**

ஒரு குலத்திற்கு ஹானி உண்டாகும்பொழுது அதற்குக் காரணமாக உள்ள ஒருவனை விடவேண்டும். ஒரு க்ராமத்திற்கு அழிவு ஏற்படும்பொழுது அதற்குக் காரணமாகவுள்ள ஒரு குலத்தை விடவேண்டும். ஒரு தேசத்திற்கு அழிவு ஏற்படும் பொழுது அதற்குக் காரணமாக உள்ள ஒரு கிராமத்தை விடவேண்டும். தனக்கு தொந்தரவு வரும்பொழுது தனக்குள்ள பூமியை விடவேண்டும்.

**कोकिलानां स्वरं रूपं पातिव्रत्यन्तुयोषिताम् ।**
**विद्यारूपं विरूपाणां क्षमारूपं तपस्विनाम् ।।**

**கோகிலானாம் ஸ்வரம் ரூபம் பாதிவ்ரத்யந்துயோஷிதாம் ।**
**வித்யாரூபம் விரூபாணாம் க்ஷமாரூபம் தபஸ்வினாம் ॥**

குயிலுக்குக் குரலும், பெண்களுக்குக் கற்பும், அழகில்லாதவர்களுக்குக் கல்வியும், தபஸ்விகளுக்குப் பொருமையும் அழகாம்.

दैवाधीनं जगत्सर्वं मन्त्राधीनन्तुदैवतम् ।
तन्मन्त्रं ब्राह्मणाधीनं ब्राह्मणो मम देवता ।।

தைவாதீனம் ஜகத்ஸர்வம் மந்த்ராதீனந்து தைவதம் ।
தன்மந்த்ரம் ப்ராம்மணாதீனம் ப்ராம்மணோ மம தேவதா ॥

உலகம் முழுவதும் தைவத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. தைவம் மந்த்ரத்திற்குக் கட்டுப்பட்டிருக்கிறது. மந்த்ரம் ப்ராம்மணனுக்குக் கட்டுப்பட்டிருக்கிறது. (எனவே) ப்ராம்மணன் எனக்கு தைவம் என்று கூறுகிறார் ஸ்ரீக்ருஷ்ணபகவான்.

पिबन्ति नद्यः स्वयमेव नांभः
खादन्ति न स्वादु फलानि वृक्षाः ।
पयोधरास्सस्यमदन्तिनैव
परोपकाराय सतां विभूतयः ।।

பிபந்தி நத்ய: ஸ்வயமேவ நாம்ப:
காதந்தி ந ஸ்வாது பலானி வ்ருக்ஷா: ।
பயோதராஸ்ஸஸ்யமதந்திநைவ
பரோபகாராய ஸதாம் விபூதய: ॥

நதிகள் தண்ணீரைத்தானே குடிப்பதில்லை. மரங்கள் பழங்களைத் தானே சாப்பிடுவதில்லை. மேகங்கள் மழை பொழிவித்து விளைவித்த பயிர்களை அவைகளே உண்ணாது. அதுபோல உலகத்திலுள்ள ஸத்புருஷர்களுடைய ஐச்வர்யங்கள் (பணங்கள்-சொத்துகள்) பரோபகாரத்தின் பொருட்டே ஆகும்.

पक्षीणां बलमाकाशं मत्स्यानामुदकं बलम् ।
दुर्बलस्य बलोराजा बालानां रोदनं बलम् ।।

பக்ஷீணாம் பலமாகாசம் மத்ஸ்யானாமுதகம் பலம் ।
துர்பலஸ்ய பலோராஜா பாலானாம் ரோதனம் பலம் ॥

பக்ஷிகளுக்கு ஆகாசத்தில் பலம் அதிகம், மீன்களுக்கு நீரில் பலம் அதிகம், பலமில்லாதவர்களுக்கு ராஜா பலம், குழந்தைகளுக்கு அழுகையே பலம். (காரிய சாதனத்திற்காகக் குழந்தை அழும்)

वृश्चिकस्य विषं पुच्छं मक्षिकस्य विषं शिरः ।
तक्षकस्य विषं दंष्ट्रा सर्वाङ्गं दुर्जने विषम् ।।

வ்ருச்சிகஸ்ய விஷம் புச்சம் மக்ஷிகஸ்ய விஷம் சிர: ।
தக்ஷகஸ்ய விஷம் தம்ஷ்ட்ரா ஸர்வாங்கம் துர்ஜனே விஷம் ॥

தேளுக்குக் கொடுக்கில் விஷம். ஈக்குத் தலையில் விஷம். பாம்பிற்குப் பல்லில் விஷம். துர்ஜனனுக்கு (கெட்டவனுக்கு) உடல் முழுவதும் விஷம்.

पुस्तकेषु च या विद्या परहस्ते च यद्धनम् ।
समयेतु परिप्राप्ते न साविद्या न तद्धनम् ।।

புஸ்தகேஷு ச யா வித்யா பரஹஸ்தே ச யத்தனம் ।
ஸமயேது பரிப்ராப்தே ந ஸாவித்யா ந தத்தனம் ॥

புஸ்தகத்துப் படிப்பும், பிறர் கைப்பொருளும் வேளைக்கு உதவாத காரணத்தால் அப்படிப்பட்ட படிப்பும் படிப்பல்ல, பிறர் கைப்பொருளும் பொருளல்ல.

नश्यत्यनायकं कार्यः तथैव शिशुनायकम् ।
स्त्रीनायकं तथोन्मत्त नायकम् बहुनायकम् ।।

நச்யத்யநாயகம் கார்ய: ததைவ சிசுநாயகம் ।
ஸ்த்ரீநாயகம் ததோன்மத்த நாயகம் பஹுநாயகம் ॥

யஜமானனில்லாத காரியமும், விஷயம் தெரியாத சிறியவனைத் தலைவராகக் கொண்டு செய்யும் காரியமும், பெண்ணையும், பயித்தியக்காரனையும், பலரையும் யோசனை கேட்டு அனைவரின் யோசனையையும் செயல்படுத்தும் பொருட்டு ஈடுபடும் காரியமும் கெடும்.

अभ्यासानुसरीविद्या बुद्धिःकर्मानुसारिणी ।
उद्योगसारिणी लक्ष्मी फलं भाग्यानुसारिणी ।।

அப்யாஸானுஸரீவித்யா புத்தி:கர்மானுஸாரிணீ ।
உத்யோகஸாரிணீ லக்ஷ்மீ பலம் பாக்யானுஸாரிணீ ॥

படிப்பு அப்யாஸத்திற்குத் தக்கதாக இருக்கும். அறிவு கர்மாவிற்கு அனுகுணமாக இருக்கும். செல்வம் ஒருவன் பார்க்கும் வேலையின் பொருட்டு இருக்கும். பலம் பாக்யத்திற்குத் தக்கதாயிருக்கும்.

वसन्ता यौवना वृक्षाः पुरुषाधनयौवनाः ।
सौभाग्ययौवना नार्यो बुधाविद्यासु यौवनाः ।।

வஸந்தா யௌவனா வ்ருக்ஷா: புருஷாதனயௌவனா: ।
ஸௌபாக்யயௌவனா நார்யோ புதாவித்யாஸு யௌவனா: ॥

மரங்களுக்கு இளமை வஸந்தகாலம்; புருஷனுக்கு இளமை பணம்; பெண்களுக்கு இளமை ஸௌபாக்யம்; பண்டிதர்களுக்கு இளமை படிப்பே.

वृथा वृष्टिस्समुद्रे च वृथातृप्ते तु भोजनम् ।
वृथा धनपतौदानं दारिद्र्येयौवनं वृथा ।।

வ்ருதா வ்ருஷ்டிஸ்ஸமுத்ரே ச வ்ருதா த்ருப்தே து போஜனம் ।
வ்ருதா தநபதௌதானம் தாரித்ர்யே யௌவநம் வ்ருதா ॥

கடலில் மழை பெய்தலும்; பசியில்லாதவனுக்கு உணவு போடுதலும்; பணக்காரனுக்குத் தானம் செய்தலும்; தரித்திரனுடைய இளமைப்பருவம் ஆகிய இவை அனைத்தும் ப்ரயோஜனமற்றது

अर्थागृहेनिवर्तन्ते स्मशानेमित्रबान्धवाः ।
सुकृतं दुष्कृतञ्चैव गच्छन्तमनुगच्छति ।।

அர்த்தாக்ருஹேநிவர்தந்தே ஸ்மசாநேமித்ரபாந்தவா: ।
ஸுக்ருதம் துஷ்க்ருதஞ்சைவ கச்சந்தமனுகச்சதி ॥

பணம் வீட்டுடன் நின்றுவிடும்; சுடுகாடுவரை (மகனும்) நண்பர்களும், உறவினர்களும் வருவார்கள்; செய்யும் புண்ணியமும் - பாவமும் மட்டுமே இறுதிவரை வரும். (எனவே, தர்மம் செய்யவேண்டும்.)

तस्करस्यवधो दण्डोदासीदण्डस्तुमुण्डनम् ।
भार्यादण्डं पृथक्छय्या मित्रदण्डमभाषणम् ।।

தஸ்கரஸ்யவதோ தண்டோ தாஸீதண்டஸ்து முண்டனம் ।
பார்யாதண்டம் ப்ருதக்ச்சய்யா மித்ரதண்டமபாஷணம் ॥

திருடருக்குக் கொலையே தண்டனை, தாஸிக்குத் தலையை மொட்டை அடித்தலே தண்டனை. பெண்டாட்டிக்குத் தனியாகப் படுப்பதே தண்டனை. நண்பனுக்குப் பேசாமலிருப்பதே தண்டனை.

पिता च ऋणवान् शत्रुर्माता च व्यभिचारिणी ।
भार्यारूपवती शत्रुः पुत्रश्शत्रुरपण्डितः ।।

பிதா ச ருணவான் சத்ருர்மாதா ச வ்யபிசாரிணீ ।
பார்யாரூபவதீ சத்ரு: புத்ரச்சத்ருரபண்டித: ॥

கடன் வைத்த தகப்பன் எதிரி; நடத்தை தவறிய தாய் எதிரி; அழகற்ற மனைவி எதிரி; படிக்காத பிள்ளை (தகப்பனாருக்கு) எதிரி.

पितारक्षति कौमारे भर्तारक्षति यौवने ।
रक्षन्ति वार्धकेपुत्रा न स्त्रीस्वातन्त्र्यमर्हति ।।

பிதாரக்ஷதி கௌமாரே பர்த்தாரக்ஷதி யௌவனே ।
ரக்ஷந்தி வார்த்தகே புத்ரா ந ஸ்த்ரீஸ்வாதந்த்ர்யமர்ஹதி ॥

பெண்களை குழந்தைப் பருவத்தில் தகப்பனாரும், இளமைப் பருவத்தில் கணவனும், முதுமை காலத்தில் பிள்ளைகளும் காப்பாற்றுவர்கள். எனவே, ஒருபொழுதும் பெண்கள் தனியாக இருக்கக்கூடாது.

अग्निहोत्रं गृहं क्षेत्रं गर्भिणी वृद्धबालकौ ।
रिक्तहस्तेन नोपेयाद्राजानन्दैवतं गुरुम् ।।

அக்நிஹோத்ரம் க்ருஹம் க்ஷேத்ரம் கர்ப்பிணீ வ்ருத்தபாலகௌ ।
ரிக்தஹஸ்தேன நோபேயாத்ராஜானந்தைவதம் குரும் ॥

அக்னிஹோத்ரம் செய்கின்ற இடத்திற்குச் செல்லும்பொழுதும், புண்ய க்ஷேத்திரத்திற்குச் செல்லும்பொழுதும், கர்ப்பிணி, வயதானவர், சிறுவர், ராஜா, தெய்வ ஆலயம், குரு ஆகியோரைக் காணச்செல்லும்பொழுதும் வெறுங்கையோடு (ஒன்றுமில்லாமல்) செல்லக்கூடாது. மாறாக அக்னிஹோத்ரம் நடைபெறுகின்ற இடத்திற்குச் சென்றால் சமித்தும் (அரசங்குச்சியும்), மற்ற இடங்களுக்குச் செல்லும் பொழுது பழம் முதலியவைகளுடனும் செல்லவேண்டும்.

अहोप्रकृतिसादृश्यं श्लेष्मणो दुर्जनस्य च ।
मधुरैः कोपमायाति कटुकैरुपशाम्यते ।।

அஹோப்ரக்ருதிஸாத்ருச்யம் ச்லேஷ்மணோ துர்ஜனஸ்ய ச ।
மதுரை: கோபமாயாதி கடுகைருபசாம்யதே ॥

கெட்டவனுக்குக் கபமானது ஸமமானதாக இருக்கும். எப்படியெனில், கபமானது இனிப்பு சாப்பிடுவதால் வளர்ச்சியையும்; கசப்பு சாப்பிடுவதால் அழிவையும் எப்படி அடையுமோ அப்படி கெட்டவனானவன் நல்ல வார்த்தைகளால் கோபத்தையும்; கடுஞ்சொற்களால் பயத்தையும் அடைவான்.

**जनिताचोपनीता च यश्चविद्यां प्रयच्छति ।**
**अन्नदाता भयत्राता पञ्चैते पितरः स्मृताः ।।**

**ஜனிதாசோபனீதா ச யச்சவித்யாம் ப்ரயச்சதி !**
**அன்னதாதா பயத்ராதா பஞ்சைதே பிதர: ஸ்ம்ருதா: ॥**

தன்னைப் பெற்றவனும், உபநயனம் செய்வித்தவனும், படிப்பித்தவனும், உணவளித்துக் காப்பாற்றியவனும், பயத்தை ஒழித்தவனும் ஆகிய இந்த ஐவரும் பிதாக்கள் ஆவார்கள்.

**दरिद्राय कृतं दानं शून्यदेवालयार्चना ।**
**अनाथप्रेतसंस्कारमश्वमेधसमंविदुः ।।**

**தரித்ராய க்ருதம் தானம் சூன்யதேவாலயார்சனா ।**
**அநாதப்ரேதஸம்ஸ்காரமச்வமேதஸமம்விது: ॥**

ஏழைக்குக் கொடுக்கும் தானமும், பூஜையில்லாத கோயிலுக்குப் பூஜை செய்ய ஏற்பாடு செய்தலும், திக்கற்ற பிணத்திற்கு ஈமக்ரியைகளைச் செய்தலுமாகிய இவை மூன்றும் அச்வமேத யாகம் செய்ததற்குச் சமமாகும்.

**दातृत्वं प्रियवक्तृत्वं धीरत्वमुचितज्ञता ।**
**अभ्यासेन न लभ्यन्ते चत्वारस्सहजागुणाः ।।**

**தாத்ருத்வம் ப்ரியவக்த்ருத்வம் தீரத்வமுசிதக்ஞதா ।**
**அப்யாஸேன ந லப்யந்தே சத்வாரஸ்ஸஹஜாகுணா: ॥**

ஈகையும், இன்பச்சொல்லும், தைரியமும், நன்மை-தீமைகளை அறியும் அறிவும் ஆகிய இந்த நான்கும் தன்னுடன் பிறந்த குணங்களாகவே இருக்கவேண்டுமேயன்றி கற்றுக்கொண்டு வருவதல்ல.

**अभ्युक्त्वामलकंपत्थ्यं भुक्त्वा तु बदरीफलम् ।**
**कपित्थं सर्वदापत्थ्यं कदली न कदाचन ।।**

அப்யுக்த்வாமலகம் பத்யம் புக்த்வா து பதரீபலம் ।
கபித்தம் ஸர்வதாபத்யம் கதளீ ந கதாசன ॥

வெறும் வயிற்றில் நெல்லிக்காயும், சாப்பிட்ட பிறகு இலந்தைப் பழமும்; எப்பொழுதும் விளாம்பழமும் புசித்தால் சரீரத்திற்கு ஆரோக்கியம் உண்டாகும். வாழைப்பழம் ஒருபொழுதும் பத்தியமாகாது.

**श्लोकार्धेन प्रवक्ष्यामि यदुक्तं ग्रन्थकोटिभिः ।**
**परोपकारः पुण्याय पापाय परपीडनम् ।।**

ச்லோகார்தேன ப்ரவக்ஷ்யாமி யதுக்தம் க்ரந்தகோடிபி: ।
பரோபகார: புண்யாய பாபாய பரபீடனம் ॥

பல நீதி மற்றும் தர்மசாஸ்த்ர நூல்களில் சொல்லப்பட்ட விஷயத்தை நான் இந்த அரை ஸ்லோகத்தினால் தெரிவிக்கிறேன். அதாவது மற்றவர்களுக்கு உதவி செய்தால் புண்ணியமும், தொந்தரவு செய்தால் பாவமும் ஏற்படும்.

**दुष्टभार्या शठंमित्रं भृत्योहङ्कारसंयुतः ।**
**ससर्पे च गृहेवासो मृत्युरेव न संशयः ।।**

துஷ்டபார்யா சடம்மித்ரம் ப்ருத்யோஹங்காரஸம்யுத: ।
ஸஸர்பே ச க்ருஹேவாஸோ ம்ருத்யுரேவ ந ஸம்சய: ॥

கெட்ட மனைவியும், கெட்ட நண்பனும், அஹங்காரமுள்ள வேலைக்கார னும், பாம்பு உள்ள வீட்டில் வஸித்தல் ஆகிய இவை ஒருவனுக்கு நிச்சயம் மரணத்தை உண்டாக்கும்.

**यस्मिन्देशे न सन्मानो न प्रीतिर्नचबान्धवाः ।**
**न विद्या नास्ति धनिका न तत्र दिवसं वसेत् ।।**

யஸ்மின்தேசே ந ஸன்மானோ ந ப்ரீதிர் ந ச பாந்தவா: ।
ந வித்யா நாஸ்தி தனிகா ந தத்ர திவஸம் வஸேத் ॥

எந்த தேசத்தில் ஸன்மானமும், ப்ரியமும், உறவினர்களும், படிப்பும், பணக்காரரும் இல்லையோ அவ்விடத்தில் ஒருநாள்கூட வஸிக்கக்கூடாது.

**अग्निहोत्रफलोवेदा दत्तभुक्तफलंधनम् ।**
**रति पुत्रफला दाराश्शीलवृत्त फलं श्रुतम् ।।**

**அக்னிஹோத்ர பலோவேதா தத்தபுக்தபலம் தனம் ।**
**ரதிபுத்ர பலாதாராச்சீலவ்ருத்தா பலம் ச்ருதம் ॥**

வேதாத்யானம் செய்வதற்கு அக்னிஹோத்ரம் செய்தலும், பணம் இருப்பதற்கு தானம், போகங்களும்; மனைவி இருப்பதற்கு ஸம்போகம், குழந்தைகளும்; சாஸ்த்ரங்களைக் கேட்டதற்கு ஆசாரமுடையவனாக இருப்பதும் பலமாகும்.

**स्वगृहे पूज्यते मूर्खः स्वग्रामे पूज्यते प्रभुः ।**
**स्वदेशे पूज्यते राजा विद्वान्सर्वत्रपूज्यते ।।**

**ஸ்வக்ருஹே பூஜ்யதே மூர்க்க: ஸ்வக்ராமே பூஜ்யதே ப்ரபு: ।**
**ஸ்வதேசே பூஜ்யதே ராஜா வித்வான் ஸர்வத்ரபூஜ்யதே ॥**

தன் வீட்டில் மட்டும் மூர்க்கனும்; தனது க்ராமத்தில் மட்டும் ப்ரபுக்களும் (பணக்காரர்களும்); தனது தேசத்தில் மட்டும் ராஜாவும்; வித்வான் (நல்ல படிப்பறிவுடையவர்) எல்லா இடத்திலும் பூஜிக்கப்படுவர்.

**कुचेलिनं दन्तमलापहारिणं**
**बह्वाशिनं निष्ठुरवाक्यभाषिणम् ।**
**सूर्योदयेचास्तमये च शायिनं**
**विमुञ्चति श्रीरपि चक्रपाणिनम् ।।**

**குசேலினம் தந்தமலாபஹாரிணம்**
**பஹ்வாசிநம் நிஷ்ட்டுர வாக்யபாஷிணம் ।**
**ஸூர்யோதயே சாஸ்தமயே ச சாயினம்**
**விமுஞ்சதி ஸ்ரீரபி சக்ரபாணினம் ॥**

அழுக்காடை உடுப்பவனும், பல் துலக்காதவனும், பெரும் திண்டிக்காரனும், கடுஞ்சொற்களையே சொல்லுபவனும், ஸூர்யோதய காலத்திலும் (காலையிலும்), ஸூர்ய அஸ்தமன காலத்திலும் (மாலையிலும்) தூங்குகிறவனும் ஆகிய இவர்கள் மற்ற குணங்களால் விஷ்ணுவிற்குச் சமமானாலும் அவர்களை லக்ஷ்மிதேவியானவள் விட்டு நீங்குவாள்.

**दीर्घशृङ्गमनड्वाहं निर्लज्जां विधवांस्त्रियाम् ।**
**शूद्रमक्षरसंयुक्तं दूरतः परिवर्जयेत् ।।**

**தீர்கச்ருங்கமனட்வாஹம் நிர்லஜ்ஜாம் விதவாம் ஸ்த்ரியாம் ।**
**சூத்ரமக்ஷரஸம்யுக்தம் தூரத: பரிவர்ஜயேத் ॥**

நீண்ட கொம்புள்ள எருதையும், வெட்கமற்ற விதவையையும், படிப்புள்ள சதுர்த்தனையும் தூரத்திலேயே விடவேண்டும்.

मुखंपद्मदलाकारं वचश्चन्दनशीतलम् ।
हत्कर्तरिसमंचातिविनयं धूर्तलक्षणम् ।।

முகம்பத்மதளாகாரம் வசஸ்சந்தன சீதளம் ।
ஹ்ருத்கர்த்தரிஸமம்சாதிவினயம் தூர்த்தலக்ஷணம் ॥

தாமரை இதழ்போல் முகப்பொலிவும், ஸ்ரீகந்தம்போல குளிர்ந்த வார்த்தையும், கத்தரிக்கோல் போன்ற மனதும், அளவிற்கு அதிகமான அடக்கமுள்ளவன்போல் இருப்பதும் ஆகிய இவை அனைத்தும் கெட்டவனுக்கு லக்ஷணங்களாகும்.

मातृहीनशिशुजीवनं वृधा
कान्तहीन नवयौवनं वृधा ।
शान्तिहीन तपसः फलं वृधा
तिन्त्रिणीरस विहीन भोजनम् ।।

மாத்ருஹீனசிசுஜீவனம் வ்ருதா
காந்தஹீன நவயௌவனம் வ்ருதா ।
சாந்திஹீன தபஸ: பலம் வ்ருதா
திந்த்ரிணீரஸ விஹீன போஜனம் ॥

தாயில்லாத குழந்தையும், கணவனில்லாத யௌவனமும், பொறுமையில்லாத தவமும், புளியில்லாத உணவும் வீண் ஆகும்.

वस्त्रमुख्यस्त्वलङ्कारः प्रियमुख्यन्तु भोजनम् ।
गुणमुख्याभवेन्नारी विद्यामुख्यस्तु ब्राह्मणः ।।

வஸ்த்ரமுக்யஸ்த்வலங்கார: ப்ரியமுக்யந்து போஜனம் ।
குணமுக்யாபவேன்நாரீ வித்யாமுக்யஸ்து ப்ராம்மண: ॥

அலங்காரத்திற்குத் துணிகளும், போஜனத்திற்கு ப்ரீதியும், ஸ்த்ரீகளுக்கு குணமும், ப்ராம்மணனுக்குப் படிப்பும் முக்கியமாம்.

अमृतं सद्गुणाभार्या अमृतंबालभाषितम् ।
अमृतं राजसन्मानममृतं मानभोजनम् ।।

அம்ருதம் ஸத்குணாபார்யா அம்ருதம் பாலபாஷிதம் ।
அம்ருதம் ராஜஸந்மானமம்ருதம் மானபோஜநம் ॥

குணவதியான பெண்ணும், சிறுவர்களுடைய (மழலை)ச் சொல்லும், ராஜ ஸந்மானமும், மானமான போஜனமும் ஆகிய இவை அனைத்தும் அம்ருதத்திற்கு ஒப்பானதாகும்

दुर्वृत्तो वा सुवृत्तो वा मूर्खः पण्डित एव वा ।
काषाय दण्डमात्रेण यतिः पूज्यो न संशयः ।।

துர்வ்ருத்தோ வா ஸுவ்ருத்தோ வா மூர்க்க: பண்டித ஏவ வா ।
காஷாய தண்டமாத்ரேண யதி: பூஜ்யோ ந ஸம்சய: ॥

யதியானவர், கெட்ட ஆசாரமுள்ளவரானாலும், நல்ல ஆசாரமுள்ள வரானாலும், பண்டிதரானாலும், காஷாய தண்டங்களைத் தரித்ததால் பூஜிக்கத் தகுந்தவராவார்.

उपकारेण नीचानामपकारो हि जायते ।
पयः पानं भुजङ्गानां केवलं विषवर्धनम् ।।

உபகாரேண நீசானாமபகாரோ ஹி ஜாயதே ।
பய: பானம் புஜங்கானாம் கேவலம் விஷவர்தனம் ॥

பாம்புக்குப் பால்வார்ப்பதால் அதிகமான விஷத்தை எப்படி உண்டாக்குமோ அப்படி நீசருக்கு உபகாரம் செய்யச் செய்ய அபகாரமே நடக்கும்.

ऋणं याच्ना च वृद्धत्वं राजचोरं दरिद्रता ।
रोगाश्च भुक्तशेषश्चाप्यष्टकष्टाः प्रकीर्तिताः ।।

ருணம் யாச்னா ச வ்ருத்தத்வம் ராஜசோரம் தரித்ரதா ।
ரோகாச்ச புக்தசேஷச்சாப்யஷ்டகஷ்டா: ப்ரகீர்த்திதா: ॥

கடன் யாசித்தல், மூப்பு, வ்யபிசாரம், திருட்டுத்தனம், ஏழ்மை, நோய், மற்றவர்கள் சாப்பிட்டு மிகுந்த (மீதமுள்ள) சாப்பாடு சாப்பிடும் நிலை ஆகிய இவை எட்டு கஷ்டங்களாகும்.

दासी भृत्यस्सुतोबन्धुर्वस्तुर्वाहनमेव च ।
धनधान्यसमृद्धिश्चाप्यष्टभोगा प्रकीर्तिताः ।।

தாஸீ ப்ருத்யஸ்ஸுதோபந்துர்வஸ்துர்வாஹனமேவ ச ।
தனதான்யஸம்ருத்திச்சாப்யஷ்டபோகா ப்ரகீர்திதா: ॥

பணிப்பெண்கள், பணியாட்கள், பிள்ளைகள், சுற்றத்தார்கள், பொருட்கள், வாகனங்கள், பணம், தான்யம் இருத்தல் ஆகிய இவை எட்டும் போகங்கள் என்று சொல்லப்படுகிறது. (போகங்களாகும்)

मक्षिका मारुतोवेश्या याचकोमूषकस्तथा ।
ग्रामणिर्गणकश्चैव सप्तै ते परबाधकाः ।।

மக்ஷிகா மாருதோவேச்யா யாசகோமூஷகஸ்ததா ।
க்ராமணிர்கணகச்சைவ ஸப்தை தே பரபாதகா: ॥

ஈக்கள், காற்று, வேசி, யாசகன், எலி, கிராமாதிகாரி, கணக்கர் ஆகிய ஏழுபேரும் எப்பொழுதும் மற்றவர்களைத் தொந்தரவு செய்பவர்கள்.

भूप्रदक्षिणषट्केण काशीयात्रायुतेन च ।
सेतुस्नानशतैर्यच्च तत्फलं मातृवन्दने ।।

பூப்ரதக்ஷிணஷட்கேண காசீயாத்ராயுதேன ச ।
ஸேதுஸ்நானசதைர்யச்ச தத்பலம் மாத்ருவந்தனே ॥

பூமியை ஆறுமுறை வலம் வருதலும், பத்தாயிரம் முறை காசியில் ஸ்நானம் செய்தலும், அனேக நூறுமுறை ஸேது ஸ்நானம் செய்தலும் ஆகிய இவற்றால் கிடைக்கக்கூடிய பலன்; பெற்றெடுத்த தாயை அன்போடு ஒருமுறை நமஸ்கரித்தாலே கிடைக்கும்.

नान्नोदकसमं दानं न द्वादश्याः परं व्रतम् ।
न गायत्र्याः परं मन्त्रं न मातुः दैवतं परम् ।।

நான்னோதகஸமம் தானம் ந த்வாதச்யா: பரம் வ்ரதம் ।
ந காயத்ர்யா: பரம் மந்த்ரம் ந மாது: தைவதம் பரம் ॥

உணவு, நீர் ஆகிய தானத்திற்குச் சமமான தானமும்; த்வாதசீ விரதத்தைக் காட்டிலும் வேறு விரதமும், காயத்ரியைவிட சிறந்ததான மந்திரமும், தாயினும் உயர்ந்த தைவமும் வேறில்லை.

राजवत्पुत्रदाराश्च स्वामिवन्मित्र बान्धवाः ।
आचार्यवत्सभामध्ये भाग्यवन्तं स्तुवन्ति हि ।।

ராஜவத்புத்ரதாராச்ச ஸ்வாமிவன்மித்ர பாந்தவா: ।
ஆசார்யவத்ஸபாமத்யே பாக்யவந்தம் ஸ்துவந்தி ஹி ॥

உலகத்தில் பணக்காரனை அவன் பெண் பிள்ளைகள் ராஜாபோலவும், சுற்றத்தாரும், ஸ்னேகிதரும் தேவர் போலவும்; ஸபையிலுள்ளோர் ஆசார்யனைப் போலவும் நினைத்துத் துதிப்பர். (பணமுள்ளவனே பெரியவன் என்றபடி).

कपिलाक्षीरपानेन ब्राह्मणी सङ्गमेन च ।
वेदाक्षरविचारेण शूद्रश्चण्डालतां व्रजेत् ।।

கபிலாக்ஷீரபானேன ப்ராம்ஹணீ ஸங்கமேன ச ।
வேதாக்ஷரவிசாரேன சூத்ரச்சண்டாளதாம் வ்ரஜேத் ॥

உலகத்தில் நான்காவது வர்ணத்தார் காராம்பசுவின் பாலைக் குடித்தாலும்; ப்ராம்மண ஸ்த்ரீயுடன் சேருவதாலும்; வேதாக்ஷர விசாரத்தாலும் சண்டாளத்வத்தை அடைவர்.

लोकयात्राभयंलज्जा दाक्षिण्यं धर्मशीलता ।
पञ्चयस्मिन्नविद्यन्ते न कुर्यात्ते न सङ्गमम् ।।

லோகயாத்ராபயம்லஜ்ஜா தாக்ஷிண்யம் தர்மசீலதா ।
பஞ்சயஸ்மின் ந வித்யந்தே ந குர்யாத்தே ந ஸங்கமம் ॥

உலக வ்யவஹாரம், பயம், வெட்கம், தாக்ஷிண்யம், தர்மஸ்வபாவம் ஆகிய இவ்வைந்து குணங்களும் இல்லாத மனிதனோடு ஸஹவாஸம் (சேர்தல்) செய்யக்கூடாது.

विद्वानेवविजानाति विद्वज्जनपरिश्रमम् ।
नहि वन्ध्या विजानाति गुर्वीं प्रसववेदनाम् ।।

வித்வானேவவிஜானாதி வித்வஜ்ஜன பரிச்ரமம் ।
நஹி வந்த்யா விஜானாதி குர்வீம் ப்ரஸவவேதனாம் ॥

படித்தவர்களை படித்தவர்களே அறிவர். கல்லாதவர்கள் கற்றோருடைய பரிச்ரமத்தை அறியார்கள். எவ்வாறெனில், மலடிகள் பிரசவ வலியை அறியாதது போல.

विद्याश्चतस्रो साध्यास्स्युर्जन्मना सहसंभवाः ।
गान्धर्वञ्चकवित्वञ्च शूरत्वं दानशीलता ।।

வித்யாச்சதஸ்ரோ ஸாத்யாஸ்யுர்ஜன்மனா ஸஹஸம்பவா: ।
காந்தர்வஞ்சகவித்வஞ்ச சூரத்வம் தானசீலதா ॥

ஸங்கீதம், கவிபுனையும் திறன், நல்ல திறமை, தானம் வழங்கும் எண்ணம் ஆகிய இந்நான்கும் உடன்பிறக்கவேண்டிவைகளே அன்றி கற்றுக்கொள்வதல்ல.

मातानिन्दति नाभिनन्दतिपिताभ्राता न संभाषते
भृत्यः कुप्यति नानुगच्छतिसुतः कान्ता च नालिङ्गते ।
अर्थप्रार्थनशङ्कया न कुरुते स्वालापमात्रं सुहृत्त-
स्मादर्थमुपार्जय श्रृणु सखेह्यर्थेन सर्वे वशाः ।।

மாதாநிந்ததி நாபிநந்ததிபிதாப்ராதா ந ஸம்பாஷதே
ப்ருத்ய: குப்யதி நானுகச்சதிஸுத: காந்தா ச நாலிங்கதே ।
அர்த்தப்ரார்த்தனசங்கயா ந குருதே ஸ்வாலாபமாத்ரம் ஸுஹ்ருத்த-
ஸ்மாதர்த்தமுபார்ஜய ச்ருணு ஸகேஹ்யர்த்தேன ஸர்வே வசா: ॥

பொருளில்லாதவனைத் தாய் நிந்திப்பாள்; தகப்பன் ஸந்தோஷியான்; உடன் பிறந்தவர்கள் பேசமாட்டார்கள்; வேலைக்காரன் கோபித்துக்கொள்வான்; மகன் பின் செல்லான்; மனைவி தழுவாள்; தன்னைப் பொருள் கேட்பான் என்ற பயத்தினால் நண்பன் நல்ல சொல் சொல்லமாட்டான். ஆகையால் ஓ ஸ்நேஹிதனே! பணத்தைச் சம்பாதிப்பாயாகில் அனைவரும் உன்னைச் சேர்ந்தவர்களாவார்கள்.

गोमूत्रमात्रेण पयोविनष्टं
तक्रस्य गोमूत्रशतेन किं वा ।
अत्यल्पपापैर्विपदश्शचीनां
पापात्मनां पापशतेन किं वा ।।

கோமூத்ரமாத்ரேண பயோவிநஷ்டம்
தக்ரஸ்ய கோமூத்ரசதேன கிம் வா ।
அத்யல்பபாபேர்விபதச்சசீனாம்
பாபாத்மனாம் பாபசதேன கிம் வா ॥

பசுவின் மூத்திரமானது கொஞ்சம் விழுந்தாலும் பால் கெட்டுவிடும். அதே (பசுவின் மூத்திரமானது) எவ்வளவு கலந்தாலும் மோருக்குக் கெடுதியில்லை. அதுபோல் பரிசுத்தமான நல்லவர்களுக்குக் குறைந்த பாபமானது நேர்ந்துவிட்டாலே விபத்து ஏற்படும். பாபிகளுக்குப் பெரும்பாபம் செய்தாலும் கூச்சம் ஏற்படாது.

समुद्रमथनेलेभे हरिर्लक्ष्मीं हरो विषम् ।
भाग्यं फलति सर्वत्र न विद्या न च पौरुषम् ।।

ஸமுத்ரமதனேலேபே ஹரிர்லக்ஷ்மீம் ஹரோ விஷம் ।
பாக்யம் பலதி ஸர்வத்ர ந வித்யா ந ச பௌருஷம் ॥

கடலைக் கடைந்தபோது விஷ்ணு லக்ஷ்மியையும், சிவன் விஷத்தையும் அடைந்தனர். ஆகையால் அவரவர்களின் பாக்யத்திற்குத் தக்கவாறு பலம் கிடைக்குமே தவிர, படிப்பும் பௌருஷத்வமும் காரணமல்ல.

आतुरो नियमो नास्ति बालवृद्धे तथैव च ।
सदाचाररतेचैव ह्येषधर्मस्सनातनः ।।

ஆதுரோ நியமோ நாஸ்தி பாலவ்ருத்தே ததைவ ச ।
ஸதாசாரரதேசைவ ஹ்யேஷதர்மஸ்ஸநாதன: ॥

ரோகிகளுக்கும், சிறுவர்களுக்கும், கிழவர்களுக்கும், ஸதாசார ஸம்பன்னர்களுக்கும் வ்ரத நியமம் வேண்டியதில்லை.

एकोदेवः केशवो वा शिवो वा
एकोवासः पत्तनं वा वनं वा ।
एकं मित्रं भूपतिर्वा यतिर्वा
एका नारी सुन्दरी वा दरी वा ।।

ஏகோதேவ: கேசவோ வா சிவோ வா
ஏகோவாஸ: பத்தனம் வா வனம் வா ।
ஏகம் மித்ரம் பூபதிர்வா யதிர்வா
ஏகா நாரீ ஸுந்தரீ வா தரீ வா ॥

விஷ்ணுவையாவது, சிவனையாவது தெய்வம் என்று நம்பவேண்டும். பட்டணத்திலாயினும் வனத்திலாயினும் வாஸம் பண்ணவேண்டியது. இராஜனுடனோ ஸந்யாஸியோடோ நட்பு கொள்ளவேண்டியது. அழகுள்ள மனைவியோடு கூடியாவது, குகையில் வாசம் செய்கிறவளோடாவது வாசம் செய்யவேண்டியது.

अजायुद्धे ऋषिश्राद्धे प्रभाते मेघडम्बरे ।
दम्पत्योः कलहेचैव बह्वारम्भो लघुक्रिया ।।

அஜாயுத்தே ரிஷிச்ராத்தே ப்ரபாதே மேகடம்பரே ।
தம்பத்யோ: கலஹேசைவ பஹ்வாரம்போ லகுக்ரியா ॥

ஆட்டுக்கிடா சண்டையிலும், ரிஷி ச்ராத்தத்திலும், காலை ஏற்படும் இடி முழக்கத்திலும், தம்பதிகளுடைய கலகத்திலும் ஆரம்பம் அதிகமாகவும் (கடுமையாகவும்) முடிவு சாதாரணமாகவும் இருக்கும்.

हतमश्रोत्रियोदानं हतं सैन्यमनायकम् ।
हतारूपवतीवन्ध्या हतो यज्ञोप्यदक्षिणः ।।

ஹதமச்ரோத்ரியோதானம் ஹதம் ஸைன்யமநாயகம் ।
ஹதாரூபவதீவந்த்யா ஹதோ யக்ஞோப்யதக்ஷிண: ॥

வேதம் படிக்காதவனுக்குக் கொடுத்த தானமும், தலைவனில்லாத படையும், அழகியான மலடியும், தக்ஷிணையில்லாத யாகமும் பயனற்றதாகும்.

क्रोधो वैवस्वतोराजा आशावैतरणी नदी ।
विद्याकामदुघाधेनुस्सन्तोषोनन्दनं वनम् ।।

க்ரோதோ வைவஸ்வதோராஜா ஆசாவைதரணீ நதீ ।
வித்யாகாமதுகாதேனுஸ்ஸந்தோஷோ நந்தனம் வநம் ॥

கோபம் யமனுக்கு ஒத்தது. ஆசை வைதாரணீ நதிக்கு ஸமமானது. கல்வி காமதேனுவிற்கு ஸமமானது. சந்தோஷம் (மகிழ்ச்சி) நந்தவனத்திற்கு (பூந்தோட்டத்திற்கு) ஸமமானது.

असारं खलु संसारं सारंश्वशुरमन्दिरम् ।
हिमालये हरश्शेते हरिश्शेते महोदधौ ।।

அஸாரம் கலு ஸம்ஸாரம் ஸாரம்ச்வசுரமந்திரம் ।
ஹிமாலயே ஹரச்சேதே ஹரிச்சேதே மஹோததௌ ॥

இல்வாழ்க்கை என்பது ஸாரமில்லாதது என்றாலும் மாமனார் வீடு ஸாரமுள்ளது. ஆகையால் சிவன் இமயமலையிலும்; விஷ்ணு ஸமுத்திரத்திலும் படுத்துக்கொண்டிருக்கிறார்கள்.

चिताचिन्ता तयोर्मध्ये चिन्तानामगरीयसी ।
चितादहति निर्जीवं चिन्ताप्राणयुतं वपुः ।।

சிதாசிந்த்தா தயோர்மத்யே சிந்த்தாநாமகரீயஸீ ।
சிதாதஹதி நிர்ஜீவம் சிந்த்தாப்ராணயுதம் வபு: ॥

சிதையைக் காட்டிலும் சிந்தை பெரியது.. எவ்வாறெனில், சிதை இறந்த சரீரத்தை (உடலை)க் கொளுத்துகிறது. சிந்தை உயிருடன் இருக்கும் உடலையே எரிக்கிறது.

आजगाम यथा लक्ष्मीर्नारिकेलफलाम्बुवत् ।
निर्जगाम तथा लक्ष्मीर्गजभुक्त कपित्थवत् ।।

ஆஜகாம யதா லக்ஷ்மீர்நாரிகேலபலாம்புவத் ।
நிர்ஜகாம ததா லக்ஷ்மீர்கஜபுக்த்த கபித்தவத் ॥

செல்வம் வரும்பொழுது தேங்காய்க்குள் இளநீர்போலத் தானே வரும். அது போகும்பொழுது யானையுண்ட விளாங்கனியைப்போல் போகும்.

नेक्षेतोद्यन्तमादित्यं नास्तंयान्तंकदाचन ।
नोपसृष्टं न वारिस्थं न मध्यन्नभसोगतम् ।।

நேக்ஷேதோத்யந்தமாதித்யம் நாஸ்தம்யாந்தம் கதாசந ।
நோபஸ்ருஷ்டம் ந வாரிஸ்தம் ந மத்யந்நபஸோகதம் ॥

சூரியன் உதிக்கும்பொழுதும், மறையும்பொழுதும், நடுவானத்தில் இருக்கும் பொழுதும், ப்ரதி சூரியனையும் ஜலத்தில் சூரியனுடைய ப்ரதிபிம்பத்தையும் பார்க்கக்கூடாது

न लङ्घयेद्वत्सतन्त्री न प्रथावेच्च वर्षती ।
न चोदके निरीक्षेत स्वशूपमितिधारणम् ।।

ந லங்கயேத்வத்ஸதந்த்ரீ ந ப்ரதாவேச்ச வர்ஷதீ ।
ந சோதகே நிரீக்ஷேத ஸ்வரூபமிதி தாரணம் ..

கன்றின் கயிற்கைத் தாண்டக்கூடாது. மழையில் ஓடக்கூடாது. நீரில் நிழலைப் பார்க்கக்கூடாது.

नाश्नियाद्भार्ययासार्धं नैनामिक्षेतचाश्नतीम् ।
क्षुपन्तीं जृम्भमानां वा न चासीनां यथा सुखम् ।।

नाञ्जयन्तीं स्वकेनेत्रे न चाभ्यक्कामनावृताम् ।
न पश्येत्प्रसवन्तीञ्च तेजस्कामोद्विजोत्तमः ।।

நாச்னியாத்பார்யயாஸார்தம் நைனாமிக்ஷேதசாச்னதீம் ।
க்ஷுபந்தீம் ஜ்ரும்பமானாம் வா ந சாஸீனாம் யதா ஸுகம் ॥

நாஞ்ஜயந்த்தீம் ஸ்வகேநேத்ரே ந சாப்யக்காமனாவ்ருதாம் ।
ந பச்யேத் ப்ரஸவந்தீஞ்ச தேஜஸ்காமோத்விஜோத்தம: ॥

மனைவியோடு சேர்ந்து சாப்பிடக்கூடாது. மனைவி சாப்பிடும்பொழுதும், தும்பும்பொழுதும், கொட்டாவி விடும்பொழுதும், சௌகர்யமாய் உட்கார்ந்திருக்கும் பொழுதும், கண்ணுக்கு மை தீட்டிக்கொள்ளும்பொழுதும், எண்ணெயிட்டுக் கொண்டு ஸ்நானம் செய்யும்பொழுதும், வஸ்த்ரமில்லாமல் இருக்கும்பொழுதும் (ப்ரஸவத்தின் பொழுதும்) தேஜஸ்ஸை விரும்புகின்ற ப்ராம்மணன் அவளைப் பார்க்கக்கூடாது.

नान्नमद्यादेकवासा न नग्नस्नानमाचरेत् ।
नाश्लीलं कीर्तयेद्धीमान्नकुर्यात्स्त्रीवचः क्वचित् ।।

நான்னமத்யாதேகவாஸா ந நக்னஸ்நானமாசரேத் ।
நாச்லீலம் கீர்த்தயேத்தீமான்னகுர்யாத்ஸ்த்ரீவச: க்வசித் ॥

நன்கு கற்றறிந்த ப்ராம்மணன் ஒற்றை ஆடை உடுத்திக்கொண்டு போஜனம் செய்யக்கூடாது. வஸ்த்ரமே இல்லாமல் (ஆடையே உடுத்திக்கொள்ளாமல்) நீரில் அமிழ்ந்து ஸ்நானம் செய்யக்கூடாது. அமங்களமான (கெட்ட) வார்த்தைகளைச் சொல்லக்கூடாது. பெண்களின் சொல்படி எப்பொழுதும் செய்யக்கூடாது.

न मूत्रपथिकुर्वीत न भस्मनि न गो व्रजे ।
न फालकृष्टे न जले न चिन्त्यां न च पर्वते ।।

न जीर्णदेवायतने न वल्मीके कदाचन ।
न स सत्येषु गर्तेषु नग्वच्छन्नापिर्वास्थितः ।।

न नद्यां न नदीतीरे न च नस्पत्यधस्तथा ।
वाय्वग्निविप्रानादित्यमपः पश्यंस्तथैव गाः ।।
न कदाचन कुर्वीत न विण्मूत्रविसर्जनम् ।।

ந மூத்ரபதிகுர்வீத ந பஸ்மனி ந கோ வ்ரஜே ।
ந பாலக்ருஷ்டே ந ஜலே ந சிந்த்யாம் ந ச பர்வதே ॥

ந ஜீர்ணதேவாயதனே ந வல்மீகே கதாசன ।
ந ஸ ஸத்யேஷு கர்தேஷு நக்வச்சன்னாபிவஸ்தித: ॥

ந நத்யாம் ந நதீதீரே ந ச நஸ்பத்யதஸ்ததா ।
வாய்வக்னிவிப்ராநாதித்யமப: பச்யம்ஸ்ததைவ கா: ॥
ந கதாசன குர்வீத ந விண்மூத்ரவிஸர்ஜனம் ॥

வழியிலும், சாம்பலிலும், பசுமாட்டு மந்தையிலும், உழு நிலத்திலும், நீரிலும், புதரிலும், மலையின்மீதும், இடிந்த தேவாலயங்களிலும், புற்றிலும், ஜந்துக்களுள்ள வளைகளிலும், நடந்துகொண்டும், நின்றுகொண்டும், ஆற்றிலும், அதன் கரைகளிலும், பெரிய மரத்தின் அடியிலும் ஜலமலங்களைக் கழிக்கக்கூடாது. மேலும், காற்றுவீசும் திசையை எதிர்நோக்கியும், நெருப்பு, அந்தணன், சூரியன், தண்ணீர் பசு இவைகளைப் பார்த்துக்கொண்டும் மலஜலம் கழிக்கக்கூடாது.

विण्मूत्रोत्सर्जनं विप्रो दिवाकुर्यादुदङ्मुखः ।
दक्षिणाभिमुखोरात्रौसन्ध्यायोश्च यथा दिवा ॥

छायायामन्धकारे वा रात्रावहनिवाद्विजाः ।
यथा सुखमुखः कुर्यात्प्राणबाधाभयेषु च ॥

விண்மூத்ரோத்ஸர்ஜனம் விப்ரோ திவாகுர்யாதுதங்முக: ।
தக்ஷிணாபிமுகோராத்ரௌ ஸந்த்யாயோச்ச யதா திவா ॥

ச்சாயாயாமந்தகாரே வா ராத்ராவஹநிவாத்விஜா: ।
யதா ஸுகமுக: குர்யாத்ப்ராணபாதாபயேஷு ச ॥

ப்ராம்மணன் பகல் நேரத்திலும், அந்தி நேரத்திலும் வடக்கு முகமாகவும்; இரவில் தெற்குமுகமாவும் உட்கார்ந்துகொண்டு ஜலமலங்களைக் கழிக்கவேண்டும். நிழலிலும், இருட்டிலும், உயிர் போய்விடும் என்ற பயம் உள்ள நேரத்தில் இரவு - பகல் எப்பொழுதாயினும் எந்த முகமாக இருந்தும் (விண்மூத்ரங்களை) மலஜலங்களைக் கழிக்கலாம்.

नाग्निमुखेन न थमेत्राग्नानें क्षेत्रचस्त्रियम् ।
नामेध्यं प्रक्षिपेदग्नौ न च पादौ प्रतापयेत् ॥

நாக்னிமுகேன ந தமேன்னக்னாம்னே க்ஷேத்ரசஸ்த்ரியம் ।
நாமேத்யம் ப்ரக்ஷிபேதக்னௌ ந ச பாதௌ ப்ரதாபயேத் ॥

நெருப்பை வாயால் ஊதக்கூடாது. ஆடையில்லாத பெண்டிரைப் பார்க்கக் கூடாது. சுத்தமில்லாத பொருட்களை அக்னியில் போடக்கூடாது. நெருப்பில் காலைக் காய்ச்சக்கூடாது.

नैकस्वप्याच्छून्यगेहे शयानं न प्रभोधयेत् ।
नोदक्त्यायाभिभाषेत यज्ञेगच्छोदनावृतः ।।

நைகஸ்வப்யாச்சூன்யகேஹே சயானம் ந ப்ரபோதயேத் ।
நோதக்த்யாயாபிபாஷேத யக்ஞேகச்சோதனாவ்ருத: ॥

பாழடைந்த வீட்டில் ஒருவனாய் தூங்கக்கூடாது. தூங்கிக் கொண்டிருப்பவனை எழுப்பக்கூடாது. மாதவிடாய் ஆகியுள்ள காலத்தில் அந்தப் பெண்ணுடன் பேசக்கூடாது.

न धार्मिकेवसेद्ग्रामे न व्याधिबहुलेभृशम् ।
नैकः प्रपद्येताध्वानं न चिरं पर्वते वसेत् ।।

ந தார்மிகேவஸேத்க்ராமே ந வ்யாதிபஹுளே ப்ருசம் ।
நைக: ப்ரபத்யேதாத்வானம் ந சிரம் பர்வதே வஸேத் ॥

தார்மீகம் இல்லாத ஊரிலும்; வ்யாதி மிகுந்துள்ள ஊரிலும் வசிக்கக்கூடாது. ஒருவனாக ரொம்ப தூரம் செல்லக்கூடாது. மலைமேல் பல நாட்கள் வசிக்கக்கூடாது.

उपानहौ च वासश्च धृतमन्यैर्नधारयेत् ।
उपवीतन्नशयनं जायापत्यं कमण्डुलम् ।।

உபாநஹௌ ச வாஸச்ச த்ருதமன்யைர் ந தாரயேத் ।
உபவீதன்னசயனம் ஜாயாபத்யம் கமண்டுலம் ॥

ஒருவன் பயன்படுத்திய செருப்பு, அணிந்துகொண்ட ஆடை, ஒருமுறை போட்டுக்கொண்ட பூணல், படுத்த படுக்கை, ஒருவனுடைய மனைவி, ஒருவனுடைய பையன் ஆகிய இவற்றை மற்றொருவன் உபயோகிக்கக் கூடாது.

नाविनीतै व्रजेद्वाहैर्न चक्षुर्व्याधिपीडितैः ।
न भिन्नश्रृङ्गाक्षिपुरैर्नवालनिधिरूपितैः ।।

विनीतैस्तुव्रजेन्नित्यमाशुगैलक्षणान्वितैः ।
वररूपोपसंपन्नैः प्रतोदेनानुदन्भृशम् ।।

நாவினீதை வ்ரஜேத்வாஹைர்ந சக்ஷுர்வ்யாதிபீடிதை: ।
ந பின்னச்ருங்காக்ஷிபுரைர்நவாலநிதிரூபிதை: ॥

விநீதைஸ்துவ்ரஜேந்நித்யமாசுகைலக்ஷணான்விதை: ।
வரரூபோபஸம்பன்னை: ப்ரதோதேனானுதன்ப்ருசம் ॥

பழக்கப்படுத்தாத, கண்நோய் உடையவைகளாய், ஒடிந்த கொம்பு, குளம்பு, குருட்டுக்கண் உள்ளவையான எருதுகள், குதிரைகள் பூட்டிய வண்டிகளிலும், இப்படிப்பட்ட குதிரைமீது ஏறியும் போகக்கூடாது. இவ்வாறு அல்லாத நன்கு பழக்கப் படுத்தப் பெற்றவைகளும்; வேகமாக செல்லக்கூடியவைகளும்; நல்ல லக்ஷணங்களோடு கூடியவைகளுமான வாகனங்களில் ஏறி அவற்றை அதிகம் துன்பப்படுத்தாமல் செலுத்தி பயணம் செய்யவேண்டும்.

बालातपः प्रेतधूमो वर्ज्यं भिन्नं तथासनम् ।
नच्छिन्द्यान्नखलोमानि दन्तैर्नोत्पाटयेन्नखान् ।।

பாலாதப: ப்ரேததூமோ வர்ஜ்யம் பின்னம் ததாஸனம் ।
நச்சிந்த்யான்னகலோமானி தந்தைர்நோத்பாடயேன்நகான் ॥

இளம் வெய்யிலும், பிணப்புகையும், உடைந்த ஆஸனமும் விலக்கத் தகுந்தவை. நகங்களையும், மயிரையும் கிள்ளக்கூடாது. பற்களால் நகங்களைக் கிழிக்கக்கூடாது.

लोष्टमर्द्दीतृणच्चेदी नखखादी च यो नरः ।
स विनाशं व्रजत्याशु सूचको शचिरेव च ।।

லோஷ்டமர்த்ரீத்ருணச்சேதீ நககாதீ ச யோ நர: ।
ஸ விநாசம் வ்ரஜத்யாசு ஸூசகோ சசிரேவ ச ॥

காரணமில்லாமல் மண் கட்டியை பொடி செய்பவனும், துரும்பு கிள்ளுபவனும், நகத்தைக் கடிப்பவனும், புறம் கூறுபவனும், சுத்தமில்லாதவனும் ஆகிய இவர்கள் வ்ருத்தி அடையமாட்டார்கள். (முன்னேற்றத்தை ஒருபொழுதும் அடையமாட்டார்கள்).

नातिगर्ह्यकथांकुर्यादबहिर्माल्यन्नधारयेत् ।
गवां च यानं पृष्ठे न सर्वथैवविवर्जयेत् ।।

நாதிகர்ஹ்யகதாம்குர்யாத்பஹிர்மால்யன்னதாரயேத் ।
கவாம் ச யானம் ப்ருஷ்டே ந ஸர்வதைவவிவர்ஜயேத் ॥

(குழந்தைகளுக்கும், பொதுஜனங்களுக்கும்) கெட்ட கதைகளைச் சொல்லக்கூடாது. வெளியில் அழுக்கான ஆடைகளை அணிந்துகொள்ளக்கூடாது. பசுவின் மேலேறி பயணம் செய்யக்கூடாது.

**अद्वारेण न नात्मीयं ग्रामं वावेश्म वा विशेत् ।**
**रात्रौ च वृक्षमूलानि दूरतः परिवर्जयेत् ।।**

**அத்வாரேண ந நாத்மீயம் க்ராமம் வாவேச்ம வா விசேத் ।**
**ராத்ரௌ ச வ்ருக்ஷமூலானி தூரத: பரிவர்ஜயேத் ॥**

தன் கிராமத்திற்கோ, வீட்டிற்கோ முறையான வழியைவிட்டு, தவறான வழியில் செல்லக்கூடாது. இரவில் மரத்திற்குக் கீழே போகக்கூடாது.

**नस्नानमाचरेद्भुक्त्वा नातुरोनमहानिशि ।**
**नवासोभिस्सहाजस्रं न विज्ञातेजलाशये ।।**

ந ஸ்நாநமாசரேத் புக்த்வா நாதுரோ ந மஹாநிசி ।
ந வாஸோபிஸ்ஸஹாஜஸ்ரம் ந விக்ஞாதே ஜலாசயே ॥

உணவருந்திய பிறகும், நோயாளியாய் இருக்கும்பொழுதும், நள்ளிரவிலும், எப்பொழுதும் உடுத்திக்கொண்டிருக்கும் வஸ்திரத்துடனும், தனக்கு ஆழம் தெரியாத மடுவிலும் குளிக்கக்கூடாது.

**वैरिणं नोपसेवेत सहायं चैव वैरिणः ।**
**अधार्मिकं तस्करञ्च परस्यैव च योषितम् ।।**

**வைரிணம் நோபஸேவேத ஸஹாயம் சைவ வைரிண: ।**
**அதார்மிகம் தஸ்கரஞ்ச பரஸ்யைவ ச யோஷிதம் ॥**

எதிரி, எதிரியின் நண்பன், தர்மமில்லாதவன், திருடன், மாற்றான் மனைவி ஆகிய இவர்களுடன் தொடர்பு வைத்துக்கொள்ளக்கூடாது.

**क्षत्रियं चैव सर्वं च ब्राह्मणञ्च बहुश्रुतम् ।**
**नावमन्येत वैभूष्णुः कृशा न विकलाचन ।।**

க்ஷத்ரியம் சைவ ஸர்வம் ச ப்ராம்மணஞ்ச பஹுச்ருதம் ।
நாவமன்யேத வைபூஷ்ணு: க்ருசா ந விகதாசன ॥

தான் முன்னேறவேண்டும் என்ற எண்ணம் உடையவன்; ராஜாவையும், பாம்பையும், வேதமறிந்த ப்ராம்மணனையும் இளைத்திருந்தபோதிலும் அவமதிக்கக் கூடாது.

सत्यंब्रूयात्प्रियंब्रूयान्नब्रूयात्सत्यमप्रियम् ।
प्रियञ्चनानृतं ब्रूयादेषधर्मस्सनातनः ।।
भद्रं भद्रमितिब्रूयाद्भद्रमित्येव वा वदेत् ।।

ஸத்யம்ப்ரூயாத்ப்ரியம்ப்ரூயான்னப்ரூயாத்ஸத்யமப்ரியம் ।
ப்ரியஞ்சநாந்ருதம் ப்ரூயாதேஷதர்மஸ்ஸநாதன: ॥
பத்ரம் பத்ரமிதிப்ரூயாத்பத்ரமித்யேவ வா வதேத் ॥

ஸத்யமாயும் (ஒருவருக்கு) இஷ்டமாயும் உள்ளதைச் சொல்லவேண்டும். ஸத்யமானதானாலும் (ஒருவருக்கு) ப்ரியமற்றதைச் சொல்லக்கூடாது. **பத்ரம்** என்ற சொல்லுக்கு **சுபம்** என்ற பொருளாகையால் ஒருவனுக்கு சந்தோஷம் ஏற்படும் பொழுது **பத்ரம், பத்ரம்** என்று சொல்லவேண்டும்.

शुष्कवैरं विवादञ्च न कुर्यात्कनचित्सह ।
परिहासेप्यनौचित्यं स्वप्नेप्यनवधूरतिम् ।।

சுஷ்கவைரம் விவாதஞ்ச ந குர்யாத்கனசித்ஸஹ ।
பரிஹாஸேப்யனௌசித்யம் ஸ்வப்னேப்யனவதூரதிம் ॥

யாரோடும் ப்ரயோஜனமில்லாத விரோதமும், வீண் பேச்சும், விளையாட்டிற்குக்கூட ஸமயோசிதமில்லாமல் பேசுதலும், கனவில்கூட மாற்றான் மனைவியை சேர்தல் போன்ற இவைகள் செய்யக்கூடாது.

हीनाङ्गानतिरिक्ताङ्गान्विद्याहीनञ्चयोधिकान् ।
रूपद्रव्यविहीनांश्च जातिहीनांश्च नाक्षिपेत् ।।

ஹீனாங்கானதிரிக்தாங்கான்வித்யாஹீனஞ்ச யோதிகான் ।
ரூபத்ரவ்யவிஹீனாம்ச ஜாதிஹீனாம்ச்ச நாக்ஷிபேத் ॥

அதிக குட்டை அல்லது அதிக நீளமான கால் முதலிய அவயவம் உள்ளவனையும், வயது முதிர்ந்தோனையும் (அதாவது தன்னைக்காட்டிலும் வயதில் பெரியவர்களையும்) அழகு, பணம், ஜாதி இவைகளால் குறைந்தவர்களையும் ஒருபொழுதும் இழிவாகப் பேசக்கூடாது.

श्रद्धधानाश्शुभांविद्यामाददीतावरादपि ।
अन्त्यादपिपरंधर्मं स्त्रीरत्नं दुष्कुलादपि ।।

ச்ரத்ததானாச் சுபாம் வித்யாமாததீதாவராதபி ।
அந்த்யாதபிபரம் தர்மம் ஸ்த்ரீரத்னம் துஷ்குலாதபி ॥

நல்ல விஷயத்தை (வித்யையை) தாழ்ந்த குலத்தைச் சேர்ந்தவரிடத்திலிருந்தும் ச்ரத்தையுடன் தெரிந்துகொள்ளலாம். உத்தமமான தர்மத்தைச் சண்டாளனிடத்திலிருந்தும் கேட்டுக்கொள்ளலாம். நல்ல குணவதியான பெண்ணைக் கெட்ட குலத்திலிருந்தும் எடுத்துக்கொள்ளலாம்.

विषादप्यमृतं ग्राह्यं बालादपिसुभाषितम् ।
अमित्रादपिसद्वृत्तममेध्यादपिकाञ्चनम् ।।

விஷாதப்யம்ருதம் க்ராஹ்யம் பாலாதபிஸுபாஷிதம் ।
அமித்ராதபிஸத்வ்ருத்தமமேத்யாதபிகாஞ்சனம் ॥

விஷத்திலிருந்தாலும் அம்ருதத்தைப் பெறவேண்டும். சிறுவனாக இருந்தாலும் நல்ல வார்த்தையை எடுத்துக்கொள்ளவேண்டும். விரோதியாக இருந்தாலும் அவனிடமுள்ள நல்ல நடத்தையை எடுத்துக்கொள்ளவேண்டும். நிந்திக்கத்தக்க இடத்தில் இருந்தாலும் பணத்தை எடுத்துக்கொள்ளவேண்டும்.

स्त्रियोरत्नान्यधोविद्या धर्मश्शौचं सुभाषितम् ।
विविधानि च शिल्पानि समाधेयानिसर्वतः ।।

ஸ்த்ரியோரத்னான்யதோவித்யா தர்மச்சௌசம் ஸுபாஷிதம் ।
விவிதாநி ச சில்பாநி ஸமாதேயாநி ஸர்வத: ॥

நற்குணமுள்ள பெண்கள், ரத்னங்கள், வித்யைகள், தர்மம், பரிசுத்தம், ஸத்வாக்யம், பலவிதமான சில்பங்கள் இவை எங்கிருந்தாலும் க்ரஹித்துக்கொள்ள வேண்டும்.

यद्यत्परवशंकर्म तत्तद्यत्नेन वर्जयेत् ।
यद्यादत्तवसन्तुस्यात्तत्तत्सेवेतयत्नतः ।।

सर्वं परवशं दुःखं सर्वमात्मवशं शुखम् ।
एतद्विद्यात्समासेन लक्षणं सुखदुःखयोः ।।

யத்யத்பரவசம்கர்ம தத்தத்யத்னேன வர்ஜயேத் ।
யத்யாதத்தவஸந்துஸ்யாத் தத்தத்ஸேவேத யத்னத: ॥

ஸர்வம் பரவசம் துக்கம் ஸர்வமாத்மவசம் சுகம் ।
ஏதத்வித்யாத்ஸமாஸேன லக்ஷணம் ஸுகதுக்கயோ: ॥

மற்றவர்களுடைய பொறுப்பில் உள்ள செயல்களை விட்டுவிட்டு, தனது பொறுப்பில் உள்ள செயல்களைச் செய்யவேண்டும். அது ஏனெனில், அடுத்தவர்களுடைய பொறுப்பிலுள்ள செயல்களைச் செய்தால் இறுதியில் துக்கமே (கஷ்டமே) கிடைக்கும். தனது பொறுப்பிலுள்ள செயல்களைச் செய்யும்பொழுது சுகமே கிடைக்கும். (இது சுருக்கமாக சுக-துக்கங்களுக்கான லக்ஷணம்.)

अद्रोहेण च भूतानामल्पद्रोहेण वा पुनः ।
यावृत्तिस्तां स समास्थाय विप्रोजीवेद नापदी ।।

அத்ரோஹேண ச பூதானாமல்பத்ரோஹேண வா புன: ।
யாவ்ருத்திஸ்தாம் ஸ ஸமாஸ்தாய விப்ரோ ஜீவேத நாபதீ ॥

ப்ராம்மணன் ஆபத்தில்லாத காலத்தில் ஸகல பூதங்களுக்கும் கொஞ்சம்கூட த்ரோஹம் (கெடுதல்) உண்டாகாத தொழிலைச் செய்து பிழைக்கவேண்டும். தனக்கு ஆபத்துக் காலத்தில் மாத்திரம் பஞ்சபூதங்களுக்கு மிகவும் குறைவான பாதகம் (தொந்திரவு) உண்டாக்கும் தொழிலாலும் ஜீவிக்கலாம்.

ऋतामृताभ्यां जीवेत मृतेन प्रमृतेन वा ।
सत्यानृतेन वा विद्वान्नश्ववृत्या कदाचन ।।

मृतं तु याचितापेक्षं प्रमृतं कर्षणं स्मृतम् ।
सत्यानृतन्तु वाणिज्यं तेन चैवापि जीव्यते ।।
सेवा श्ववृत्तिराख्याना तस्मात्तां परिवर्जयेत् ।।

ர்ருதாம்ருதாப்யாம் ஜீவேத ம்ருதேன ப்ரம்ருதேன வா ।
ஸத்யாந்ருதேன வா வித்வான்னச்வவ்ருத்யா கதாசன ॥

ம்ருதம் து யாசிதாபேக்ஷம் ப்ரம்ருதம் கர்ஷணம் ஸ்ம்ருதம் ।
ஸத்யாந்ருதந்து வாணிஜ்யம் தேன சைவாபி ஜீவ்யதே ॥
ஸேவா ச்வவ்ருத்திராக்யானா தஸ்மாத்தாம் பரிவர்ஜயேத் ॥

சிந்தின (இரைந்த) தான்யத்தைப் பொருக்கி ஜீவித்தல் உஞ்சசிலம் - அதாவது ருதம் எனப்படும். அம்ருதம் என்றால் யாசிக்காமல் கிடைத்த பொருளைக்கொண்டு வாழ்தல். ம்ருதம் என்பது யாசித்து கிடைக்கும் பொருளைக் கொண்டு வாழ்தல். ப்ரம்ருதம் என்பது பயிர்செய்து வாழ்தல். ஸத்யாந்ருதம் என்பது வியாபாரம் செய்து வாழ்தல். தனது தொழிலைச் செய்து வாழ்தல் ப்ராம்மணனுக்கு உயர்வானதாகும். ஸேவகம் செய்து பிழைத்தல் ப்ராம்மணனுக்கு உயர்வானதல்ல. உஞ்சவ்ருத்தி முதல் வாணிபம் செய்தல்வரை சொல்லப்பட்ட வேலைகளைச் செய்து பிழைக்கலாமேயன்றி ப்ராம்மணன் இழிவான வேலையைச் செய்து ஜீவிக்கலாகாது.

**विप्राणां ज्ञानतोज्यैष्ठ्यं क्षत्रियाणान्तु वीर्यतः ।**
**वैश्यानां धान्यधनतश्शूद्राणां वयोधिकतः ।।**

**விப்ராணாம் ஞானதோஜ்யைஷ்ட்யம் க்ஷத்ரியாணாந்து வீர்யத: ।**
**வைச்யானாம் தான்யதனதச்சூத்ராணாம் வயோதிகத: ॥**

ப்ராம்மணரில் ஞானமுள்ளவன் பெரியவன். க்ஷத்திரியரில் பராக்ரமமுள்ளவன் பெரியவன். வைச்யரில் தனதான்யங்களுள்ளவன் பெரியவன். மற்றவர்களில் வயோதிகன் (வயது முதிர்ந்தவன்) பெரியவன்.

**वित्तंबन्धुवर्यः कर्म विद्याभवति पञ्चमी ।**
**एतानिमान्यस्थानानि गरीयोयद्यदुत्तरम् ।।**

**வித்தம் பந்துவர்ய: கர்ம வித்யா பவதி பஞ்சமீ ।**
**ஏதானிமான்யஸ்தானானி கரீயோயத்யதுத்தரம் ॥**

செல்வம், உறவினர்கள், புகழ், நன்னடத்தை, கல்வி இவ்வைந்தும் நமஸ்கரிக்கத் தக்கவை. இவற்றுள் முன்சொல்லப்பட்டவற்றைக் காட்டிலும் பின்சொல்லப்பட்டவை ஒன்றைக் காட்டிலுமொன்று ச்ரேஷ்டமானது (உயர்ந்தது).

**विद्यानाम नरस्यरूपमधिकं प्रच्छन्नगुप्तं धनं**
**विद्याभोगकरी यशस्सुखगरी विद्यागुरूणां गुरुः ।**
**विद्याबन्धुजनोविदेशगमने विद्यापरादेवता**
**विद्याराजसुपूज्यते न हि धनं विद्याविहीनः पशुः ।।**

**வித்யாநாம நரஸ்யரூபமதிகம் ப்ரச்சன்னகுப்தம் தனம்**
**வித்யாபோககரீ யசஸ்ஸுககரீ வித்யாகுரூணாம் குரு: ।**
**வித்யாபந்துஜனோவிதேசகமனே வித்யாபராதேவதா**
**வித்யாராஜஸுபூஜ்யதே ந ஹி தனம் வித்யாவிஹீன: பசு: ॥**

கல்வியானது புருஷனுக்கு ச்ரேஷ்டமான ரூபமாகும். ரஹஸ்யமாக அளிக்கப்பட்ட தனமாகும் போகமும், ஸுகமும் உண்டாகும். குருவுக்கும் குருவாகும். வெளிதேசங்களுக்குச் செல்லும்பொழுது உறவினரைப்போலக் காப்பாற்றத்தக்கது. உத்தமமான தெய்வம்போல் தனது விருப்பத்தை அளிக்கவல்லது. ராஜ ஸபையில் பெருமையுடன் பூஜிக்கத்தக்கது. தனம் அப்படியல்ல. எனவே, இவ்வளவு விசேஷங்கள் அடங்கிய கல்வியைக் கற்காதவன் பசுவுக்குச் சமமானவன்.

**शान्तिश्चेत्कवचेन किं किमरिभिः क्रोधोस्तिचेदेहिनां**
**ज्ञातिश्चेदनलेन किं यदिसुहृद्दिव्यौषधैः किं फलम् ।**
**किं सर्पैर्यदिदुर्जनाः किमुधनैर्विद्या नवद्यायदि**
**व्रीडाचेत्किमुभूषणैस्सुकविता यद्यस्ति राज्येन किम् ।।**

**சாந்திச்சேத் கவசேன கிம் கிமரிபி: க்ரோதோஸ்திசேதேஹினாம்**
**ஞாதிச்சேதனலேன கிம் யதிஸுஹ்ருத்திவ்யௌஷதை: கிம் பலம் ।**
**கிம் ஸர்பைர்யதிதுர்ஜனா: கிமுதனைர்வித்யா நவத்யா யதி**
**வ்ரீடாசேத் கிமுபூஷணைஸ்ஸுகவிதா யத்யஸ்தி ராஜ்யேன கிம் ॥**

பெருமை உள்ளவனுக்கு கவசம் ஏன்? கோபம் உள்ளவனுக்கு எதிரி ஏன்? பங்காளிகள் உள்ளவனுக்கு நெருப்பு ஏன்? நண்பன் உள்ளவனுக்கு மருந்து ஏன்? கெட்டவர்களுடன் தொடர்பு உள்ளவனுக்கு பாம்பு ஏன்? படித்தவனுக்கு பணம் ஏன்? வெட்கம் உள்ளோருக்கு ஆபரணங்கள் ஏன? நல்ல கவித்திறமை படைத்தவருக்கு ராஜ்யம் ஏன்?

**दाक्षिण्यं स्वजने दयापरिजने शाठ्यं सदा दुर्जने**
**प्रीतिस्साधुजने नयो नृपजने विद्वज्जने चार्जवम् ।**
**शौर्यं शत्रुजने क्षमागुरुजने कान्ताजने धृष्टता**
**येचैवं पुरुषाः कलासुकुशलास्तेष्वेव लोकस्थितिः ।**

**தாக்ஷிண்யம் ஸ்வஜனே தயாபரிஜனே சாட்யம் ஸதா துர்ஜனே**
**ப்ரீதிஸ்ஸாதுஜனே நயோ ந்ருபஜனே வித்வஜ்ஜனே சார்ஜவம் ।**
**சௌர்யம் சத்ருஜனே க்ஷமாகுருஜனே காந்தாஜனே த்ருஷ்டதா**
**யேசைவம் புருஷா: கலாஸுகுசலாஸ்தேஷ்வேவ லோகஸ்திதி: ॥**

உறவினர்களிடம் தாக்ஷிண்யமும், வேலை செய்பவர்களிடத்தில் இரக்கமும், கெட்டவர்களிடத்தில் கபடமும், நல்லவர்களிடத்தில் அன்பும், அரசரிடத்து நீதியும், படித்தவர்களிடத்தில் கபடமின்மையும், எதிரிகளிடத்தில் சௌர்யமும் (வீரமும்), குருவிடத்தில் பொறுமையும், பெண்களிடத்து த்ருஷ்டமும் உடையவராய் இருக்கும் நல்ல கல்வியறிவுள்ள புருஷனிடத்தில் உலகமும் நிற்கும்.

जाड्यं धियो हरतिसिञ्चति वाचिसत्यं
मानोन्नतिं दिशतिपापमपाकरोति ।
चेतः प्रसादयतिदिक्षुतनोतिकीर्तिं
सत्यङ्गतिः कथयकिन्न करोति पुंसाम् ।।

ஜாட்யம் தியோ ஹரதிஸிஞ்சதி வாசிஸத்யம்
மானோன்னதிம் திசதிபாபமபாகரோதி ।
சேத: ப்ரஸாதயதி திக்ஷுதனோதி கீர்த்திம்
ஸத்யங்கதி: கதயகின்ன கரோதி பும்ஸாம் ॥

நல்லவர்களுடைய சேர்க்கையானது அறிவிலுள்ள சோம்பேறித்தன்மையைப் போக்கும். வாக்கில் உண்மை உண்டாக்கும். கௌரவத்தைத் தரும். பாவங்களைப் போக்கும். மனதைத் தெளிவாக்கும். புகழைத் திக்குகளிலெல்லாம் பரவச்செய்யும். இன்னும் எதைத்தான் செய்யாது? எல்லாவற்றையும் செய்யும்.

दौर्मन्त्र्यां नृपतिर्विनश्यति यतिस्सङ्गात्सुतोलालना-
द्विप्रोनध्ययनात्कुनंकुतलयाच्छीलङ्खलोपासनात् ।
ह्रीर्माद्यादनवेक्षणादपिकृषिः स्नेहः प्रवाशाश्रया-
न्मैत्रीचा प्रणयात्समृद्धिरनयात्यागात्प्रमादाद्धनम् ।।

தௌர்மந்த்ர்யாம் ந்ருபதிர்விநச்யதி யதிஸ்ஸங்காத்ஸுதோலாலனா-
த்விப்ரோநத்யயனாத்குனம்குதலயாச்சீலங்கலோபாஸனாத் ।
ஹ்ரீர்மாத்யாதனவேக்ஷணாதபிக்ருஷி: ஸ்னேஹ: ப்ரவாசாச்ரயான்
மைத்ரீசா ப்ரணயாத்ஸம்ருத்திரனயாத்யாகாத்ப்ரமாதாத்தனம் ॥

கெட்டவன், நல்லவரிடத்திலுள்ள நல்ல குணங்களையெல்லாம் கெட்ட குணங்களாகவே நினைப்பான். எப்படியெனில் வெட்கம் உள்ளவனைப் பார்த்து ஜடன் என்பான். விரத ஒழுக்கமுள்ளவனை டாம்பீகன் என்பான். ஆசாரம் உள்ளவனை ஏமாற்றுக்காரன் என்பான். சூரனை தயை இல்லாதவன் என்பான். முனீச்வரரை அறிவில்லாதவன் என்பான். ப்ரியமாகப் பேசுபவனை ஏழை (தெம்பில்லாதவன்) என்பான். தேஜஸ் உள்ளவனை கர்வம் உள்ளவன் என்பான். பேச்சாற்றல் உள்ளவனை வாயாடி என்பான். நல்ல நிலையான மனமுள்ளவனை முடியாதவன் என்பான். ஆகையால் கெட்டவனால் குறைகூறப்படாத நல்லவரிடத்திலுள்ள குணங்கள் நல்ல குணங்கள் என்று அறியப்படாதது.

दानं भोगो नाशस्तिस्रोगतयो भवन्ति वित्तस्य ।
यो न ददाति न भुङ्क्ते तस्य तृतीयागतिर्भवति ।।

தானம் போகோ நாசஸ்திஸ்ரோகதயோ பவந்தி வித்தஸ்ய ।
யோ ந ததாதி ந புங்க்தே தஸ்ய த்ருதீயாகதிர்பவதி ॥

செல்வத்துக்குத் தானம், அனுபவம், நாசம் என்பதாக மூன்றுவகையான கதிகள் உண்டு. எந்த மனிதன், ஒருவருக்கும் கொடுக்காமலும், தானும் அனுபவிக்காமலும் இருக்கிறானோ அவனுடைய செல்வம் நாசமடையும்.

यस्यास्तिवित्तं स नरः कुलीन-
स्सपण्डितस्सश्श्रुतवान्विधिज्ञः ।
स एव वक्ता स च दर्शनीय-
स्सर्वेगुणाः काञ्चनमाश्रयन्ति ॥

யஸ்யாஸ்திவித்தம் ஸ நர: குலீன:
ஸபண்டிதஸ்ஸச்ச்ருதவானவிதிக்ஞ: ।
ஸ ஏவ வக்தா ஸ ச தர்சனீய:
ஸர்வேகுணா: காஞ்சனமாச்ரயந்தி ॥

செல்வம் உள்ளவனே குலவான் அவனே பண்டிதன், அவனே சாஸ்த்ரம் அறிந்தவன். அவனே செய்யவேண்டியவைகளை அறிந்தவன். அவனே பேசத் தெரிந்தவன். அவனே பார்க்கத் தெரிந்தவன். அனைத்து குணங்களும் செல்வத்தையே அனுசரித்து உள்ளன.

दुर्जनः परिहर्तव्यो विद्ययालङ्कृतोपिसन् ।
मणिनाभूषितः सर्पः किमसौ न भयङ्करः ॥

துர்ஜன: பரிஹர்த்தவ்யோ வித்யயாலங்க்ருதோபிஸன் ।
மணினாபூஷித: ஸர்ப்ப: கிமஸௌ ந பயங்கர: ॥

ரத்னங்களால் அலங்கரிக்கப் பெற்றதாயினும், பாம்பானது எப்படி பயங்கரமானதோ அப்படியே கெட்டவன் நன்கு படித்தவனாக இருந்தாலும், அவனை ஒதுக்கிவிட வேண்டும்.

जाड्यं ह्रीमति गण्यते व्रतरतेदंभश्शुचौकैतवं
शूरेनिर्घृणतामुनौविमतिता दैन्यं प्रियालापिनि ।
तेजस्विन्यवलिप्ततामुखरिता वक्तव्यशक्तिस्स्थिरे
तत्कोनामगुणो भवेत्सुगुणिनां यो दुर्जनैर्नाङ्कितः ॥

ஜாட்யம் ஹ்ரீமதி கண்யதே வ்ரதரதேதம்பச்சுசௌளகைதவம்
சூரேநிர்க்ருணதாமுனௌவிமதிதா தைன்யம் ப்ரியாலாபினி ।
தேஜஸ்வின்யவலிப்ததாமுகரிதா வக்தவ்யசக்திஸ்திரே
தத்கோநாமகுணோ பவேத்ஸுகுணினாம் யோ துர்ஜனைர்நாங்கித: ॥

கெட்டவன் நல்லவரிடத்துள்ள நல்ல குணங்களையும் கெட்ட குணங்களாக நினைப்பான். எவ்வாறெனில், வெட்கமுள்ளவனை ஜடன் என்பான். நல்ல ஒழுக்கம் உள்ளவனை டாம்பீகன் என்பான். ஆசாரமாக உள்ளவனை ஏமாற்றுக்காரன் என்பான். சூரனை இரக்கம் இல்லாதவன் என்பான். முனீஸ்வரரை அறிவில்லாதவன் என்பான். அன்பாகப் பேசுபவனை வீரமில்லாதவன் என்பான். தேஜஸ் உள்ளவனை கர்வமுடையவன் என்பான். பேசும் திறமை உள்ளவனை வாயாடி என்பான். நிலையாக இருப்பவனை முடியாதவன் என்பான். ஆகையால் கெட்டவன் குறைசொல்லாத நல்லவரிடத்திலுள்ள நல்ல குணங்கள் நல்லதென்று அறியமுடிகிறது. (கெட்டவர்கள் அனைத்தையும் குறைசொல்வார்கள் என்பது கருத்து).

लोभश्चेदगुणेन किं पिशुनता यद्यस्ति किं पातकै-
स्सत्यं चेत्तपसा च किं शुचिमनो यद्यस्ति तीर्थेन किम् ।
सौजन्यं यदि किं बलेन महिमा यद्यस्ति किं मण्डनै-
स्सद्विद्यायदि किं धनैरपयशो यद्यस्ति किं मृत्युना ।।

லோபச்சேதகுணேன கிம் பிசுனதா யத்யஸ்தி கிம் பாதகைஸ்-
ஸத்யம் சேத்தபஸா ச கிம் சுசிமனோ யத்யஸ்தி தீர்த்தேன கிம் ।
ஸௌஜன்யம் யதி கிம் பலேன மஹிமா யத்யஸ்தி கிம் மண்டனைஸ்-
ஸத்வித்யா யதி கிம் தனைரபயசோ யத்யஸ்தி கிம் ம்ருத்யுனா ॥

பேராசை உண்டாகியிருந்தால் மற்ற துர்குணம் வேண்டியதில்லை. புறம்கூறும் பழக்கம் இருந்தால் மற்ற பாபம் வேண்டியதில்லை. உண்மை பேசுதல் இருந்தால் வேறு தபஸ் தேவையில்லை. நல்ல மனம் இருந்தால் தீர்த்தயாத்திரை வேண்டியதில்லை. ஸௌஜன்யம் உண்டாகியிருந்தால் வேறு பலம் வேண்டியதில்லை. நிறைந்த கல்வி அறிவிருந்தால் வேறு பொருள் வேண்டியதில்லை. கெட்ட பெயர் வந்துவிட்டால் வேறு இறப்பு தேவையில்லை.

एतेसत्पुरुषा परार्थघटकाः स्वार्थान्परित्यज्यये
सामान्यास्तु परार्थमुद्यमभृतमस्वार्था विरोधेनये ।
तेमीमानुष राक्षसाः परहितं स्वार्थाय निघ्नन्ति ये
ये तुघ्नन्ति निरर्थकं परहितं ते के न जानीमहे ।।

ஏதேஸத்புருஷா பரார்த்தகடகா: ஸ்வார்தான்பரித்யஜ்யயே
ஸாமான்யாஸ்து பரார்த்தமுத்யமப்ருதமஸ்வார்தா விரோதேனயே ।
தேமீ மானுஷ ராக்ஷஸா: பரஹிதம் ஸ்வார்த்தாய நிக்னந்த்தி யே
யே துக்னந்தி நிரர்த்தகம் பரஹிதம் தே கே ந ஜானீமஹே ॥

தனது காரியத்தை விட்டாயினும் பிறர் காரியத்தை சீர்படுத்துபவர் ஸஜ்ஜனர். தனது காரியத்திற்கு விரோதமில்லாமல் பிறர் காரியத்தைச் செய்பவர் மத்யமர். தனது காரியத்தின்பொருட்டு பிறர் காரியத்தைக் கெடுப்பார் மானுஷராக்ஷஸர் (அதமர்). தனக்கு ஒரு ப்ரயோஜனமும் இல்லாமல் வீணாக மற்றவருடைய காரியத்தைக கெடுப்பவர் யாரோ ? அறிய இயலவில்லை.

पद्माकरं दिनकरो विकची करोति
चन्द्रोविकासयति कैरवचक्रवालम् ।
नाभ्यर्थितो जलधरोपि जलं ददाति
सन्तस्स्वयं परहिते विहिताभियोगः ।।

பத்மாகரம் தினகரோ விகசீ கரோதி
சந்த்ரோவிகாஸயதி கைரவசக்ரவாளம் ।
நாப்யர்த்திதோ ஜலதரோபி ஜலம் ததாதி
ஸந்தஸ்ஸ்வயம் பரஹிதே விஹிதாபியோக: ॥

சூரியன் தாமரையை மலரச்செய்கிறான். சந்திரன் ஆம்பலை மலரச் செய்கிறான். மேகங்கள் யாரும் கேட்காமலே ஜலத்தைப் பொழிகின்றன. அதுபோல நல்லவர்கள் மற்றவர்களுக்கு ஹிதத்தை உண்டாக்கவே தங்கள் பொருளை செலவும் அனுபோகமும் செய்கிறார்கள்.

गजभुजङ्गविहङ्गमपन्धनं
शशिदिवाकरयोग्रहपीडनम् ।
मतिमताञ्च विलोक्य दरिद्रतां
विधिरहोबलवानिति मे मतिः ।।

கஜபுஜங்கவிஹங்கமபந்தனம்
சசிதிவாகரயோக்ரஹபீடனம் ।
மதிமதாஞ்ச விலோக்ய தரித்ரதாம்
விதிரஹோபலவானிதி மே மதி: ॥

கஜங்கள் (யானைகள்), பாம்புகள், பக்ஷிகள் இவை கட்டுப்பாட்டுடன் இருப்பதையும்; சந்திர - ஸூர்யர், ராஹு - கேதுவால் பீடை அடைதலையும்; புத்திமான்களிடத்தில் தரித்ரநிலை இருப்பதையும் பார்த்தால் **விதி** வலியதே அன்றி மற்ற பலங்கள் எத்தனை இருந்தாலும் அவை பயனற்றவையே.

**नैवाकृतिः फलति नैव कुलञ्चशीलं**
**विद्यापि नैव न च यन्न कृतापि सेवा ।**
**भाग्यानिपूर्वतपसा खलु सञ्चितानि**
**काले फलन्ति पुरुषस्य यथैव वृक्षाः ।।**

**நைவாக்ருதி: பலதி நைவ குலஞ்சசீலம்**
**வித்யாபி நைவ ந ச யன்ன க்ருதாபி ஸேவா ।**
**பாக்யானி பூர்வதபஸா கலு ஸஞ்சிதானி**
**காலே பலந்தி புருஷஸ்ய யதைவ வ்ருக்ஷா: ॥**

அழகு, நல்ல குலத்தில் பிறந்த பிறப்பு, ஒழுக்கம், கல்வியறிவு, முயற்சியால் செய்த ஸேவை இவை அனைத்தும் இப்பிறவியில் எந்த பலனையும் தராது. பூர்வ ஜன்மத்தில் செய்த தவப்பயனால் பெறப்பெற்ற பாக்யங்கள் ஒரு மனிதனுக்கு அதற்குரிய காலம் வரும்போது மரங்கள் பழம் பழுத்து நமக்கு அளிப்பதுபோல அளிக்கும்.

**त्यजदुर्जनसंसर्गं भजसाधुसमागमम् ।**
**कुरुपुण्यमहोरात्रं स्मर नित्यमनित्यताम् ।।**

**த்யஜதுர்ஜனஸம்ஸர்கம் பஜஸாதுஸமாகமம் ।**
**குருபுண்யமஹோராத்ரம் ஸ்மர நித்யமனித்யதாம் ॥**

இந்த உடலானது நிலையற்றது என்பதை மனதில்கொண்டு இரவும் பகலும் புண்யத்தைச் செய்து; கெட்டவர்களுடனான நட்பைவிட்டு, நல்லவர்களுடன் சேர வேண்டும்.

**मुखं प्रसन्नं विमला च दृष्टिः**
**कथानुरागो मधुरा च वाणी ।**
**स्नेहाधिकस्सम्भ्रम दर्शनं च**
**सदानुरक्तस्य जनस्यलक्षणम् ।।**

**முகம் ப்ரஸன்னம் விமலா ச த்ருஷ்டி:**
**கதானுராகோ மதுரா ச வாணீ ।**
**ஸ்னேஹாதிகஸ்ஸம்ப்ரம தர்சனம் ச**
**ஸதானுரக்தஸ்ய ஜனஸ்யலக்ஷணம் ॥**

சிரித்த முகமும், குளிர்ந்த பார்வையும், நண்பனுடைய சொல்லைக் கேட்க வேண்டும் என்ற எண்ணமும், இன்பமான சொல்லும், சிறந்த நண்பரைக் கண்ட உடனே சந்தோஷப்படுத்தலும் ஆகிய இவை அனைத்தும் அன்பு உள்ளவனுடைய லக்ஷணங்களாகும்.

**अतुष्टिदानं कृतपूर्वनाशनं अमाननं दुश्चतानुकीर्तनम् ।**
**अथाप्रसङ्गे न च नामविस्मृतिर्विरक्तभावस्य जनस्य लक्षणम् ।।**

**அதுஷ்டிதானம் க்ருதபூர்வநாசனம் அமானனம் துச்சரிதானுகீர்த்தனம் ।**
**அதாப்ரஸங்கேன ச நாமவிஸ்ம்ருதிர்விரக்தபாவஸ்ய ஜனஸ்ய லக்ஷணம் ॥**

கிடைத்ததைக் கொண்டு த்ருப்தி அடையாமையும்; செய்த நன்றியை மறத்தலும், மரியாதை இல்லாதிருத்தலும், கெட்ட நடத்தையை புகழ்தலும், பேசிக் கொண்டிருக்கும்பொழுதே எதிராளியின் பெயரை மறந்து விடுவதும் ஆகிய இவை அனைத்தும் அன்பு இல்லாதவனின் லக்ஷணங்களாகும்.

**गोभिर्विप्रैश्च वेदैश्च सतीभिस्सत्यवादिभिः ।**
**अलुब्धैर्दानशीलैश्च सप्तभिर्धार्यतेमही ।।**

**கோபிர்விப்ரைச்ச வேதைச்ச ஸதீபிஸ்ஸத்யவாதிபி: ।**
**அலுப்தைர்தானசீலைச்ச ஸப்தபிர்தார்ய தே மஹீ ॥**

பசுக்கள், ப்ராம்மணர்கள், வேதங்கள், பதிவ்ரதைகள், உண்மை பேசுபவர்கள், நிறைந்த மனமுடையவர்கள், தானம் செய்பவர்கள் ஆகிய இந்த எழுவராலும் உலகம் பாதுகாக்கப்படுகிறது.

**अस्थिरं जीवितं लोके अस्थिरं धन यौवनम् ।**
**अस्थिरं दारपुत्रादि धर्मकीर्ति द्वयं स्थिरम् ।।**

**அஸ்திரம் ஜீவிதம் லோகே அஸ்திரம் தன யௌவனம் ।**
**அஸ்திரம் தாரபுத்ராதி தர்மகீர்த்தி த்வயம் ஸ்திரம் ॥**

வாழ்நாள், பணம், இளமை, மனைவி, மக்கள் (குழந்தைகள்) ஆகிய அனைத்தும் நிலையற்றவை. நாம் செய்யும் தர்மமும், அதனால் வரும் புகழும் நிலையானவை.

**यत्र विद्यागमो नास्ति यत्रनास्तिधनागमः ।**
**यत्र चात्मसुखश्चास्ति न तत्र दिवसं वसेत् ।।**

**யத்ர வித்யாகமோ நாஸ்தி யத்ரநாஸ்தி தனாகம:।**
**யத்ர சாத்மஸுகம் நாஸ்தி ந தத்ர திவசம் வஸேத் ॥**

எந்த இடத்தில் கல்வி, பண வருமானம், சுகம் ஆகிய இவைகளில் ஒன்றுகூட கிடைக்காதோ அந்த இடத்தில் ஒரு பகல்கூட வாஸம் செய்யக்கூடாது.

**असारभूत संसारे सारमेतच्चतुष्टयम् ।**
**काशीवासस्सतांसङ्गो गङ्गाम्भश्शम्भुपूजनम् ।।**

**அஸாரபூத ஸம்ஸாரே ஸாரமேதச்சதுஷ்டயம் ।**
**காசீவாஸஸ்ஸதாம்ஸங்கோ கங்காம்பச்சம்பு பூஜனம் ॥**

ஸாரமில்லாத இந்த வாழ்க்கையில் காசியில் வசித்தலும், நல்லவரோடு சேர்க்கையும், கங்கையில் நீராடுவதும், சிவபூஜை செய்வதுமாகிய இந்த நான்கும் ஸாரமானது.

**चत्वारोवित्तदायादा धर्माग्नि नृपतस्कारा ।**
**ज्येष्टपुत्रावमानेन त्रयः कुप्यन्ति सोदराः ।।**

**சத்வாரோ வித்ததாயாதா தர்மாக்னி ந்ருபதஸ்காரா ।**
**ஜ்யேஷ்டபுத்ராவமானேன த்ரய: குப்யந்தி ஸோதரா: ॥**

ஒருவன் சம்பாதித்த பொருளை தர்மம், அக்னி, ராஜா, திருடன் ஆகிய இந்த நான்கு மகன்களும் அனுபவிக்கத் தக்கவர்கள். அவர்களில் மூத்த குமாரனாகிய தர்மத்திற்கு நாலில் ஒரு பங்கு செலவழிக்காதவனுடைய பொருளை மற்ற மூன்று பிள்ளைகளாகிய அக்னி, அரசன், கள்ளன் அபகரிப்பார்கள்.

**ज्योतिषं व्यवहारञ्च प्रायश्चित्तं चिकित्सकम् ।**
**विनाशस्त्रेणयोब्रूयात्तमाहुर्ब्रह्मघातकम् ।।**

**ஜ்யோதிஷம் வ்யவஹாரஞ்ச ப்ராயச்சித்தம் சிகித்ஸகம் ।**
**வினாசஸ்த்ரேணயோப்ரூயாத்தமாஹு ப்ரம்மகாதகம் ॥**

சோதிடம், பேச்சுவார்த்தை, பரிஹாரம், வைத்தியம் ஆகிய இந்த நான்கையும் சாஸ்திரம் ஸம்ப்ரதாயம் தெரிந்துகொள்ளாமல் சொல்பவன் ப்ரம்மஹத்தி செய்தவன் எனப்படுவான்.

**यन्मनीषिपदांभोज रजः कणपवित्रितम् ।**
**तदेवभवनं नोचेत्भकारस्तत्रलुप्यते ।।**

**யன்மனீஷிபதாம்போஜ ரஜ: கணபவித்ரிதம் ।**
**ததேவபவனம் நோசேத்பகாரஸ்தத்ர லுப்யதே ॥**

எந்த க்ருஹமானது வித்வான்களுடைய கால் தூசிகளினால் பரிசுத்தம் செய்யப்பட்டதோ அதற்குத்தான் **பவனம்** என்று பெயர். அப்படிச் செய்யப்படாவிடில் பவனம் என்ற பதத்தின் முதல் எழுத்தை இல்லாது படிக்கவேண்டும். அதாவது **வனம்** என்ற பொருளாகும்.

**दातारं कृपणंमन्ये सर्वमादाय गच्छति ।**
**अदातापुरुषस्त्यागी सर्वं दक्षैव गच्छति ।।**

**தாதாரம் க்ருபணம்மன்யே ஸர்வமாதாய கச்சதி ।**
**அதாதாபுருஷஸ்த்யாகீ ஸர்வம் தக்ஷைவ கச்சதி ॥**

தானவானானவன் தான் கொடுத்த பொருளையெல்லாம் தான் லோகாந்தரம் போகும்பொழுது ஒன்றுக்கு ஆயிரமாக வாங்கிக்கொண்டு போவதால் அவனை க்ருபணன் என்றும், கொடாத லோபி (கஞ்சன்) லோகந்தரம் போகும்பொழுது எல்லாவற்றையும் கொடுத்துவிட்டு போவதால் அவன் மஹாத்யாகி என்றும் எண்ணுகிறேன்.

**स्त्रिय एव कलौमृत्युर्विधात्राकल्पितो गृहे ।**
**नारीसामान्यमेतत्तु क्वचित्साध्विप्रकल्पते ॥**

**ஸ்த்ரிய ஏவ கலௌம்ருத்யுர்விதாத்ராகல்பிதோ க்ருஹே ।**
**நாரீஸாமான்யமேதத்து க்வசித்ஸாத்விப்ரகல்பதே ॥**

கலியுகத்தில் ப்ரம்மதேவனால் வீட்டுக்கு வீடு ஸ்த்ரீகளையே ம்ருத்யுவாக ஏற்பாடு செய்யப்பட்டு இருக்கிறது. ஆனால் இது பொதுவாக சொல்லப்பட்டதாதலால் சில ஸ்த்ரீகள் நல்லவர்களாகவும் இருப்பார்கள்.

**अश्वश्शस्त्रं शास्त्रं वीणावाणीनरश्च नारी च ।**
**पुरुषविशेषंप्राप्ता भवन्त्ययोग्यस्त्वयोग्याश्च ।।**

அச்வச்சஸ்த்ரம் சாஸ்த்ரம் வீணாவாணீநரச்ச நாரீ ச ।
புருஷவிசேஷம்ப்ராப்தா பவந்த்யயோக்யஸ்த்வயோக்யாச்ச ॥

குதிரை, ஆயுதம், சாஸ்த்ரம், வீணை, வாக்கு, பெண் ஆகிய இவர்கள் எந்த மனுஷ்யனை அண்டுகிறார்களோ ,அவனுடைய குணத்திற்குத் தக்கபடி நல்லவர்களாகவோ, கெட்டவர்களாகவோ மாறிவிடுவார்கள்.

शतेषु जायतेशूरः सहस्त्रेषु च पण्डितः ।
वक्ताशत सहस्त्रेषु दाता भवति वा न वा ।।

சதேஷு ஜாயதேசூர: ஸஹஸ்ரேஷு ச பண்டித: ।
வக்தாசதஸஹஸ்ரேஷு தாதா பவதி வா ந வா ॥

நூற்றில் ஒருவன் சூரனாகவும், ஆயிரத்தில் ஒருவன் பண்டிதனாகவும், பத்தாயிரத்தில் ஒருவன் பேச்சாற்றல் நிறைந்தவனாகவும் உண்டாவான். தாதா (தானவான்) தோன்றியிருக்கிறானோ இல்லையோ தெரியாது.

कुक्षौ तिष्ठति यस्यान्नं वेदाभ्यासेन जीर्यति ।
उद्धरेत्सप्तगोत्राणि कुलमेकोत्तरं शतम् ।।

குக்ஷௌ திஷ்டதி யஸ்யான்னம் வேதாப்யாஸேந ஜீர்யதி ।
உத்தரேத்ஸப்தகோத்ராணி குலமேகோத்தரம் சதம் ॥

வேதம் சொல்வதால் ஜீரணமாகும் வயிற்றில் யாருடையதான அன்னம் சேருமோ அந்த அன்னம் இட்டவனை ஏழு கோத்ரத்துடனும், நூற்றொரு குலத்துடனும் கடைதேரும்படிச் செய்யும்.

सममब्राह्मणे दान सहस्त्रं ब्राह्मण ब्रुवे ।
अयुतं श्रोत्रियेदानमनन्तं वेदपारगे ।।

ஸமமப்ராம்மணே தான ஸஹஸ்ரம் ப்ராம்மண ப்ருவே ।
அயுதம் ச்ரோத்ரியேதானமனந்தம் வேதபாரகே ॥

ப்ராம்மணன் தவிர மற்றவர்களுக்குக் கொடுக்கும் தானமானது கொடுத்தது போலவும், ஸ்நானம் முதலான கர்மாக்களை செய்யாமல் ப்ராம்மணன் என்ற பெயரை மட்டும் வைத்துக்கொண்டு இருப்பவனுக்குக் கொடுக்கும் தானம் ஆயிரம் மடங்கு அதிகமாகவும், கொஞ்சம் வேதாத்யானம் செய்து நித்ய கர்மானுஷ்டானமும் செய்யும்

ப்ரம்மணனுக்குச் செய்யும் தானம் பத்தாயிரம் பங்கு ஜாஸ்தியாகவும், ஸாங்கமாய் வேதாத்யயனம் செய்து கர்மானுஷ்டானமும் செய்கிற ப்ராம்மணனுக்குக் கொடுக்கும் தானம் அபரிமிதமாகவும், தானம் கொடுத்தவனுக்கு உரிய பலனானது அடுத்த ஜன்மத்தில் உண்டாகும்.

**येषां त्रयी वाग्विधेया तेषां वाचासमीरितम् ।**
**अलभ्यमपिलभ्यंस्यादितित्रैय्यनुशासनम् ।।**

**யேஷாம் த்ரயீ வாக்விதேயா தேஷாம் வாசாஸமீரிதம் ।**
**அலப்யமபிலப்யம் ஸ்யாதிதித்ரைய்யனுசாஸனம் ॥**

இடைவிடாமல் வேதமோதும் ப்ராம்மணன் சொன்ன சொல்படி நடக்க இயலாத செயலாயினும் நடைபெற்றுவிடும் என்பது வேதத்தின் கட்டளை. எனவே, அப்படிப்பட்ட ப்ராம்மணர்களை தவறாகப் பேசாமல், அவர்களுக்கு உதவிகள் செய்து சந்தோஷப்படுத்தி அவர்களது வாழ்த்துக்களை (ஆசீர்வாதங்களை)ப் பெறவேண்டும்.

**ब्राह्मणा यानिभाषन्ते मन्यन्ते तानि देवताः ।**
**सर्व देवमयो विप्रो न तद्वचनमन्यथा ।।**

**ப்ராம்மணா யானிபாஷந்தே மன்யந்தே தானி தேவதா: ।**
**ஸர்வ தேவமயோ விப்ரோ ந தத்வசன மன்யதா ॥**

அனைத்து தேவதைகளின் ஸ்வரூபமாக விளங்கும் ப்ராம்மணன் எதைச் சொன்னபோதிலும் அதனை தேவதைகள் ஆமோதிக்கிறார்கள். எனவே, ப்ராம்மணனுடைய சொல் எப்பொழுதும் வீணாவதில்லை.

**उपचारः कर्तव्यो यावदनुप्तं न सौहृदाः पुरुषाः ।**
**उत्पन्नसौहृदानामुपचारः कैतवं भवति ।।**
**உபசார: கர்த்தவ்யோ யாவதநுப்தம் ந ஸௌஹ்ருதா: புருஷா: ।**
**உத்பன்னஸௌஹ்ருதானாமுபசார: கைதவம் பவதி ॥**

நட்பு ஏற்படாதவரையில் ஒருவனைக் கண்டால் மரியாதை செய்யவேண்டும். நட்பு ஏற்பட்ட பிறகு செய்யும் மரியாதையானது ஏமாற்றுதல்போல் ஆகும. எனவே செய்யக்கூடாது.

**अन्धे तमसिवार्धिक्ये कर्दमाम्बुपदेषु च ।**
**विश्वामित्रा हि पशुषु दण्डं दशगुणं भवेत् ।।**

அந்தே தமஸிவார்த்திக்யே கர்தமாம்பு பதேஷு ச ।
விச்வாமித்ரா ஹி பசுஷு தண்டம் தசகுணம் பவேத் ॥

குருடு, இருட்டு, மூப்பு, சேறு, தண்ணீர், பக்ஷி, சுனகம், சத்ரு, பாம்பு, மாடு ஆகிய இவைகளால் தனக்கு ஒரு துன்பம் வரும்பொழுது காப்பாற்றுமாதலால் தண்டம் (தடி / குச்சி / ஊன்றுகோல்) பத்து குணமுள்ளதாகும்.

वाङ्माधुर्यात्सर्वलोकप्रियत्वं
वाक्यपारुष्यात्सर्वलोकाप्रियत्वम् ।
कोवालोके कोकिलस्योपकारः
को वा लोके गार्दभस्यापकारः ॥

வாங்மாதுர்யாத் ஸர்வலோக ப்ரியத்வம்
வாக்யபாருஷ்யாத் ஸர்வலோகாப்ரியத்வம் ।
கோ வா லோகே கோகிலஸ்யோபகார:
கோ வா லோகே கார்தபஸ்யாபகார: ॥

குயிலிடத்தில் அதன் இனிய சொல்லினால் எல்லோருக்கும் ஒரு ஆசையும்; கழுதையிடத்தில் அதன் கொடூரமான சப்தத்தால் ஒரு வெறுப்பும் உண்டாவதுபோல, எல்லா ஜனங்களுக்கும் இனிய சொற்களால் ஒரு ஆசையும், கடுஞ்சொற்களால் ஒரு வெறுப்பும் உண்டாகின்றன.

अहो स सदृशी वृत्तिर्मद्दलस्य खलस्य च ।
यावन्मुशगतं पिण्डं तावन्मधुर भाषणम् ॥

அஹோ ஸ ஸத்ருசீ வ்ருத்திர்மத்தளஸ்ய கலஸ்ய ச ।
யாவன்முசகதம் பிண்டம் தாவன்மதுரபாஷணம் ॥

கரணை போடுகிறவரையில் மத்தளமும், ஆஹாரம் போடுகிறவரையில் புறம் கூறுகிறவனும் நல்ல சொல் உடையவராவர். ஆகையால் மத்தளமும், துஷ்டனும் சமமாகும்.

हीनाश्रयो न कर्तव्यः कर्तव्योमहदाश्रयः ।
ईशाश्रयान्महानागः पप्रच्छगरुडं सुखम् ॥

ஹீனாச்ரயோ ந கர்த்தவ்ய: கர்த்தவ்யோமஹதாச்ரய: ।
ஈசாச்ரயான்மஹாநாக: பப்ரச்சகருடம் ஸுகம் ॥

பரமசிவனுக்கு ஆபரணமாக இருப்பதால் பாம்பானது ஆகாசத்தில் பறந்து கொண்டிருந்த கருடனைப் பார்த்து சௌக்யமா ? என்று குசலம் விசாரித்தது. எனவே, பலவானை அண்டியிருந்தால் எப்பொழுதும் குறைவு ஏற்படாது.

**आपदर्थं धनंरक्षेच्छ्रीमतामापदः कुतः ।**
**सा चेदपगतालक्ष्मी सञ्चितन्तु विनश्यति ।।**

**ஆபதர்த்தம் தனம்ரக்ஷேச்ச்ரீமதாமாபத: குத: ।**
**ஸா சேதபகதாலக்ஷ்மீ ஸஞ்சிதந்து வினச்யதி ॥**

மனிதர்கள் தங்களுக்கு வரும் ஆபத்திற்காக பணத்தைக் காப்பாற்றிவைக்க வேண்டும். ஏனெனில் பாக்யவான்களுக்கு ஆபத்தே கிடையாது. அவர்களுக்கு அந்த பாக்யமானது விலகிப் போய்விடுமேயாகில் சேர்த்துவைத்த பணமும் போய்விடும்.

**गुरुं गां दैवतं तीर्थं घृतं मधुचतुष्टयम् ।**
**प्रदक्षिणं प्रकुर्वीत प्रज्ञातांश्चवनस्पतीन् ।।**

**குரும் காம் தைவதம் தீர்த்தம் க்ருதம் மதுசதுஷ்டயம் ।**
**ப்ரதக்ஷிணம் ப்ரகுர்வீத ப்ரக்ஞாதாம்ச்ச வனஸ்பதீன் ॥**

ஒருவன் செல்லும்பொழுது வழியில் காணப்பட்ட குரு, பசு, தெய்வம், தண்ணீர், நெய், தேன், நல்ல பெரிய மரம் ஆகிய இவைகளை மேன்மைபெற விருப்பமுள்ளவன் ப்ரதக்ஷிணமாகச் செல்லவேண்டும்.

**भूतां करणसंभुक्तामसतां वागनुव्रजेत् ।**
**भवित्री तु क्रिया सर्वा सतां वाचमनुव्रजेत् ।।**

**பூதாம் கரணஸம்புக்தாமஸதாம் வாகனுவ்ரஜேத் ।**
**பவித்ரீ து க்ரியா ஸர்வா ஸதாம் வாசமனுவ்ரஜேத் ॥**

சாதாரணமானவர்கள் அவர்கள் அறிந்து நடந்த விஷயங்களை மட்டும் சொல்ல வல்லவர்கள் ஆவர். பெரியோர்கள் நடக்கப்போகிற செய்திகளைக் கூடச் சொல்ல வல்லவர்கள். ஆதலால் அறிவாளிகள் எப்பொழுதும் பெரியோர்களின் மனம் கோணாமல் நடந்துகொண்டு, பெரியோர்களின் அருளையே பெறவேண்டும்.

**लभेत सिकतासु तैलमपियत्नतः पीडयन्**
**पिबेच्चमृगतृष्णिका सुसलिलं पिपासार्दितः ।**

कदाचिदपि पर्यटन् शशविषाणमासादयेन्न-
तु प्रतिनिविष्ट मूर्खजन चित्तमाराधयेत् ।।

லபேத ஸிகதாஸு தைலமபியத்னத: பீடயன்
பிபேச்ச ம்ருகத்ருஷ்ணிகா ஸுஸலிலம் பிபாஸார்தித: ।
கதாசிதபி பர்யடன் சசவிஷாணமாஸாதயேன்ன-
து ப்ரதிநிவிஷ்ட மூர்க்கஜன சித்தமாராதயேத் ॥

மணலை எடுத்து எப்படியாவது பிழிந்து எண்ணெய் எடுத்தாலும் எடுக்கலாம்; அப்படியே தாகம் உள்ளவனும் கானல் நீரில் தண்ணீர் எடுத்துக் குடித்தாலும் குடிக்கலாம். காட்டில் திரிந்துகொண்டே இருந்தால் ஒருக்கால் முயல் கொம்பு சம்பாதிக்கலாம். மூர்க்கனுடைய மனம் கோணாமல் மட்டும் நடக்க இயலாது.

आपदामापतन्तीनां हितोप्यायाति हेतुताम् ।
मातृजङ्गाहिवत्सत्यस्तंभी भवति बन्धने ।।

ஆபதாமாபதந்தீனாம் ஹிதோப்யாயாதி ஹேதுதாம் ।
மாத்ருஜங்காஹிவத்ஸத்யஸ்தம்பீ பவதி பந்தனே ॥

ஒருவனுக்கு ஆபத்து வரும்பொழுது நல்லதுகூட ஆபத்துக்கே உதவியாக இருக்கும். அது எவ்வாறெனில், தன் தாயின் பாலை உண்ணக்கொடுத்து வைக்காமல் போகும் காலத்தில் அக்கன்றை கட்டுவதற்கு அந்த தாய்ப் பசுவின் காலே கட்டுத்தரியாகும்.

ब्रह्मायेन कुलालवन्नियमितो ब्रह्माण्डभाण्डोदरे
विष्णुर्येन दशावतार गहने क्षिप्तोमहान् शङ्कटे ।
रुद्रोयेनकपालपात्रपुटके भिक्षाटनं सेवते
सूर्योभ्राम्यति नित्यमेव गगने तस्मै नमः कर्मणे ।।

ப்ரம்மாயேன குலாலவன்னியமிதோ ப்ரம்மாண்டபாண்டோதரே
விஷ்ணுர்யேன தசாவதார கஹனே க்ஷிப்தோமஹான் சங்கடே ।
ருத்ரோயேன கபாலபாத்ரபுடகே பிக்ஷாடனம் ஸேவதே
ஸூர்யோப்ராம்யதி நித்யமேவ ககனே தஸ்மை நம: கர்மணே ॥

பானைசெய்யும் குயவனைப்போல ஓயாமல் ஸ்ருஷ்டி செய்யும் ப்ரம்மாவையும், மஹாஸங்கடமாகிய ஸம்ஸாரத்தில் தசாவதாரம் செய்த விஷ்ணுவையும், ப்ரம்ம கபாலம்

அணிந்து பிச்சை எடுக்கும் பரமசிவனையும், நிற்க நேரமில்லாமல் ஆகாசத்தில் ஓடிக்கொண்டிருக்கும் ஸூர்யனையும் பார்த்தால்; கர்மாவானது இவர்களைக்கூட விடாமல் தொந்தரவு செய்வதால் எல்லாவற்றிற்கும் மேலான அந்த கர்மத்திற்கு நான் நமஸ்காரம் செய்கிறேன்.

**शशिदिवसधूसरो गलितयौवनाकामिनी**
**सरोविगत वारिजं मुखमनक्षरं स्वाकृतेः ।**
**प्रभुर्धनपरायणस्सततदुर्गतिसज्जनो**
**नृपाङ्गणगतः सलोमनसि सप्तशल्यानि मे ।।**

**சசிதிவஸதூஸரோ களிதயௌவனாகாமினீ**
**ஸரோவிகத வாரிஜம் முகமனக்ஷரம் ஸ்வாக்ருதே: ।**
**ப்ரபுர்தனபராயணஸ்ஸததுர்கதிஸஜ்ஜனோ**
**ந்ருபாங்கணகத: ஸலோமனஸி ஸப்தசல்யானி மே ॥**

பகல் காலத்துச் சந்திரனும், இளமையற்ற பெண்ணும், தாமரை இல்லாத குளமும், படிப்பில்லாதவனுடைய அழகும், பணத்தில் மிகுந்த ஆசையுள்ள ப்ரபுவும், நித்ய தரித்ரர்களான ஸாதுக்களும், ராஜ அரண்மனையிலுள்ள துஷ்டனுமாகிய இவ்வேழும் என் மனதிற்குச் சங்கடத்தைக் கொடுப்பனவாகும்.

**आकारेणैवचतुरास्तर्कयन्तिपरेङ्गितम् ।**
**गर्भस्थं केतकी पत्रमामोदेनैवषट्पदाः ।।**

**ஆகாரேணைவசதுராஸ்தர்க்கயந்திபரேங்கிதம் ।**
**கர்பஸ்தம் கேதகீ பத்ரமாமோதேனைவஷட்பதா: ॥**

வண்டானது வெளியில் வராமல் உள்ளே இருக்கும் தாழம்பூ மொக்கைக்கூட வாஸனையினால் கண்டறிவதுபோல்; பெரியோர்கள் எதிராளியின் தோற்றத்தைப் பார்த்தே அவருடைய கருத்தை அறிந்துகொள்வார்கள்.

**राजसेवामनुष्याणामसिधारावलेहनम् ।**
**पञ्चाननपरीष्वङ्गो व्यालीवदनचुम्बवनम् ।।**

**ராஜஸேவாமனுஷ்யாணாமஸிதாராவலேஹனம் ।**
**பஞ்சானனபரீஷ்வங்கோ வ்யாளீவதன சும்பவனம் ॥**

மனுஷ்யர்கள், ராஜாவிற்கு ஸேவை செய்வது என்பது, சாணை பிடித்த கத்தியை நாவினால் நக்குவதற்கும்; சிங்கத்தைக் கட்டித் தழுவிக்கொள்வதற்கும்;

விடைபாம்பின் வாயை முத்தமிடுவதற்கும் ஒப்பாகும். (மேற்சொன்ன செயல்களைச் செய்து மனுஷ்யன் தப்பித்துக் கொண்டாலும்; ராஜ சேவை செய்து தப்பித்துக் கொள்வது மஹா அரிதாகும்)

**अगाधहृदयाभूपाः कूपा इव दुरासदाः ।**
**घटकागुणिनो नोचेत्कथं लभ्यत जीवनम् ।।**

**அகாதஹ்ருதயாபூபா: கூபா இவ துராஸதா:।**
**கடகாகுணினோ நோசேத்கதம் லப்யத ஜீவனம் ॥**

ராஜாக்கள் நீர் ஆழங்காண இயலாத கிணறுபோல் யாராலும் அறியமுடியாத நெஞ்சாழமுள்ளவர்களாதலால், அந்த ராஜாக்களிடத்திலிருக்கும் வம்சாவளி தெரிந்தவர்கள் ஸத்குணமுள்ளவராக இல்லாவிட்டால் கயறு இல்லாத பாத்திரத்திற்கு கிணற்று ஜலம் எட்டாததுபோல, அண்டினபேருக்கு ஜீவனம் (வாழ்க்கை) கிடைக்காது.

**एकाभार्या प्रकृति चपलाचञ्चला च द्वितीया**
**एकः पुत्रस्त्रिभुवनजयीमन्मथो दुर्निरीक्ष्यः ।**
**शेषशय्याप्युदधिशयनं वाहनं पन्नगारिः**
**स्मारं स्मारं स्वगृहचरितं दारुरूपो मुरारिः ।।**

**ஏகாபார்யா ப்ரக்ருதிசபலா சஞ்சலா ச த்வித்யா**
**ஏக: புத்ரஸ்த்ரிபுவனஜயீமன்மதோ துர்நிரீக்ஷ்ய:।**
**சேஷச்சய்யாப்யுததிசயநம் வாஹனம் பன்னகாரி:**
**ஸ்மாரம் ஸ்மாரம் ஸ்வக்ருஹசரிதம் தாருரூபோ முராரி:॥**

ஒரு மனைவியாகிய பூதேவி அரசர்களுக்கெல்லாம் உரியவளாய் இருப்பதாலும். மற்றொரு மனைவியாகிய லக்ஷ்மி எங்கும் செல்பவளாக இருப்பதாலும், ஒரே மகனான மன்மதன் பார்க்க இயலாதவனாக ஆகிவிட்டதாலும், படுக்கை பாம்பாக இருப்பதாலும், அதற்கு இடம் கடலாக இருப்பதாலும், வாஹனம் ஆகாசத்தில் உலாவுகின்ற கருடனாக இருப்பதாலும் மஹாவிஷ்ணுவினுடைய சரீரமானது தனது (ஸம்ஸாரத்தின்) குடும்பத்தின் இவ்வித துக்கங்களால் ஜகன்னாதத்தில் மரமாகிவிட்டது.

**अत्तुं वाञ्छति वाहनं गणपतेर्भूषा भुजङ्गः क्रुधा**
**तं वाहोपि षडाननस्य ललना वाहोपि नागाननम् ।**
**गौरीजह्नुसुतामसूयतिकलानाधं ललाटानलो**
**निर्विण्णष्वपपौकुटुम्बकलहादीशोपि हालाहलम् ।।**

அத்தும் வாஞ்சதி வாஹனம் கணபதேர்பூஷா புஜங்க: க்ருதா
தம் வாஹோபி ஷடானனஸ்ய லலனா வாஹோபி நாகானனம் ।
கௌரீஜஹ்னுஸுதாமஸூயதிகலாநாதம் லலாடானலோ
நிர்விண்ணஷ்வபபௌகுடும்பகலஹாதீசோபி ஹாலாஹலம் ॥

பிள்ளையாரின் வாஹனமாகிய மூஞ்சூரை, அவரின் திருவாபரணமாக இருக்கும் பாம்பும், அந்த பாம்பை சுப்ரமண்யருடைய வாஹனமாகிய மயிலும்; மூத்த மகனையே பார்வதிதேவிக்கு வாஹனமாகிய சிம்மமும் ஆஹாரமாக ஆக்கிக்கொள்ள எண்ணம் கொண்டிருப்பதனாலும்; பார்வதீதேவிக்கும் கங்காதேவிக்கும் நேரிட்டிருக்கும் சக்களத்திப் போராட்டத்தினாலும்; தலையில் சூடியுள்ள பிறைச்சந்திரனை (சிவபெருமானின்) தனது நெற்றிக்கண் தீ எரித்துக் கொண்டிருப்பதனாலும் இனி இந்த குடும்பத்தில் இருக்கக்கூடாது என்று நினைத்து வருந்தி விஷமுண்டார் பரமசிவன். (இந்த இரண்டு ச்லோகங்களாலும் ஹரிஹரர்களுக்கும் ஸம்ஸார துன்பம் விடவில்லை என்பது புரிகிறது.)

**अनवसरेयत्पठितं सुभाषितमपि भवति हासाय ।**
**रहसिप्रौढवधूनां रतिकाले वेदः पाठ इव ।।**

அனவஸரேயத்படிதம் ஸுபாஷிதமபி பவதி ஹாஸாய ।
ரஹஸிப்ரௌடவதூனாம் ரதிகாலே வேத: பாட இவ ॥

சமயமறிந்து சொற்களைச் சொல்லாவிட்டால், அது நல்ல சொற்களாக இருந்தாலும்; நல்ல யௌவனமுள்ள பெண்ணிடம் க்ரீடா ஸமயத்தில் வேதமோதுவது போல் பரிஹாஸத்திற்கு இடமாகும்.

**युक्तियुक्तं वचोग्राह्यं बालादपि शुकादपि ।**
**अयुक्तमपिनग्राह्यं साक्षादपि बृहस्पतेः ।।**

யுக்தியுக்தம் வசோக்ராஹ்யம் பாலாதபி சுகாதபி ।
அயுக்தமபி ந க்ராஹ்யம் ஸாக்ஷாதபி ப்ருஹஸ்பதே: ॥

பொருத்தமான சொல்லை கிளி சொன்னாலும் சிறுவர் சொன்னாலும் அதை எடுத்துக் கொள்ளவேண்டும். பொருத்தமில்லாத சொல்லாக இருந்தால் குருவே சொன்னாலும் கேட்கக்கூடாது.

**धान्यानि कीर्णानि यथा पृथिव्यां**
**संमार्जनी सञ्चिनुतेवृथैव ।**
**मूढस्तथा सञ्चिनुतेधनानि**
**दाता च भोक्ता च परोस्थि तस्य ।।**

தான்யானி கீர்ணானி யதா ப்ருதிவ்யாம்
ஸம்மார்ஜனீ ஸஞ்சினுதே வ்ருதைவ ।
மூடஸ்ததா ஸஞ்சினுதே தனானி
தாதா ச போக்தா ச பரோஸ்தி தஸ்ய ॥

பூமியில் சிந்தின தான்யத்தை ஒன்றாகச் சேர்க்கும் விளக்குமாற்றைப்போல் கருமி தனத்தை ஒன்றாகச் சேர்ப்பான். அதை தானம் பண்ணுவதற்கும், அனுபவிப்பதற்கும் வேறு மனுஷ்யன் இருப்பதால் இந்த மூடனுக்கு அந்த தனமானது துடைப்பத்து தான்யம்போல் உதவாது.

व्यापारान्तरमुत्सृज्य वीक्षमाणो वधूमुखम् ।
यो गृहेष्ववनिद्राति दरिद्राति स दुर्मतिः ।।

வ்யாபாராந்தரமுத்ஸ்ருஜ்ய வீக்ஷமாணோ வதூமுகம் ।
யோ க்ருஹேஷ்வவனித்ராதி தரித்ராதி ஸ துர்மதி: ॥

மனுஷ்யன் தனது கார்யங்களை விட்டுவிட்டு இளம்பெண்களின் முகத்தைப் பார்த்து மகிழ்ந்துகொண்டு வீட்டில் தானே உறங்குபவன் நிரந்தர தரித்ரனாக ஆவான்.

दीपच्छायानुच्छायाहन्ति पुण्यं पुरातनम् ।
साचेद्वेदविदच्छाया हन्ति पापं पुरातनम् ।।

தீபச்சாயானுச்சாயாஹந்தி புண்யம் புராதனம் ।
ஸாசேத்வேதவிதச்சாயா ஹந்தி பாபம் புராதனம் ॥

தீபத்தினுடைய நிழலும், மனிதர் நிழலும் யார் மேல் படுகிறதோ அந்த மனிதனுடைய புண்யத்தை அந்த நிழலானது அபஹரிக்கும். அதுவே வேதமோதிய ப்ராம்மணர்களுடைய நிழலானது முன் ஜன்மத்தில் செய்த பாபத்தைக்கூடப் போக்கும்.

नारायणेति शब्दोस्ति वागस्ति वशवर्तिनी ।
तथापि नरकेघोरे पतन्तीत्येतदद्भुतम् ।।

நாராயணேதி சப்தோஸ்தி வாகஸ்தி வசவர்த்தினீ ।
ததாபி நரகேகோரே பதந்தீத்யேதத்புதம் ॥

'நாராயண' என்கிற சொல்லும், அதை எப்பொழுதும் சொல்ல நல்ல நாக்கு இருக்கும்பொழுது ஜனங்கள் அந்த திருநாமத்தைச் சொல்லிக் கடைத்தேறாமல் நரகத்தில் விழுவதைக் காட்டிலும் வேறு ஆச்சர்யம் இந்த உலகத்தில் கிடையாது.

तृणादपि लघुस्थूल स्थूलादपि च याचकः ।
वायुनाकिन्न नीतोसौ मामयं याचयेदिति ।।

த்ருணாதபி லகுஸ்தூல ஸ்தூலாதபி ச யாசக:।
வாயுனாகின்ன நீதோஸௌ மாமயம் யாசயேதிதி ॥

துரும்பைக்காட்டிலும் இலவம் பஞ்சும், அதைக்காட்டிலும் பிச்சை எடுப்பவரும் லேசானவர்கள். ஆனால் அந்த துரும்பு, இலவம்பஞ்சு இவைகளைப்போல் இந்த யாசகனை ஏன் காற்று அடித்துக் கொண்டுபோகவில்லை? (யாசகன்) பிச்சை எடுப்பவனின் அருகில் சென்றால் தன்னையும் ஏதாவது கொடு என்று கேட்டுவிடுவான் என்ற பயத்தால் அடித்துக்கொண்டு போகவில்லை.

दुर्जनस्सज्जनापूर्वं पूज्यतां तेन किं सताम् ।
पूर्वं प्रक्षालितः पायुराननादधिकः किमु ।।

துர்ஜனஸ்ஸஜ்ஜனாபூர்வம் பூஜ்யதாம் தேன கிம் ஸதாம் ।
பூர்வம் ப்ரக்ஷாலித: பாயுரானனாததிக: கிமு ॥

கெட்டவர்கள் நல்லவருக்கு முன்பே மரியாதை பெற்றாலும், அது நல்லவருக்கு இகழ்ச்சியாகாது. எவ்வாறெனில், காலையில் எழுந்திருக்கும்பொழுது மலம் கழித்துக் காலைக் கழுவிய பிறகு முகத்தைக் கழுவினால் அது முகத்திற்குக் குறைவாகாது.

उपकारिषुयस्साधुस्साधुत्वेतस्य को गुणः ।
अपकारिषुयस्साधुस्ससाधुस्सद्भिरुच्यते ।।

உபகாரிஷுயஸ்ஸாதுஸ்ஸாதுத்வேதஸ்ய கோ குண:।
அபகாரிஷுயஸ்ஸாதுஸ்ஸஸாதுஸ்ஸத்பிருச்யதே ॥

தனக்கு உதவி செய்தவனுக்கு நல்லவனாக இருப்பது குணமல்ல. அபகாரம் செய்பவனுக்கு நல்லவனாக இருப்பவனே ஸத்புருஷனாவான்.

श्रुतिस्मृतीतुविप्राणां चक्षुषी द्वे विनिर्मते ।
एकेनहीनः काणस्यात्द्वाभ्यामन्धप्रकीर्तितः ।।

ச்ருதிஸ்ம்ருதீதுவிப்ராணாம் சக்ஷுஷீ த்வே வினிர்மதே ।
ஏகேனஹீன: காணஸ்யாத் த்வாப்யாமந்தப்ரகீர்த்தித: ॥

ப்ராம்மணர்களுக்கு வேதமும், சாஸ்த்ரமும் இரண்டு கண்கள். அந்த வேத சாஸ்த்ரங்களில் ஒன்று தெரியாதவன் பொட்டைக்கண்ணன். இரண்டும் தெரியாதவன் குருடன்.

**भोजनं विप्रसङ्कीर्णं मन्दिरं बन्धुसंयुतम् ।**
**शयनं सुतसङ्कीर्णं देहि मे मधुसूदन ।।**

**போஜனம் விப்ரஸங்கீர்ணம் மந்திரம் பந்துஸம்யுதம் ।**
**சயனம் ஸுதஸங்கீர்ணம் தேஹி மே மதுஸூதன ॥**

ஹே! பகவானே எனக்கு ப்ராம்மண கோஷ்டியுடன் போஜனமும், உறவினர்கள் நிறைந்த வீடும், புத்ரர்கள் நிறைந்த படுக்கையும் அனுக்ரஹிக்கவேண்டும். (இதனால் இவை மூன்றும் இல்லாதவன் மஹாபாபி என்று ஆயிற்று.)

**गणेशः स्तौतिमार्जारं स्ववाहस्याभिरक्षणे ।**
**महानपि प्रसङ्गेन नीचं सेवितुमर्हति ।।**

**கணேச: ஸ்தௌதிமார்ஜாரம் ஸ்வவாஹஸ்யாபிரக்ஷணே ।**
**மஹானபி ப்ரஸங்கேன நீசம் ஸேவிதுமர்ஹதி ॥**

பிள்ளையார்கூட தன் வாஹனத்தைக் காப்பாற்றுவதற்காக பூனையை ஸேவிக்கிறார். அதுபோலவே மஹான்களும் சில சமயங்களில் அற்பர்களை ஸேவிக்கும்படி ஏற்படும்.

**सन्तप्तायसि संस्थितस्यपयसोनामापि न श्रूयते**
**मुक्ताकारतया तदेव नलिनी पत्रस्थितं दृश्यते ।**
**अन्तः सागर शुक्तिमध्यपतितं तन्मौक्तिकं जायते**
**प्रायेणाधम मध्यमोत्तम जुषां एवं विधा वृत्तयः ।।**

**ஸந்தப்த்தாயஸி ஸம்ஸ்திதஸ்ய பயஸோ நாமாபி ந ச்ரூயதே**
**முக்தாகாரதயா ததேவ நளினீ பத்ரஸ்திதம் த்ருச்யதே ।**
**அந்த்த: ஸாகர சுக்திமத்யபதிதம் தன்மௌக்திகம் ஜாயதே**
**ப்ராயேணாதம மத்யமோத்தம ஜுஷாம் ஏவம் விதா வ்ருத்தய: ॥**

ஒருதுளி நீரை எடுத்து நன்றாய்க் காய்ந்த இரும்பின்மேல் விட்டால் அத்துளி இருந்த இடம் தெரியால் போய்விடுகிறது. அதே துளி தாமரை இலைமீது விட்டால் முத்துப்போல் காணப்படுகிறது. அதேபோல மழைத்துளி ஜலமானது கடலின் நடுவிலுள்ள சிப்பியில் விழுமானால் அது நிஜமாகவே முத்தாக ஆகிவிடுகிறது.

அதுபோல அதமன், மத்யமன், உத்தமன் இவர்களை அடைவோர்க்கு முறையே முன்சொன்னதுபோல பலன்களே கிடைக்கும். (காய்ந்த இரும்பு அதமனுக்கும், தாமரை இலை மத்யமனுக்கும், முத்துச்சிப்பி உத்தமனுக்கும் உதாஹரணமாகும்.)

**प्रारभ्यते न खलु विघ्नभयेन नीचैः**
**प्रारभ्य विघ्नविहता विरमन्ति मध्याः ।**
**विघ्नैर्मुहुर्मुहुरपि प्रतिहन्यमानाः**
**प्रारब्धमुत्तमगुणा न परित्यजन्ति ।।**

ப்ராரப்யதே ந கலு விக்னபயேன நீசை:
ப்ராரப்ய விக்னவிஹதா விரமந்தி மத்யா: ।
விக்னைர்முஹுர்முஹுரபி ப்ரதிஹன்யமானா:
ப்ராரப்தமுத்தமகுணா ந பரித்யஜந்தி ॥

கடைநிலை மனிதர்கள் தான் துவங்கும் வேலையில் தடங்கல் ஏற்பட்டுவிடும் என்ற பயத்தினால் ஒரு செயலையும் ஆரம்பிக்கமாட்டார்கள். நடுநிலை மனிதர்கள் துணிந்து ஆரம்பித்து தடைகள் ஏற்பட்டால் தான் துவங்கியதை நிறுத்திவிடுவார்கள். முதல்நிலை மனிதர்கள் எண்ணற்ற தடைகள் ஏற்பட்டபோதிலும் ஆரம்பித்த காரியத்தை நிறைவு செய்யாமல் விடமாட்டார்கள்.

**अधमा धनमिच्छन्ति धनमानौ हि मध्यमाः ।**
**उत्तमा मानमिच्छन्ति मानो हि महतां धनम् ।।**

அதமா தனமிச்சந்தி தனமாநௌ ஹி மத்யமா: ।
உத்தமா மானமிச்சந்தி மானோ ஹி மஹதாம் தனம் ॥

அதமர்கள் பொருளையே விரும்புவார்கள். மத்யமர்கள் பொருள், கௌரவம் இரண்டையும் விரும்புவார்கள். உத்தமர்கள் கௌரவத்தை மாத்திரமே விரும்புவார்கள். ஏனெனில், உத்தமர்களுக்கு கௌரவம்தான் பொருள்.

**माता समो नास्ति शरीरपोषणे**
**भार्या समो नास्ति शरीर तोषणे ।**
**विद्या समो नास्ति शरीर भूषणे**
**चिन्ता समो नास्ति शरीर शोषणे ।।**

மாதா ஸமோ நாஸ்தி சரீரபோஷணே
பார்யா ஸமோ நாஸ்தி சரீர தோஷணே ।

வித்யா ஸமோ நாஸ்தி சரீர பூஷணே
சிந்தா ஸமோ நாஸ்தி சரீர சோஷணே ॥

உடலைக் காப்பதில் அம்மாவிற்கு சமானமும், உடலை சந்தோஷப்படுத்துவதில் மனைவிக்குச் சமானமும், உடலை அலங்கரிப்பதில் (ஆபரணங்களில்) வித்யைக்குச் சமானமும், உடலை இளைக்கச் செய்வதில் கவலைக்குச் சமானமானதும் கிடையாது.

**वृद्धौ च माता पितरौ साध्वी भार्या सुतश्शिशुः ।**
**अप्यकार्यशतं कृत्वा भर्तव्यामनुरब्रवीत् ।।**

**வ்ருத்தெள ச மாதா பிதரெள ஸாத்வீ பார்யா ஸுதச்சிசு: ।**
**அப்யகார்யசதம் க்ருத்வா பர்த்தவ்யாமனுரப்ரவீத் ॥**

வயதான தாய் தந்தையரையும், நற்குணமுடைய மனைவியும், குழந்தையாகிய மகனும் ஆகிய இவர்களை எப்பாடுபட்டாவது காப்பாற்றவேண்டியவர்கள் என மனு சொன்னார்.

**खर्वाटो दिवसेश्वरस्य किरणैः सन्तापितेमस्तके**
**गच्छन्दे शमनातपं द्रुतगतिः तालस्यमूलंगतः ।**
**तत्राप्यस्य महाफलेन पतना भग्नं स शब्दं शिरः**
**प्रायोगच्छति यत्रदैवहतकः तत्रैव यान्त्यापदः ।।**

**கர்வாடோ திவஸேச்வரஸ்ய கிரணை: ஸந்தாபிதேமஸ்தகே**
**கச்சன்தே சமனாதபம் த்ருதகதி: தாலஸ்யமூலம் கத: ।**
**தத்ராப்யஸ்ய மஹாபலேன பதனா பக்னம் ஸ சப்தம் சிர:**
**ப்ராயோகச்சதி யத்ரதைவஹதக: தத்ரைவ யாந்த்யாபத: ॥**

வழுக்கைத் தலையை உடைய ஒரு மனிதன் நடந்துபோகும்பொழுது வெய்யிலிலிருந்து தன் தலையைக் காப்பாற்றுவதன் பொருட்டு நிழலிருக்கும் இடத்தைத் தேடிக்கொண்டு போகிறவனாய் ஒரு பனை மரத்தினுடைய நிழலில்போய் நின்றான். இவனுடைய கெட்ட காலத்தால் அந்த மரத்திலிருந்து ஒரு பழம் (பனம்பழம்) இவனது தலையில் விழுந்து இவனது தலை படார் என்று உடைந்தது. அதுபோல் நேரம் சரியில்லையெனில் நமக்கு வரப்போகிற ஆபத்திலிருந்து தப்பித்துக்கொள்ள எங்கு போனாலும் அங்கு அந்த ஆபத்து அவ்விடத்திலும் வந்து சேரும்.

**किं करिष्यन्ति वक्तारः श्रोता यत्र न विद्यते ।**
**नग्नक्षपणकेदेशे रजकः किं करिष्यति ।।**

கிம் கரிஷ்யந்தி வக்தார: ச்ரோதா யத்ர ந வித்யதே ।
நக்னக்ஷபணகேதேசே ரஜக: கிம் கரிஷ்யதி ॥

வஸ்திரத்தை உபயோகம் செய்யாத திகம்பரர்களான பௌத்தர்களுடைய தேசத்தில் வண்ணானுக்கு எப்படித் தொழில் இல்லையோ அதுபோல, சமயோசிதமாகவும் மிகவும் சாமர்த்தியமாகவும் பேசுபவரின் வார்த்தைகளைக் கேட்கத் தகுந்தவர்கள் இல்லாவிடில் அவர்கள் சக்தி வீண்தான்.

तृष्णे कृष्णेऽपि ते शक्तिर्दृष्ट्वामर्त्येषु काकथा ।
त्रैलोक्यव्याप्रियद्रूपं तद्रूपं वामनीकृतम् ।।

த்ருஷ்ணே க்ருஷ்ணேऽபி தே சக்திர்த்ருஷ்ட்வாமர்த்யேஷு கா கதா ।
த்ரைலோக்யவ்யாப்ரியத்ரூபம் தத்ரூபம் வாமனீக்ருதம் ॥

ஓ! பொறாமை எனப்படும் தேவியே! உன்னுடைய சக்தியானது பரமாத்மாவான ஸ்ரீமஹாவிஷ்ணுவினிடத்திலேயே ப்ரவர்த்தித்தபொழுது மனுஷ்யரைக் குறித்துச் சொல்வானேன். ஏனெனில், மூன்று உலகங்களையும் வ்யாபிக்கிற அந்த ரூபமானது உன்னால் மிகவும் குள்ளமாக செய்யப்பட்டது.

मनस्येकं वचस्येकं कर्मण्येकं महात्मनाम् ।
मनस्यन्यद्वचस्यन्यत्कर्मण्यन्यद्दुरात्मनाम् ।।

மனஸ்யேகம் வசஸ்யேகம் கர்மண்யேகம் மஹாத்மநாம் ।
மனஸ்யன்யத்வசஸ்யன்யத்கர்மண்யன்யத்துராத்மனாம் ॥

கற்ற பெரியோர்களுக்கு மனது நினைத்ததை; வாக்கால் சொல்லி, கைகள் செய்யும். துஷ்டர்களுக்கு மனது ஒன்றை நினைத்து; வாக்கு ஒன்றைச் சொல்லி, கைகள் வேறொன்றைச் செய்யும்.

प्राचीनग्रन्थमध्यस्थैर्वाक्यैस्तुसमयोचितैः ।
नीतिशास्त्रमिदं प्रोक्तं जीयादाचन्द्रतारकम् ।।

ப்ராசீனக்ரந்தமத்யஸ்தைர்வாக்யைஸ்துஸமயோசிதை: ।
நீதிசாஸ்த்ரமிதம் ப்ரோக்தம் ஜீயாதாசந்த்ரதாரகம் ॥

பெரியோர்கள் செய்த பழைய நூல்களிலிருந்து எடுத்து சேர்த்த இந்த நீதி சாஸ்த்ரமானது சந்த்ர-ஸூர்யர்கள் உள்ளவரையில் அழியாமல் எல்லோருக்கும் உயர்ந்த ஒரு நூலாக இருக்கவேண்டும்.

न विषं विषमित्याहुः ब्रह्मस्वं विषमुच्यते ।
विषमेकाकिनं हन्ति ब्रह्मस्वं पुत्रपौत्रकम् ।।

बालसहित्वमकारण हास्यं
स्त्रीषुविवादमसज्जन सेवा ।
गार्दभयानसंस्कृतवाणी
षट्सुनरो लघुतामुपयाति ॥

हीनजातिस्त्रियं मोहादुद्वहन्तो द्विजादयः ।
कुलान्येव नयन्त्याशु ससन्तानानिशूद्रताम् ।।

द्रौपद्युवाच -

सुन्दरं पुरुषं दृष्ट्वा भ्रातरं पितरं सुतम् ।
योनिद्रवति नारीणां तथ्यं मे ब्रूहि केशव ।।

पञ्चमेपतयः सन्ति मह्यं षष्ठोपिरोचते ।
पुरुषाणामभावेन सर्वानार्यः पतिव्रताः ।।

।। नीतिशास्त्रम् सम्पूर्णम् ।।

நீதிசாஸ்த்ரம் ஸம்பூர்ணம்



# சிவதத்வ சுதாநிதி

**சாஹித்ய சிரோமணி**
***எஸ். இராஜலட்சுமி,*எம்.ஏ.,பி.எல்.ஐ.எஸ்.,**
**சம்ஸ்கிருத பண்டிதர்.**

அறம், பொருள், இன்பம், வீடு என்ற நான்கு புருடார்த்தங்களையும் மனிதன் அறியவேண்டுமென்பதை நம் வேதங்கள் பகர்கின்றன. இதே விஷயங்களைத்தான் புராணங்கள் கதை வடிவம் தாங்கி, எளியமுறையில் வெளியிடுகின்றன. மேலும் நம் வேதங்கள் சம்ஸ்கிருத மொழியில் எழுதப்பட்டதாலும், அம்மொழி பயிலாதவர்களால் அதன் பொருளை அறிய இயலாது. பொருளும் அறிஞர்கள் சொன்னபடி புரிந்துகொண்டால்தான் அவ்வழியில் செல்லமுடியும். புராணங்களும் வேதவியாசரால் இயற்றப்பட்டு எளிய முறையில் கதைகள் மூலம் பாமரர்களும் புரிந்துகொள்ளும்படி அமைந்துள்ளன. அவைப் பற்பல மொழிகளிலும் மொழிபெயர்க்கப்பட்டுள்ள தால் ஜன சமுதாயத்தில் பரவுவதற்கும் வாய்ப்புள்ளது. அதன் மூலம் மக்கள் புராணங்களில் சொல்லப்பட்ட பொருளை அறிந்து அதன்படி ஒழுகமுடியும் என்பதால் வேதத்திற்கு அடுத்தப்படியாகப் புராணம் பிராமாணிகமான ஓர் சிறந்த நூலாகிறது. நாம் எந்த உலகில் வாழ்கிறோமோ அது எவ்வாறு யாரால் படைக்கப்பட்டுள்ளது. அதன் முடிவு என்ன? நாம் அந்த உலகில் எவ்வாறு ஒழுக வேண்டும், அவ்வாறு இருந்தவர் யார்? அவருடைய வரலாறு யாது, நாம் அவ்வாறு ஒழுகாவிட்டால் எந்த வீட்டிலிருந்து வெளிவந்தோமோ, அதை அடையாததால் எவ்வித இன்னல்களை அனுபவிக்கிறோமோ, அவைகளை நீக்கி, வந்த வீட்டை அடையாமல் திண்டாடுவோம். ஆகவே அதை அடைய வழி எது? இவைகளை விளக்குவதுதான் புராணம் என்ற சொல்லுக்குப் பொருளாகும்.

ஆகவே புராணம் ஓர் ஒப்பற்ற சிறந்த நூலாகும். மேலும் வேதம் தந்தையைப்போல் தனயர்களான நமக்குப் பல உபதேசங்களைச் செய்கிறது. புராணங்கள் சரளமான மொழியில் பற்பல கதைகளை உதாரணமாகச் சொல்லி நண்பன்போல் மானிடர்களை நல் வழிக்கு அழைக்கின்றன. இதனால் புராணங்களில் சொல்லப்பட்ட கதைகள் முன் கல்பாந்தரங்களில் நடந்ததாகவும் இருக்கலாம். ஓர்தத்துவத்தை வற்புறுத்தி சொல்வதற்காக, கதையை ஓர் காரணமாக உபயோகிக்கின்றன. அதுவே அதன் இலக்கியமல்ல.

சமுதாயத்தில் படித்த பண்புள்ள மனிதர்கள் வேதம் முதலியவை களாலேயே திருந்தி நல்வழியில் சென்று, அறம், பொருள், இன்பத்தை அடைந்து, அதன்மூலம் வீடான கடவுளையும் அடைந்து இன்புறுகின்றனர். ஆனால் அரைகுறை படிப்பாளிகளான நடுத்தர மக்களையும், அதன்கீழ் உள் பாமர மக்களையும் நல்வழிப்படுத்த ஒரே சாதனம் புராணம்தான். இது பற்பல மொழிகளிலும் இருப்பதால் அந்தந்த மொழியை அறிந்தவர்கள், ஆர்வத்துடன் படித்து, அதில் சொல்லப்பட்ட கதைகளால் கவரப்பட்டு திருந்தி விடுவார்கள். அத்துடன் மேல்வழிக்கு வந்து விடுவார்கள் என்ற ஒரே நோக்குடன் புராணங்கள் அமைந்துள்ளன. பலரை திருத்துவதால் வேதத்தை விட புராணங்களுக்கு முக்கியத்துவம் அளிக்கலாம்.

புராணங்கள் பதினெட்டு, அவைகளை வியாசர் எழுதியுள்ளார் என்றும் சொல்லப்படுகிறது. இவை எல்லாவற்றையும் ஒருவரே எழுதியதால், சர்ச்சைக்கு இடமில்லை எனக்கருதுகிறோம். புராணங்களில் சில விஷ்ணுவையும், சில சிவனையும் மற்றும் சில சக்தியையும் வழிபடும்படியும், அதனால் ஓர் நல்வழிக்கு வந்துவிடலாம் எனச் சொல்கின்றன. இதன்மூலம் தேவபேதத்திற்கு இடமில்லை. அதனால் ஏற்படும் வீண் விவாதங்களுக்கும் இடமில்லை. கடைசியில் பரமாத்மா ஒருவனே, பற்பல வேடம் தாங்கி, பற்பல பெயர்களால் அழைக்கப்பட்டாரே அல்லாது தெய்வங்கள் பற்பல அல்ல. இந்த தத்துவத்தைத்தான் வேதங்களின் முடிவிலுள்ள உபநிடதங்கள் கூறுகின்றன. புராணங்களும் இதை ஆமோதிக்கின்றன.

எல்லா புராணங்களும் ஒரே மாதிரியாக ஆரம்பமாகின்றன. நைமிசாரண்யத்தில் எல்லா முனிவர்களும் யாகம் செய்வதாக ஒன்று கூடினர். அந்நேரம் போக, ஏனைய நேரங்களில் வியாசரின் சீடரான சூதமுனிவரைச் சூழ்ந்துகொண்டு விரும்பிய விஷயத்தைக் கேட்பார்கள். அவரும் தான் அறிந்த விவரத்தை விளக்கிவிட்டு முனிவர்கள் கேட்ட விஷயங்களைச் சொல்ல ஆரம்பிப்பார்.

நல்லார் ஒருவர் நல்ல விஷயங்களைச் சொல்ல விரும்பினாலும் கேட்பவர் அரிதாக இருக்கும். கேட்பவர்கள் பலர் இருக்கும்பொழுது நல்லார் நல்ல சந்தர்ப்பத்தை நழுவவிடுவாரா! அவர் சொல்லப் போகும் விஷயம் ஸ்காந்தபுராணத்தில் உள்ளது. ஸ்காந்தபுராணம் பல சம்ஹிதைகளாலும் அவை கண்டங்களாலும் பிரிக்கப்பட்டுள்ளது. அதில் சனத்குமார சம்ஹிதையில் மலயாசல கண்டத்தில் இருந்து எடுக்கப்பட்ட விஷயம் சிவதத்வ சுதாநிதியாகும்.

இதில் மலயாசலத்தில் வசிக்கும் பராசக்தி, தன் கணவன் பரமேஸ்வரனிடம் பல கேள்விகள் கேட்கிறாள். அவர் தக்க பதில் அளிக்கிறார். இந்த விஷயத்தை அவர்களின் அருகில் இருந்த முருகன் தான் அறிந்து, சிவபக்தரான சனத்குமாரர் என்பவருக்குச் சொல்கிறான்.இந்த விஷயம் வியாசரை எட்ட, அவர் தன் சிஷ்யனான சூதருக்கும் சொல்ல அவர் ஏனைய முனிவர்களுக்குச் சொல்கிறார் என்பதுபோல் இந்நூல் துவங்கப்பட்டுள்ளது. இந்நூல் சரசுவதி மகால் நூலகத்தில் B. 1698. D. 10143 என்ற எண்ணில பாதுகாக்கப்பட்டு வருகிறது. இந்நூலின் சாராம்சத்தை இக்கட்டுரையில் காண்போம்.

ஒருசமயம் நைமிசாரண்யத்தில் ஒரு யாகம் காரணமாக சௌனகர் முதலிய முனிவர்கள் ஒன்று கூடினர். அதில் வியாசரின் சீடரும், எல்லா புராணங்களையும் கரைகண்டவருமான சூதமுனிவரும் கலந்துகொண்டார். ஏனைய முனிவர்கள் யாகம் செய்யும் நேரம் தவிர மற்ற நேரங்களில் சூத முனிவரை ஓர் அரியாசனத்தில் அமர்த்தி தங்களுக்கு விருப்பமான விஷயத்தைப் பற்றிக் கேட்டனர்.

சூதரே தாங்கள் எல்லா வேதங்கள், புராணங்கள் முதலியவைகளில் புலமை வாய்ந்தவர், அத்துடன் உலகில் வழக்கில் உள்ள, சைவ, வைணவ மதங்களிலும் கரைகண்டவர். நாங்கள் பற்பல புராணங்களைப் படித்திருக்கிறோம். அதனால் எங்களது மனம் குழப்பமடைகிறது. சிலர் பிரும்மம் என்றும், சிலர் விஷ்ணு என்றும், மற்றும் சிலர் சிவன் என்றும் இவ்வுலகைப் படைத்தவர் எனக்கூறுகின்றனர். இதன் உண்மையை அறியாததால் ஜனங்கள் இல்லற வாழ்க்கையிலீடுபட்டு தங்கள் பிறவியை வீணடிக்கிறார்கள். தேவர்களுக்கும் இவ்வுண்மைத் தெரியவில்லை. ஆகவே எங்களுக்கும் குழப்பமே. தாங்கள் இவ்வுண்மையை அறிந்தவரானபடியால் விஸ்தாரமாக விளக்கி எங்கள் அஞ்ஞானத்தை நீக்குவீர்களாக. உங்களைத்தவிர வேறு எவரும் இதை விளக்கிச் சொல்லமுடியாது என நம்புகிறோம். இவ்வாறு முனிவர்களால் வேண்டப்பட்ட சூதமுனிவர், இந்த தத்துவத்தை முதலில் பரமசிவனிடம் கேட்ட பார்வதியையும், பதிலளித்த பரமேசுவரரையும் அருகிலிருந்து கேட்டு, சனத்குமாரருக்கு விளக்கிய முருகனையும் அதை வியாசருக்கு அருளிய சனத்குமாரரையும், அதைத்தனக்கு உபதேசித்த குரு வியாசரையும் வணங்கிவிட்டுச் சொல்லத்தொடங்கினார்.

முனிவர்களே ! நீங்கள் கேட்டது சரியான, அறிந்துகொள்ளவேண்டிய கேள்வி இது, இதற்குப் பதில் நான் உங்களுக்கு அளித்தாலும் ஏனையவர்களும் இதை அறிந்துகொள்ளவேண்டியது தலையாய கடமையாகும். இதை அறிந்துகொண்டால் அறம், பொருள், இன்பம் மாத்திரமல்ல, மரணமும், மறுபிறவியும் அற்ற முக்தியையும் அடைவார்கள். இதைக்கேட்பவர்கள் பற்பல

பிறவிகளில் செய்த பாப மூட்டைகளை களைந்து புண்ணிய வழியில் செல்வர். ஆக எல்லாவித சுகங்களையும் இம்மையில் பெற்று நிரந்தரப் பேரின்பத்தை அடைவார்கள். வேதங்களும், வேதாந்தங்களும், இதைத்தான் திருப்பித்திருப்பிச் சொல்கின்றன. புராணங்களும் இதை ஆமோதிப்பது போல் அடிக்கடி பகர்கின்றன.

இவ்வுலகம் பரமனால் படைக்கப்பட்டது என்பதை நீங்கள் அறிவீர்கள். இவ்வுலகைக் கடைசியில் அழித்த அவன் ஒருவனே மீதி இருக்கமுடியும். சிறுவர்கள் மணலில் பற்பல வீடுகளையும், பாவனையால் பற்பல மனிதர்களையும் படைத்து விளையாடுகிறார்கள். விளையாட்டு முடிந்தவுடன் அவைகளை அழித்துவிட்டுச் சென்றுவிடுகிறார்கள். அவர்களுக்கு இது ஒரு பொழுதுபோக்கு. அதுபோல பரமனுக்கும் இது ஒரு விளையாட்டே. பூஜ்யம் என்பது மதிப்பற்றது. அதற்கு முன்னால் ஒன்றைச் சேர்த்துவிட்டால் அதற்கு பத்து என்ற மதிப்பு வந்துவிடுகிறதல்லவா. அதேபோல பரமன், மதிப்பற்ற மாயை என்ற பூஜ்யத்திற்கு முன்னாள் அமர்ந்து மதிப்பை அளித்துவிடுகிறான். மாயை, சத்வம், ரஜஸ், தமஸ் என்ற முக்குணம் படைத்தது. சத்வத்தைக் கடைப்பிடிக்கும்பொழுது சிவன் என்றும், ரஜஸ் என்பதைக் கடைபிடிக்கும்பொழுது பிரமன் என்றும், தமஸ் என்பதைப் பற்றும்பொழுது விஷ்ணுவென்றும் அழைக்கப்படுகின்றான்.

பிரம்மனாக இருந்து படைத்த உலகை, விஷ்ணுவாகிக் காப்பாற்றி, சிவனாகி அழித்துவிடுகிறான். சத்வம் வெளுப்பு, ரஜஸ் சிவப்பு, தமஸ் கருப்பு.வெளுப்பான சிவனும், சிவப்பான பிரும்மனும், கருப்பான விஷ்ணுவும் பரமனேதான். இம்மூவரும் ஒருவரே தவிற மூவரல்ல. உண்மையில் பரமன் ஒருவனே. அவன் எல்லாம் அறிந்தவன் என்றும், அறியாதவன் எப்பொழுதும் ஆனந்த வடிவமாக உள்ளவன். அவனிடம் துன்பத்தின் வாசனைக்கூட அடிப்பதில்லை. அவன் மாயையை ஆட்கொள்கிறான். இந்த உலகைப் படைத்து விடுகிறான். அதில் திக்குமுக்காடி கஷ்டப்படுகிறவன் ஜீவனே. இவன் அஞ்ஞானத்தால் பல பிறவிகளை எடுத்து புண்ணிய பாவங்களைச் செய்து அவைகளை அனுபவிக்க மறுபிறவியை அடைந்து இந்தக் காலச்சக்கரத்தில் மாட்டிக்கொண்டு மிகவும் கஷ்டப்படுகிறான். இதற்கு விடிவு காலமே இல்லையா? என்று யோசிப்பதில்லை. ஆயிரத்தில் ஒருவன் சிந்திக்கிறான். நான் யார்? நான் எங்கிருந்து வந்தேன் ? ஏன் இவ்வாறு கஷ்டமடைய வேண்டும் என்று சிந்திக்கிறான். இதைப் போக்க என்ன வழி என்று கடவுள் அருளாலும், ஆசாரியனின் உபதேசத்தாலும் சிந்தித்து ஓர் முடிவிற்கு வருகிறான்.

உபநிடதங்கள் கடவுள் அருகில் செல்வதற்கு, என் கடவுளாகவே ஆவதற்கு வழி சொல்கின்றன. அதன்படி நடக்க முயல்கிறான். தங்கக்குடத்தில் ஊற்றிய

கங்கைநீரும், சட்டியில் ஊற்றிய நீரும் ஒன்றே அல்லவா! பாத்திரம் மாற்றப்பட்டு இருக்கலாம். சமுத்திரத்தில் சூரியனின் பிரதிபிம்பம் விழுகிறது. சாக்கடையிலும் விழுகிறது. ஆயினும் பிரதிபிம்பத்தின் நீரின் குணம் ஒட்டுவதில்லையே. அதே போல் கடவுள் எங்கும் வியாபித்தவன் என்றால் என்னிடமும் அவன் இருக்கவேண்டுமே. அதை அறியாது என் உடல்,உயிர், மனம், புத்தி இவைகளின் கூட்டத்தை அல்லவே நான் நாமென்று எண்ணினேன். அதனால் பலவித இன்னல்களை அனுபவிக்கிறேன். மேற்படி நான் கூறிய பொருள்களுக்க அப்பாற்பட்ட நான் அஞ்ஞானத்தால் அவைகளை என்னுடையது என்றும், அவைகளின் காரியங்களை நான் செய்ததாகவும் எண்ணிவந்தேன் என்றே ஞானோதயம் ஏற்படத்தொடங்குகிறது.

உபநிடதங்கள் கூறியபடி நானே அவன், அவனே நான் என்று எண்ணி, எண்ணி கடைசியில் உடல், உயிர், மனம், புத்தி இவை அழிந்தாலும் இவன் கடவுளாகவே ஆகிவிடுகிறான். அஞ்ஞானத்தால் பிரிந்தவன், ஞானத்தால் சேர்ந்தவுடன் எங்கும் வியாபித்த, எல்லாம் வல்ல, எல்லாம் அறிந்த ஆனந்த வடிவம் தாங்கி விடுகிறான். இப்பொழுது அவன் பார்த்த உலமோ அந்த உலகில் அனுபவித்த கஷ்டங்களோ எதுவும் புலப்படுவதில்லை. இதைத்தான் மெய்ஞானம் எனச்சான்றோர் கூறுவர். இதை சிவஞானம் என்றும் கூறலாம். சிவன் என்று அழைக்கப்பட்ட இந்த மெய்ஞானம் உண்டாகிவிட்டால் உலகில் சிவனைத்தவிர மற்ற பொருள் எதுவும் தோன்றுவதில்லை. முன்பு தோன்றிய இப்பொருள்களை அந்தந்த பொருளாகவே நினைத்தான். அதனால் ஏற்பட்ட இன்னல்கள் கணக்கில் அடங்கா. இப்பொழுது எல்லாம் சிவனே என்று பார்க்கிறான். இதில் ஏற்படும் ஆனந்தமும் கணக்கில் அடங்கா.

இந்த ஆனந்தத்தை அடைந்த மகான்கள் நாம் பெற்ற இன்பம் பெறுக. இவ்வையகம் என்ற நல்லுணர்வுடன் எல்லோரும் அடைய வழி வகுத்தனர். அவ்வழியில் செல்லாது, அகங்காரத்தால் வேறு வழியில் சென்று ஜீவர்கள் இன்னலடைகின்றனர் என்ற தத்துவத்தை சூதர் ஏனைய முனிவர்களுக்கு உபதேசித்தார் என்பதன் சாரமே இந்த சிவதத்துவ சுதாநிதியின் சாரமாகும். இதைப்படிக்கும் அன்பர்களும் இவ்வழியிலேயே சென்று மெய்ஞானம் பெற்று இன்பத்தை அடைவார்களாக என்று அந்த எல்லாம் வல்ல இறைவனை பிரார்த்திக்கிறேன். அதற்கு இந்த சிறிய நூல் உறுதுணையாய் இருக்கும் என்று உறுதியாக நம்புகிறேன் சிவம்.

श्रीः

# तालपत्रेतिहासः तत्संरक्षणं च

**Dr. A. VEERARAGHAVAN,**
Sanskrit Pandit
Sarasasvati Mahal Library,
Thanjavur.

प्राचीनकाले लेखनार्थं उपयुक्तानि वस्तूनि तालपूर्जपत्रादीनि । तालपत्रं क्रमुकनालिकेरादि कुटुम्भेऽन्तर्भवति । कुटुम्भस्यास्य पामी अरिकेशीति वा नाम[1] । कृषिशास्त्रे तालपत्रं Borrassus flabellifer इति नाम्ना आहूयते । तालवृक्षात् गुच्छाः पत्रात्मकतया विस्तरणसमये पत्रान् छेद्यानीय सप्ताहपर्यन्तं आतपे प्रसार्य पश्चान्मासत्रयपर्यन्तं भूमौ खननं कृत्वान्ते निक्षिप्य, पुनः बहिः गृहीत्वा शुद्दीकृत्य, महानसस्योपरि अट्टालके स्थापनीयाः । महानसस्यौष्ण्यात् शैत्यांशतस्तानि विमोचितानि भवन्ति। ततः लेखनार्थं उपयुज्यन्ते इति बरोडानगरस्थ प्राच्यसंशोधन संस्थाकुलसचिवानां अभिप्रायः । वृक्षादानीतान् पत्रान् प्रप्रथमं आतपे प्रसार्य, पस्चादुष्णोदके निक्षिप्य पुनः आतपे प्रसार्य ततः शर्करान् शङ्खान् वोपयुज्य मार्दवं कृत्वा लेखनार्थं उपयोगः क्रियते इति Dr. Bimal Kumar महाशयानामाशयः[2] । एतास्वपि योग्यायोग्य परीक्षां कृत्वा लेखनाय स्वीकरणं अधोदत्तश्लोकद्धयेन विज्ञायते ।

"ताडपत्रं दृढं सौम्यं ऋजु साग्रं द्विधा कृतम् ।"
मृद्रुलं यत्प्रशस्तं तत् मतं लेखाविलेखने ॥

कर्कशं कल्मषं वक्रं हीनाग्रं त्रुटितं युगम् ।
तालपत्रं न तत् श्रेष्ठं मतं लेखाविलेखने[3] ॥

इति । पुरातनकाललेखनोपयोगि वस्तूनां निर्देशनं अपि काव्यमीमांसायां द्रष्टुं शक्यते। यथा "तस्य सम्पुटिका, सफलखटिका, समुद्गकः, सलेखनीक मषीभाजनानि, ताडिपत्राणि, भूर्जत्वचो वा सलोहक कण्टकानि तालदलानि सुसम्मृष्टाभित्तयः, सततसन्निहिता स्युः । तद्धि काव्यविद्यायाः परिकरः

---

1. Kannada Visvakosa.
2. Thanjavur Sarasvati Mahal Jl. No. 40/1992
3. Grantha Sampadana Sastra Parichaya P. No. 12.

इत्याचार्याः[1]। " एवं तञ्जपुरी राज्ये संस्थानकार्येषु अन्यतमा भवति तालपत्रकागदग्रन्थरचना[2]। तालपत्रलेखनाय एकोत्तरपञ्चशतसंख्याकाः लोहकण्टकाः (लेखिन्यः) ऐरावतेश्वरे (तारासुरे) विद्यमानराजसाम्बापुरात् सप्तविंशत्युत्तराष्टादशशतमाने स्वीकृताः[3]। ततः तालपत्रग्रन्थात् कागदपत्रे ग्रन्थान्तरीकरणमपि काले तस्मिन् कृतमासीत् । कागदोत्पत्त्यर्थं ग्रामेषु पञ्चसु कागदोत्पत्तिशालाः विनिर्मिताः[4]। ते ग्रामाः दक्षिणद्वारकापुरी (मन्नार्गुडी), कुम्भघोणं (कुडमूक्कु), कन्दुकापुरी (पन्दनल्लूर्), तिरुक्काट्टुप्पल्लि, तिरुवारूर् इत्यादयः[5]। एवं ग्रन्थान्तरीकरणाय केचन लिपिकाराः नियुज्यन्ते । ते नियुक्तलिपिकाराः । ये जनाः मातृकां लिखित्वा धनार्थं अन्येभ्यः प्रदीयन्ते ते वृत्तिलिपिकाराः । स्वस्य परस्यापि उपकारार्थं मातृकालेखनकुशलाः ते परोपकारि लिपिकाराः इति कथ्यन्ते[6]। मरात्ति राज्यपालन समये तञ्जपुर्यां नवविद्याकलानिधिशालासुप्रसिद्धा आसीत् । ऋगादि चतुर्वेदाः, षट्श्रौतसूत्राणि, सामान्यविशेषशास्त्रविषयाः, धर्मशास्त्रज्योतिषसङ्गीतशिल्पवैद्यविषयाः, देशविदेशभाषाः शालायां तस्यां बोधिताः[7]। मातृकालेखनार्थं अक्षरबोधन कक्ष्यापि तस्मिन् काले आसीत् । तदर्थं 1797 संवत्सरीय मोडिलेखनमेव आधारस्थानं भवति । नवविद्याकला निधिशालायां मरात्ति-तेलुगु-तमिल्- ग्रन्थ- तुलु-पार्शि-अरभि-दक्षिणभाषा-आङ्गलभाषाद्यक्षरबोधकाचार्याः (क्रमेण- 6+2+2+6+2+2+2+4=26) षड्विंशति संख्याकाः आसन्[8]। तस्मिन् काले अक्षराभ्यास कार्यक्रमः सविजृम्भणं कृतमासीत् । उदाहरणार्थं पश्यामः, तुलजाद्वितीयस्य काले मारुतिराज्ञः दौहित्रस्य अक्षराभ्यासकरणसमये रजतफलकं (15 वराहन् परिमाणनिर्मितं), सुवर्णलेखनी (½ वराहन् परिमाणनिर्मिता) अपि प्रयुक्तं आसीत्[9]।

## नियुक्तलिपिकारः (Appointed Scribe)

एकोजिमहाराजस्य कालात्प्रभृति ग्रन्थलेखनज्ञाः बहवः नियुक्ता आसीत् । तद्यथा

---

1. Kavyamimamsa X Adh - P. No. 50.
2. Tanjai Marathiar Kala Arasiyalum Samudaya Valkkaiyum P. No. 40.
3. Ibid P. No. 40.
4. Ibid P. No. 398.
5. Ibid P. No. 398.
6. Kannada grantha Sampadana Sastra Parichaya P. No. 46.
7. Tanjai Marathiar Kala Arasiyalum Samudaya Valkkaiyum P. No. 240
8. Ibid P. No. 240.
9. Ibid P. No. 25.

अद्र्यङ्केषु महीमितेषु शकभूपाब्देषु पर्यापिते-
ष्वब्दे राक्षसनाम्निमाधवसिताष्टम्यां रवेर्वासरे।
एकोजि क्षितिपाज्ञया कविकृपानाथेन मेधाविना
मुद्राराक्षसनाटकं विलिखितं चाणक्यनीत्युज्ज्वलम्[1] ॥

इत्यनेन मेधावी कृपानाथेन मुद्राराक्षसग्रन्थादि लेखनं विज्ञायते। शरभक्षितीन्द्रस्य द्वितीयस्य समयेऽपि लेखनपरिस्थितिः -

"शरभेन्द्रमहीनेतुराज्ञया बुधसन्नुतः।
रघुवंशमहाकाव्यं सखं भट्टो व्यलीलिखत्[2] ॥

इत्यनेन श्लोकेन ज्ञातुं शक्यते।

**वृत्तिलिपिकारः (Professional Scribe)**

तञ्जापुरराष्ट्रे मातृकालेखनं स्वजीवनार्थं कैश्चित् कृतं इति विज्ञायते।

तद्यथा -

1. ...... राजे श्री अरुणाचलभट्टलिखिकात् तञ्जापुरे प्रभवाः गोपालचक्रपणमेकः उशबू दत्वा सम्पादितम्[3]।
2. ...... श्री अरुणाचलभट्टलेखिकात् तञ्जापुरे प्रभवः गोपालचक्रपणं दत्वा सम्पादितम्[4]।
3. शेषभट्टसुधीपुत्र बालंभट्टेन धीमता।
द्रव्यैः सम्पादितमिदं जगज्ज्ञानातु पुस्तकम्[5] ॥ इति।

मरात्तिराज्ञां राज्यभारसमयात्पूर्वं विजयनगरप्रतिनिधयः तञ्जापुरं पालनं अकुर्वन्। तेष्वन्यतमः विजयराघवः। तस्य प्रशासनकाले गोपालचक्राह्वयं नाणकं प्रकटितमासीत्। तं गोपालचक्रनामकं नाणकं मातृकायै दत्वा स्वीकृतं इत्युल्लेखनात् ग्रन्थलेखनं कृत्वा स्वस्वजीवनं यापयन्ति केचिज्जनाः इति सुस्पष्टम्। ते वृत्तिलिपिकाराः।

---

1. D. C. Vol. VIII - P. No. 3469 Mudrarakshasa Paper Mss.
2. D. C. Vol. VI - P. No. 2436 Raghuvamsa Paper Mss.
3. D. C. Vol. XV - P. No. 6454 Mahabharata Paper Mss.
4. D. C. Vol. XV - P. No. 6456 Mudrarakshasa Paper Mss.
5. D. C. Vol. XI P. No. 4787 Akhyatavadatippana Paper Mss.

**परोपकारलिपिकारः (Amatuer Scribe)**

मातृकालेखनं तु स्वस्य परस्यापि प्रयोजनाय क्रियते। इष्टदेवता - कुलदेवता - गुरुप्रीत्यै वापि कर्मेदं स्वीक्रियते ।

स्वार्थपरार्थाययोगि मातृकालेखनस्वरूपं "शके 1617 (+ 78= 1695) विभवनाम संवत्सर ज्येष्टशुद्धपौर्णिमामङ्गलवासरे तञ्जापुर्यां नागोजिपण्डितेन लिखितं, स्वार्थं परार्थं[1] च" इत्यनेन विज्ञायते। इष्टदेवताप्रीत्यर्थं, गुरु प्रीत्यर्थं च लेखनं विबुधेन्द्रसूनुना लिखितकौमुदी ग्रन्थात् ज्ञायते। तद्यथा -

मासे भाद्रपदे तिथौ प्रतिपदि क्रोधाख्य संवत्सरे
सच्छब्दामृतवर्षितर्णी कुवलयानन्दप्रदां कौमुदीम् ।
शब्दज्ञानतमोपहां मुररिपोः प्रालेलिखत्प्रीतये शेषाख्यो
विबुधेन्द्रदेशिकमणेः सूनुः गुरुप्रीतये[2] ॥

विकारिसंवत्सरीय नभस्यमासि अष्टमी सोमवासरे ।
तञ्जानगर्यां इदमुपनिषद्ग्रन्थं शिवप्रीत्यर्थं लिखितम्[3] ॥

एवं कुलदेवताप्रीत्यै लिखितो ग्रन्थः -

अनेन प्रीयतां देवान् भगवान्जानकीपतिः ।
श्रीरामचन्द्रः पूर्वेषां अस्माकं कुलदैवतम् ॥

इत्यनेन प्रसन्नराघवग्रन्थान्ते विद्यमानश्लोकेनानुमीयते । एवं रीत्या कृताग्रन्थाः पुरातनकाले परेषां दानाय परस्परप्रीतिवर्धनाय चोपयुक्ताः ।

तदपि-

"राक्षसभुवनाकरस्य कमलाकरस्य सूनुना रामेण धारादत्तपूर्वकं गृहीतमिदं पुस्तकं[4]", "दोरो जगन्नाथस्येदं पुस्तकं, इदं पुस्तकं प्रीतिस्नेहाभ्यां जम्बुनाथाय तेन दत्तम्[5]" इति तैर्दत्तमातृ-कान्तभागलेखनात् अवगन्तुं शक्यते ।

---

1. D. C. Vol. VIII P. No. 3699 - Prasannaraghava Paper Mss.
2. D. C. Vol. X P. No. 4179 - Siddhanta Kaumudi Paper Mss.
3. D. C. Vol. II P. No. 701 - Kalangnirudropanishad Paper Mss.
4. D. C. Vol. I P. No. 277-278 Rigvedapadapatha Paper Mss.
5. D. C. Vol. I P. No. 4787 „ Paper Mss.

एवं ग्रन्थलेखकानां विदुषां चाश्रयभूमिः तञ्जपुरीति निस्सन्देहं वक्तुं शक्यते ।

"श्रीमत्कवेरजातीरं विद्वद्वृन्दोपशोभितम् ।
अत्युत्तमशिवक्षेत्र विष्ण्वादि स्थानमस्ति हि ॥

तत्र तञ्जापुरं नाम राजास्थानमनुत्तमम् ।
राजानः प्रथितास्तत्र भोसलीयान्ववायजाः ॥

तेषु राजा महानासीत् शरभेन्द्रस्सुधार्मिकः ।
तस्य पुत्रो महानस्ति श्रीशिवाजिमहीपतिः ॥

नियोजयामास बुधान् लोकानां हितकाम्यया ।
रच्यन्तां बहवो ग्रन्थाः नानाशास्त्रार्थसंग्रहाः ॥

इति श्रुत्वा वचतस्य कुर्वन्ति विबुधा मुदा ।
केचिद्व्याकरणेऽकुर्वन्केचिन्न्याये तथा परे ॥

वैद्यशास्त्रे तथा चक्रुः मन्त्रशास्त्रेषु केचन ।
एवं कुर्वत्सु विद्वत्सु शाहजीन्द्रपुरे वसन्[1] ॥

इत्यनेन महत्कार्येण लेखकग्रन्थानां बाहुल्यं सञ्जातम् । लेखनं कृतानां ग्रन्थानां तथा पुस्तकानां च प्रतिष्ठाविधिः अग्निपुराणे सुवर्णितमस्ति[2] । प्रतिष्ठालेखनादि प्रकारः -

पुस्तकानां प्रतिष्ठां च वक्ष्ये लिखनतद्विधिम् ।
स्वस्तिके मण्डलेभ्यर्च्य शरयन्त्रासने स्थितम् ॥

लेखनं च लिखितं पुस्तं गुरुर्विद्यां हरिं यजेत् ।
यजमानो गुरुविद्यां हरिं लिपिकृतं नरम् ॥

प्राङ्मुखः पद्मिनीं ध्यायेल्लिखित्वा श्लोकपञ्चकम् ।
रौप्यस्थ मष्या हेम्न्या च लेखिन्या नागराक्षरम् (वराक्षरम् ?) ॥

ब्राह्मणान्भोज्येच्छक्त्या शक्त्या दद्याश्च दक्षिणान् ।
गुरुं विद्यां हरिं प्राच्यर्य पुराणादि लिखेन्नरः ॥

---

1. D. C. Vol. IV - P. No. 1673&1674 - Bodhayanasrauta Sutra Vyakhya - Paper Mss.

2. Agnipurana P. No. 79.

पूर्ववन्मण्डलाद्यैश्च ऐशान्यां भद्रपीठके ।
दर्पणे पुस्तकं दृष्ट्वा सेचयेत् पूर्ववत् घटैः ॥

नेत्रोन्मीलनकं कृत्वा शय्यायां तु न्यसेन्नरः ।
न्यसेत्तु पौरुषं सूक्तं वेदाद्यं तत्र पुस्तके ॥

कृत्वा सजीविकरणं प्राच्र्य हुत्वा चरुं ततः ।
गेहे देवालयादौ तु पुस्तकं स्थाप्य पूजयेत् ॥

वस्त्रादि वेष्ठितं पाठात् आदावन्ते समर्चयेत् ।
जगच्छान्तिं चावधार्य पुस्तकं वाचयेन्नरः ॥

अध्यायमेकं कुम्भाद्भिः यजमानादि सेचयेत् ।
द्विजाय पुस्तकं दत्वा फलस्यान्तो न विद्यते ॥

त्रीण्याहुरतिदानानि गावः पृथ्वीसरस्वती ।
नरकादुद्धरन्त्योव जपावापन दोहनात् ॥

विद्यादानफलं दत्वा मष्यात्तं पत्रसञ्चयम् ।
यावत्तु पत्रसंख्यानां अक्षराणां तथानघ ॥

तावद्वर्षसहस्राणि विष्णुलोके महीयते ।
पञ्चरात्रं पुराणानि भारतानि ददन्नरः ॥

कुलैकविंशमुद्धृत्य परे तत्वे तु लीयते ।

इत्येवं त्रिषष्टितमोऽध्याये अग्निपुराणे उक्तं दृश्यते[1] । अनेन पुस्तककरणानन्तरं क्रियमाणप्रतिष्ठाविधिः, पुस्तलेखन-वाचन-प्रकाराः सूष्टू ज्ञायते । एवं मातृका पुस्तकं वा करणानन्तरं तत्संरक्षणं बहुक्लिष्टकरं भवति। निक्षेपविक्रयो दानं देशत्यागोऽल्पजीविता । त्रुटिको वह्नि अम्भश्च प्रबन्धोच्छेद हेतवः ॥ इति काव्यमीमासायां ग्रन्थनाशनहेतवः उक्ताः[2] । ग्रन्थकर्तुः आकुलता रोषोपप्लवश्च प्रबन्धविनाशकारणानि[3] इति तस्मिन् ग्रन्थैव प्रतिपादितम् । परिसरमालिन्येन वा

1. Agnipurana P. No. 79.
2. Kavyamimamsa Adh. X - P. No. 53.
3. Ibid - P. No. 53.

पूर्वोक्तकारणाद्वा नाशान्तःपाति देवालयादीनां जीर्णोद्धारणे "जीर्णं जिनगृहं बिम्बं पुस्तकं श्राद्धमेव वा।" उद्धार्य स्थापनं पूर्वपुण्यतोऽधिकमुच्यते[1] ॥ इत्येवं रीत्या पूर्वैः कृतपुण्यात् अत्यधिकं फलं दास्यति इति द्योत्यते। प्रायशः ग्रन्थान् "उदकानलचोरभ्यः मूषिकेभ्यस्तथैव च"। दुःखेन लिखितं राजन्यत्नेन परिपालयेत्[2] । इत्यनेन जलाग्निचोरमूषिकादिभ्यः सम्यग्परिरक्षणं कर्तव्यं इति ग्रन्थलिपिकारेण कृतप्रार्थनात् ज्ञातुं शक्यते। चोरेणापहृतस्य ग्रन्थस्य स्थितिः कीदृशीति ज्ञानमपि एकस्यां मातृकायां दत्तविषयेण विज्ञायते। तत् "इदं पुस्तकं शिवभट्टलाण्डगेन मुषितम्। अत एव विक्रीतं च" This was stolen by sivabhatta landage and when the owner found it, it was sold to the person who stole it, we find after the colophon[3], एवं पुस्तकस्यापि तस्करभयं जायते । एतादृश परिस्थितौ पुस्तकसंरक्षणाय सदा यत्नः कर्तव्येति सूचनं संरक्षणोपायश्चश्लोकेनानेन विज्ञायते ।

सम्पोष्यं सदपत्यवत्परकरात् रक्ष्यं च सुक्षेत्रवत्
संशोध्यं व्रणिनोऽङ्गवत्प्रतिदिनं वीक्ष्यं च सन्मित्रवत् ।
बध्यं बध्यवदश्लथं नहि न विम्मार्यं हरेर्नामवत्
नैवं सीदति पुस्तकं किल कदाचैतत् गुरूणां वचः[4] ॥

एवं रीत्या पूर्वैः कृतानां मातृकाणां ग्रन्थानां सङ्कलनं, संरक्षणं च यावचछकयं कुर्मेति दीक्षां स्वीकर्तव्येत्युक्त्वा नीरक्षीरांबु न्यायेन असाराग्रहणरूपं सारग्रहणं कुर्वन्त्विति प्रार्थ्य विरमामि।

**शुभम्**

1. Kannada grantha Sampatana Sastra - P. No. 5.
2. D. C. Vol. XV P. No. 6825 - Gayamahatmya Paper Mss.
3. D. C. Vol. VI P. No. 2560 - Naishadha Paper Mss.
4. D. C. Vol. I - P. No. 22 - Rgveda Samhita Paper Mss. & Vol. XV 6468-Mahabharata Vyakhya Paper Mss.

8

# SELECT BIBLIOGRAPHY


1. Kannada Visvakosa

2. Thanjavur Sarasvati Mahal Jl. No. 40/1992

3. Kannada Grantha Sampadana Sastra
   By Dr. M.M. Kalaburgi
   Samaja Pustakalaya
   Dharwad, year-1995

4. Kavyamimamsa
   Edited by Mr. C. D. Dalal, M. A.,
   &
   Pandit R. A. Sastry,
   Oriental Institute, Barada, year-1934

5. Tanjai Marattiyarkala Arasiyalum Samudaya Valkkaiyum,
   K. M. Venkataramaih
   Tamil University,
   Thanjavur. Year-1984

6. Descriptive Catalogue of the Sanskrit Manuscripts
   By Director, T. M. S. S. M. Library, Thanjavur.

7. Agnipurana
   By Harinarayana Apte, Pune
   Anandasrama Printing Works - 1900

8. Grantha Sampadana Sastra parichaya
   By Sitaram Jahirdar, M. A.,
   Kannada Sahitya Sangha,
   Rangampet((Surapura)
   year-1978

# FORM - IV

**(See Rule 8)**



| | | |
|---|---|---|
| 1. | Place of Publication | Thanjavur |
| 2. | Periodicity of its Publication | Four issues a year |
| 3. | Printer's Name | T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009 |
| | Nationality | Indian |
| | Address | T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009 |
| 4. | Publisher's Name | C. VIJAYARAJ KUMAR, I. A. S., District Collector and Director, T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009 |
| | Nationality | Indian |
| | Address | Thanjavur Maharaja Serfoji's Sarasvati Mahal Library Society, Thanjavur - 613 009 |
| 5. | Editor's Name | Sami. Sivagnanam, M. A., |
| | Nationality | Indian |
| | Address | Sami. Sivagnanam, M. A., Administrative Officer, T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009 |
| 6. | Name and Address of Individual who owns the newspaper and partners or shareholders holding more than one percent of the total capital. | T. M. S. S. M. Library Society, Thanjavur - 613 009 |

I, C. VIJAYARAJ KUMAR, hereby declare that the particulars given above are true to the best of my knowledge and belief.

**C. VIJAYARAJ KUMAR,** I. A. S.,

Date : 6-6-2007

District Collector and Director,
Sarasvati Mahal Library,
Thanjavur - 613 009